# 2019

# அளவை அலம்

## අළවෙ අලම්

### தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்

ජාතික කියවීමේ මාසය





## அலம் – 2

අලම්-2

## தேசிய வாசிப்பு மாதம்
## ජාතික කියවීමේ මාසය
## National Reading Month








**பொது நூலகம் – அளவெட்டி**

**මහජන පුස්තකාලය - අලවෙඩ්ඩි**

**Public Library – Alaveddy**

# தேசிய வாசிப்பு மாதம் - 2019

# ජාතික කියවීමේ මාසය - 2019

# National Reading Month – 2019

''வாசிப்புப் பழக்கத்தை சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்''

பொதுநூலகம், அளவெட்டி

මහජන පුස්තකාලය - අලවෙඩ්ඩි

Public Library – Alaveddy

# மலர் விபரம்


| | | |
|---|---|---|
| மலர் | : | "அளவை அலம் - 02"<br>2019 தேசிய வாசிப்பு மாதச் சிறப்பு மலர் இதழ் - 02 |
| வெளியீடு | : | மலர்க்குழு, பொது நூலகம்,<br>வலிகாமம் வடக்கு பிரதேச சபை,<br>அளவெட்டி. |
| அச்சுப்பதிப்பு | : | துர்க்கா மல்ரி சென்டர், மல்லாகம். |
| வருடம் | : | 2019 கார்த்திகை |
| இதழ் | : | 02 |
| பக்கம் | : | vi + 45 |
| தாள் அளவு | : | B5 |
| மலர்க்குழு | : | வாசகர் வட்டம்,<br>நூலகர், நூலகஉத்தியோகத்தர்கள். |
| ISSN | : | 2659 2134 |



தொடர்புகளுக்கு

தொலைபேசி இலக்கம் :- 0212243699

முகநூல் :- Alavai Noolagam

மின்னஞ்சல் :- publiclibraryalaveddy@gmail.com

முகவரி :- பொதுநூலகம் வலிவடக்குப் பிரதேசசபை

டச்சுவீதி, அளவெட்டி

## அலம் 02 இன் உள்ளே......

1. அளவை அலம் நூல் வாயிலில்(முன்னுரை): ..........................................iv
திருமதி.த.போல்சுரேஸ் ( நூலகர், பொதுநூலகம். அளவெட்டி.)

2. ஆசிச் செய்தி: ........................................................................................ vi

➤ அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் பிரதமகுருக்களின் ஆசிச் செய்தி

➤ அருட்திரு யூட் சுதர்ஸன் மகேந்திரன் (முதல்வர், இறையியல் கல்லூரி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை மருதனார்மடம்.)

3. வாழ்த்துச் செய்தி: ...................................................................

➤ பிரதேச செயலாளர் திரு.ச.சிவஸ்ரீ..............................................ix

➤ கௌரவ சோமசுந்தரம் சுகிர்தன் -தவிசாளர்,வலிகாமம் வடக்கு பிரதேச சபை............................................................ xi

➤ திரு. இ. பகீரதன் - செயலாளர் ,வலிகாமம் வடக்கு பிரதேசசபை.................................................................. xii

➤ திரு. தி. தியாகச்சந்திரன் - பொறுப்பதிகாரி, வலிகாமம் வடக்கு பிரதேச சபை. மல்லாகம்........................................... xii

4. அளவையின் ஆலயங்கள்: ..............................................................

➤ மல்லாகம் பழம்பதி விநாயகர் கோவில் தலவரலாறு – ச.சஜீவன்

➤ குளமங்கால் புனித பிரான்சிஸ்கு சவேரியர் திருச்சபை வரலாறு.

5. பாடசாலை வரலாறு : ........................................................................
யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம்

6. கிராமங்களைப் பேறாக்கும் கீர்த்திமிகு சேவையில் புராதனமானது அளவெட்டி பிரதான அஞ்சல் அலுவலகம் கே.எஸ்.சிவஞானராஜா

7. தமிழர் தம் வாழ்வியலான சித்த மருத்துவமும் அளவையூரும்

8. கொக்குவில் பொதுநூலகம் : வரலாறும் அண்மைய செயற்பாடுகளும்

9. கவிதை : ........................................................................................
நூலகம் என் அகம்

10. வாசிப்புப் பழக்கத்தை சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம் :.........

11. வாழும் கலைஞர் அறிமுகம் :..................................................................

12. நேர்காணல் : ............................................................................................

13. மாணவர் ஆக்கங்கள்: ......................................................................

- தேசிய வாசிப்பு மாதம் 2018இல் தரம் 03 மாணவர்களுக்கான குழுப்பாடலில் முதலாம் இடம் பெற்ற பாடல் - நூலும் நூலகமும்.
- தேசிய வாசிப்பு மாதம் 2018இல் தரம் 09 மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை - இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு.
- தேசிய வாசிப்பு மாதம் 2018இல் தரம் 12 மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை- இனங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு.

14. வாசகர் ஆக்கங்கள்: ..........................................................................

- தேசிய வாசிப்பு மாதம் 2018இல் வாசகர்களுக்கான போட்டியில் முதலாம் இடம் பெற்ற கவிதை- நூலும் நூலகமும்.
- தேசிய வாசிப்பு மாதம் 2018இல் வாசகர்களுக்கான போட்டியில் முதலாம் இடம் பெற்ற கட்டுரை- நூலும் நூலகமும்.

15. அளவெட்டியில் நாடகக்கலை : ....................................................

16. வில்லிசை - “வீட்டு நூலகம்” : ..................................................

# அளவை அலம் 02 நூல் வாயிலில்



வலிகாமம் வடக்கு பிரதேச சபை மல்லாகம் உப அலுவலகத்தின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அளவெட்டி பொது நூலகத்தினராகிய நாம் அளவை அலம் 02 எனும் சஞ்சிகையை வெளியீடு செய்வதில் மட்டற்ற மகிழ்வடைகின்றோம்.

இன்றைய காலத்தில் நூலக சேவையானது கோட்பாட்டு ரீதியாகவும், செயற்பாட்டு ரீதியாகவும் மாற்றமடைந்து வந்துள்ளது. பாடசாலை மாணவர்களுக்குக் கல்விக்கூடமாகவும் இளைஞர்களுக்குத் தொழில் உலகமாகவும், அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைத் தகவல்களை வழங்கும் பொதுசனப் பல்கலைக்கழகமாகவும், கலைத்துறையை வளரச் செய்வதன் மூலம் கலாசார விழுமியங்களை வளர்க்கும் இடமாகவும் நூலகம் செயற்படுகின்றது. ஆரம்பத்தில் நூலகர் என்பவர் தகவல் வழிகாட்டி எனவும், பின்னர் தகவல் விஞ்ஞானி எனவும், தற்போது தகவல் சந்தைப்படுத்துநர் எனவும் அழைக்கப்படுகின்றார். சரியான தகவல்கள் எதிர்காலச் சந்ததிகட்கு கிடைக்க வேண்டும். அதை நோக்கிய வளர்ச்சிப் பணியாக வெளிவருவதே அளவை அலம் 02 எனும் இச் சஞ்சிகை. தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி வெளியிடப்படும் இச் சஞ்சிகையில் கட்டுரைகள், கவிதைகள், நேர்காணல், அளவெட்டி மற்றும் மல்லாகத்தில் அமைந்துள்ள ஆலய வரலாறுகள், பாடசாலை வரலாறுகள் என்பன அடங்கலாக எதிர்கால சந்ததி அறிந்து கொள்ளக் கூடிய விதமாக அமையும் பல்சுவைத் தொகுப்பாகவே இச் சஞ்சிகை அமைகிறது.

சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தந்தோர், உற்சாகம் தந்து உதவிகள் புரிந்த மலர்க்குழுவினர், வாசகர் வட்ட உறுப்பினர்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், பொறுப்பதிகாரி, நூலக உத்தியோகத்தர்கள், உப அலுவலக உத்தியோகத்தர்கள், விளம்பரதாரர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். மேலும் மிகவும் நேர்த்தியாகவும், அழகாகவும் இதனை அச்சிட்டுத் தந்த துர்க்கா மல்ரி சென்ரருக்கும் எமது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.த.போல்சுரேஸ்,
நூலகர்,
வலிகாமம் வடக்கு பிரதேசசபை,
பொது நூலகம்,
அளவெட்டி.

## அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் குருக்களின் ஆசிச் செய்தி



அளவெட்டியைச் சார்ந்த பொது நூலகத்தினரின் பெரு முயற்சியினால் "அளவை அலம் - 02" என்ற சஞ்சிகையை வெளியிடுகின்றார்கள். இவர்களுடைய முயற்சியில் தொடர்ந்தும் சமயம், சமூகம்சார் விடயங்கள், பொது அறிவுசார் விடயங்கள், உடற்கல்வி, யோகா, வைத்தியம், கணித விஞ்ஞான சாஸ்திரம், கிராமம் சார்ந்த விடயங்கள் அமைவாக வெளிவர வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்பது பெரியோர் வாக்கு. மேன்மேலும் இவர்களுடைய முயற்சி மேன்மை அடைய எமது நல் ஆசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**"லோகா சுகினோ பவந்து"**

**"உலகில் நன்மைகள் பெருகட்டும்"**

சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக்குருக்கள்,
ஆதீனகர்த்தாவும் சிவாச்சாரியாரும்,
ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில்,
மருதனார்மடம்.

## ஆசிச்செய்தி

*ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயரால் வாழ்த்துக்கள்,*



அளவெட்டி பிரதேசசபையினரின் நூலகம் வெளியிடும் வருடாந்தச் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்கக் கேட்கப்பட்டதையிட்டு பெருமகிழ்வு அடைகின்றேன். அளவெட்டி பல சிறப்பம்சங்கள் நிறைந்த கிராமம். சிறந்த கல்விமான்களும், இசைக்கலைஞர்களும், சித்த மருத்துவர்களும், கண் மருத்துவர்களும் வாழ்ந்த பெருமைமிகு கிராமம் இது. ஒரு கிறிஸ்தவ மதகுருவாக நான் அளவெட்டியில் பணியாற்றிய போது காலப்பகுதியில் எம்மதத்தினராயினும் என்னை அன்பாய் இணைத்துக் கொண்ட ஒரு கிராமமாகும்.

எவ்வசதிகளுமற்ற போர்க்காலத்திலேயே பத்திரிகைகளைக் கடன்பட்டு வாசித்த நாம் தற்போது இலத்திரனியல் நூலகங்களும் வந்து, கைகளுக்குள் அனைத்தும் கிடைத்துள்ள போது 'வாசிப்பைக் குறைத்து விட்டோமோ' என்று அஞ்சுகிறேன். நல்ல நூல்கள் வாசிப்பதற்கு கிடைக்காமல் சிறு சஞ்சிகைகள் வாசிக்கக் கிடைத்தாலே போதும் என்று மகிழ்ந்த காலம் ஒன்றிருந்தது.

உலகெங்கும் நூலக வசதிகள் எண்ணிப்பார்க்க முடியாதளவில் வளர்ந்துவிட்ட நிலையில் நாம் நூலக வசதிகளை ஏற்படுத்தக் கடும் பிரயத்தனம் செய்கின்றோம். அவ்வகையில் அளவெட்டி பிரதேச சபையின் இந்நூலகமானது இப்பகுதி மக்களுக்கும் குறிப்பாக பாடசாலை மாணவர்களுக்கும் பணியாற்ற முனைப்புக் காட்டிவருகின்றது. உள்வரும் வாசகர்களை வசீகரிக்கத்தக்க வகையில் நூலகம் மெருகேறி வருவதும், புதிய நூல்கள் அணிவகுத்திருப்பதும் நூலகம் வளர்ச்சிப்பாதையில் நடப்பதைக் காட்டிநிற்கின்றது. வாசிப்பு பழக்கத்தைப் பெருக்க நூலகம் எடுத்துவரும் முயற்சிகளும், ஏனைய சமூக நிகழ்ச்சித்திட்டங்களும் பாராட்டுக்குரியவை. இலங்கை அரசால் இந்நூலகம் சிறந்த நூலகங்களில் ஒன்றாக 2017ம் ஆண்டில் தெரிவுசெய்யப்பட்டமையும் அதன் வளர்ச்சிப் பாதையை விபரித்து நிற்கின்றது.

நூலகங்கள் கிராமங்களில் பெருகுதல் வேண்டும்.அதனால் கற்றோர் எனும் ஒரு வர்க்கமும் கல்லாதோர் என்ற வர்க்கமுமாயுள்ள சமூக ஏற்றத்தாழ்வு மாறிவிடும். அனைவரும் கற்கும் வாய்ப்புண்டாகும். நூல்களை வாசிப்போர் பெருகின், நூல்களை எழுதுவோர் மற்றும் வெளியிடுவோர் பெருகுவர். இதனால் நம் நாடு வளரும். இலத்திரனியல் நூல்களைப் பாவிக்கமுடியாத நிலையிலுள்ள முன்னைய சந்ததியினருக்கு நூல்கள் கைக்கெட்டும்.

அளவெட்டி பிரதேச சபையின் நூலகத்தினைப் பாராட்டுகின்றேன். இது ஓர் சிறந்த சமூக நூலகமாக மேலும் வளர்ந்து வாசிப்பு எனும் மானிடத்தின் ஆன்ம பசியை கிளறிவிட்டு, அதற்கு விருந்தூட்டட்டும். கிராமிய அபிவிருத்தியில் கிராமிய சமூக நூலகங்களின் பங்களிப்பு பாரியது என்ற உண்மையை நாம் அனைவரும் மறவாமல் இந்நூலகத்தினை மேலும் சிறப்பாக்க உழைக்கும் அனைவருக்கும் எனது அன்பு நிறை வாழ்த்துகளும் இறையாசியும் உண்டாகட்டும்.

அருட்திரு யூட் சுதர்சன் மகேந்திரன்
முதல்வர்,
இறையியல் கல்லூரி,
மருதனார்மடம்.
அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை.

## வலிவடக்கு பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



வலிவடக்கு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட மாபெருங்கிராமமான அளவெட்டிக் கிராமத்திலே அமைந்துள்ள அளவெட்டிப் பொது நூலகமானது தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வெளியிடுகின்ற "அளவை அலம் - 2" மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்வடைகிறேன்.

"வாசிப்பதால் மனிதன் பூரணம் அடைகிறான்" என ஆங்கில தத்துவ மேதையாகிய சேர்.பிரான்சிஸ் பேக்கன் அவர்கள் வாசிப்பின் மகத்துவத்தை சிறப்பித்துக் கூறியுள்ளார். வாழ்க்கை முழுவதும் ஒரு மனிதன் தினம் தினம் புதுப்புது விடயங்களைக் கற்றுக்கொண்டேயிருக்கிறான். வாசிப்புப் பழக்கமானது மொழி விருத்தி, அறிவு விருத்தி என்பவற்றைத் தருவதோடு சிறந்த பொழுதுபோக்கு அம்சமாக மட்டுமல்லாது உள விருத்திக்கு சிறந்ததொரு மருந்தாகவும் அமைகிறது.

வாசிப்பையும், அறிவையும் மேம்படுத்துவதில் நூலகங்களின் பங்கு அளப்பெரியது. அவ்வகையில் இந்த நூலகமானது பொது மக்களுக்கான அறிவுப்பசியை போக்குவதில் முக்கியபங்கு வகிப்பதோடு குறிப்பாக சிறுவர்கள் மற்றும் மாணவர்களுக்கான சிறப்புப் பிரிவுகளை அமைத்து நல் வாசகர் குழாமினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாசிப்புப் பழக்கம் அருகிவரும் இக்காலகட்டத்தில் வீணாக பொழுதினைப்போக்காது

**"கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு**
**மாடல்ல மற்றை யவை"**

என்ற வள்ளுவரின் வாக்கிற்கமைய அழிவில்லாத சிறந்த கல்விச் செல்வத்தைப் பெருக்கி வாசிப்பு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த சிறந்த முறையில் செயற்பட்டுவரும் நூலகர், உத்தியோகத்தர்களுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு அளவெட்டி பொது நூலகமானது தொடர்ந்தும் தனது பணியினை மென்மேலும் சிறப்புற ஆற்றுவதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.ச.சிவஸ்ரீ
பிரதேச செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச செயலகம்
தெல்லிப்பழை

## கௌரவ தவிசாளர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



ஆண்டாண்டு காலமாய் அளவை மண்ணில் அறிவைப்புகட்டி இன்றும் வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் கீழ் இயங்கிவரும் அளவெட்டி பொது நூலகம் கடந்த ஆண்டைப் போன்று, 2019ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி "அளவை அலம் - 02" எனும் சஞ்சிகையை வெளியிடுகின்றது. அவர்களது விடா முயற்சியைப் பாராட்டுகின்றேன். அதற்கான வாழ்த்துச் செய்தி வழங்குவதிலும் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

அளவெட்டி மற்றும் மல்லாகம் வாழ் எதிர்கால சந்ததியினர் நிகழ்கால வரலாறு பற்றிய சரியான தகவலைப் பெற்றுக் கொள்ள இச்சஞ்சிகை உதவிடும் என நம்புகின்றேன். ஒரு மனிதன் தன் கருத்துக்களையும், எண்ணங்களையும் எழுத்தாற்றல்கள் மூலம் வெளிப்படுத்துகின்றான். இது ஒரு மனிதனுடைய அடிப்படைச் சுதந்திரமாக உள்ளது. அவ்வகையில் வாசகர்கள் ஒவ்வொருவரினதும் சுய கருத்துக்களை முன்வைப்பதற்கும், அவற்றை ஊக்குவிப்பதற்குமான சிறந்த களமாக இச்சஞ்சிகை அமையும் என்பது எனது நம்பிக்கை.

"வாசிப்புப் பழக்கத்தைச் சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்" என்ற 2019ம் ஆண்டிற்கான மகுட வாக்கியத்திற்கு அமைவாக இச்சஞ்சிகையை வெளியிட ஊக்கம் கொடுத்த அளவெட்டி பொது நூலகர், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், மல்லாக உப அலுவலக உத்தியோகத்தர்கள், சஞ்சிகை வெளியீட்டு குழுவினருக்கும் எனது பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன். பல்வேறு சிறப்புக்களுடன் இவ்வாண்டும் புதிதோர் பாதையில் நிமிர்ந்து நிற்கும் அளவெட்டி பொது நூலகம் மேலும் பல்லாண்டு காலம் பெருவிருட்சமாக மிளிர வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திப்பதோடு எனது பரிபூரண வாழ்த்துக்களையும் மகிழ்ச்சியாக வழங்குகின்றேன்.

***"வாசிக்காத நாட்கள் எல்லாம் சுவாசிக்காத நாட்களாகும்"***

கௌரவ சோமசுந்தரம் சுகிர்தன்.

தவிசாளர்,

வலிகாமம் வடக்கு பிரதேச சபை,

காங்கேசன்துறை.

## சபைச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி.




பல் கலையிலும், பண்பாட்டிலும் என்றும்சிறப்புடன் விளங்கும் அளவையூரில் தனக்கெனச் சிறப்பானதொரு இடத்தைக் கொண்டுள்ள அளவெட்டி பொது நூலகத்தால் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கடந்த வருடத்தைப் போன்று இந்த வருடமும் வெளியிடப்படும் "அளவை அலம் - 02" எனும் சஞ்சிகைக்கு வாழ்த்து கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

அளவெட்டி பொது நூலகமானது 1971 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது பல படி நிலை வளர்ச்சிகளினூடாக பெரு வளர்ச்சியடைந்து பல செயற்பாடுகளையும் முன்னெடுத்துச் செல்கின்றது. குறிப்பாக வாசிப்பு மாதத்தில் சிறுவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக பல்வேறு போட்டிகளை நடாத்தியும் பாடசாலை மட்டத்தில் மாணவர்களின் அறிவுத்திறனை மேம்படுத்தும் பல செயற்பாடுகளை மேற்கொண்டும் வருகின்றது. நூலகத்தில் வாசகர்களின் எண்ணிக்கையும் நூலக வளங்களும் வருடா வருடம் அதிகரித்து செல்கின்றன என அறிகின்றேன். இம் முறையும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்கள், வாசகர்களுக்கான பல போட்டிகளையும்,கண்காட்சிகளையும் அதற்கானவேலைத்திட்டங்களையும் சிறந்த முறையில் முன்னெடுத்து தமது சேவையை சிறப்புற ஆற்றிவரும் அளவெட்டி பொது நூலகத்தின் நூலகர், உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கும் மேலும் இச் சஞ்சிகை சிறப்புற வெளிவருவதற்காகத் தமது பங்களிப்புகளை வழங்கிய வெளியீட்டுக் குழுவுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து இந் நூலகமும் அதன் சேவைகளும் மேன் மேலும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி

திரு.இ.பகீரதன்,
செயலாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை.

## உபஅலுவலகப் பொறுப்பதிகாரியின் வாழ்த்துச் செய்தி



"வாசிப்பதனால் ஒரு மனிதன் பூரணமடைகின்றான்" என்ற வகையில் மனித வாழ்வில் இன்றியமையாததாக வாசிப்புப் பழக்கம் அமைகின்றது. இந்த வகையில் அளவையூர் மக்களுக்கு அறிவை வளர்க்கும் இடமாக வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் மல்லாகம் உப அலுவலக அளவெட்டிப் பொது நூலகம் மிளிர்கின்றது.

பல்வேறு செயற்பாடுகளின் சாதனை வெளிப்பாடாகச் சென்ற வருடம் தேசிய வாசிப்பு மாத விருதினைப் பெற்று புது பொலிவுடன் மிளிரும் இந் நூலகமானது "அளவை அலம்" என்னும் சஞ்சிகையைத் தனது வெளியீடாகத் தொடர்ந்து வெளியிடுவதற்கு வாழ்த்துச் செய்தி தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இச் சஞ்சிகையை வெளியிடப் பெரும் முயற்சியுடன் செயற்பட்டுக் கொண்டிருக்கும் அளவெட்டி பொது நூலக நூலகருக்கும் ஏனைய உதவிகளைப் புரிந்த உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சஞ்சிகை வெளியீட்டுக் குழுவினருக்கும் எனது வாழ்த்துக்கள்.

இதே போன்று மேலும் பல சஞ்சிகைகள் வெளிவந்து வாசிப்புச் சமூகத்தை வழிப்படுத்த வேண்டும் என்று மேன் மேலும் வாழ்த்துகின்றேன்.

நன்றி

திரு.தி.தியாகச்சந்திரன்
பொறுப்பதிகாரி,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
உப அலுவலகம்,
மல்லாகம்



**அமர்ந்திருப்பவர்கள் :-** திருமதி.த.போல்சுரேஸ் - நூலகர், திருமதி.மா.கௌரீசன் - ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர், திரு.தி.தியாகச்சந்திரன் - பொறுப்பதிகாரி, திருமதி.பு.சந்திரசேகரன் - முகாமைத்துவ உதவியாளர்,

**நிற்பவர்கள் :-** திரு.மு.பகீரதன் - ஆயுள்வேத மருந்தாளர், திரு.நா.சந்திரகேசரன் - நூலகபரிசாரகர், திரு.த.றஜிதன் - அலுவலக உதவியாளர், திருமதி.ச.ஜெயபாலன் - மு.உ, திருமதி.ஜெ.கலைச்செல்வி — மு.உ, செல்வி.பு.தர்மிகா — வருமானப்பரிசோதகர், திருமதி.த.சுகத் - முன்பள்ளி ஆசிரியர், திருமதி.கா.ஜெறோம் - மு.உ, செல்வி.சு.சயாரூபி — அபிவிருத்தி உத்தியோகத்தர், திருமதி.ம.தவேந்திரன் - மு.உ, திரு.இ.நாகவேல்ராசா — நூலகத்தொழிலாளி, திரு.பொ.அன்ரன் அல்வினசம் - நூலகத்தொழிலாளி, திரு.அ.ரவிகாந்தன் - வருமானப்பரிசோதகர்

☆ *முகாமைத்துவ உதவியாளர்*

# மல்லாகம் பழம்பதி விநாயகர் கோவில் தலவரலாறு

திரு.சண்முகலிங்கம் சஜீலன்

தெல்லிப்பழை.

யாழ்ப்பாணத்தின் வடபால் 12km தொலைவில் அமைந்துள்ள பழம் பெரும் கிராமமே மல்லாகமாகும். "மல்லர்கமம் அல்லது மல்லர் அகம் என்பது மருவியும் குறுகியும் மல்லாகம் என்று பெயர் பெற்றிருக்கலாம்" என்பர் அறிஞர். பழங்காலந் தொட்டு இன்று வரை இந்நிலப்பரப்பில் கமம் செய்யப்படுவது யாவரும் அறிந்ததே. "மாருதப்புரவீகவல்லியின் படை வீரர்கட்கு கமம் செய்வதற்காக வழங்கப்பட்ட இடமாக இது இருக்கலாம்" என "சிதம்பரபத்தினி" அவர்களால் எழுதப்பட்ட **ஊரும் பேரும் சைவத்திருக்கோயில்களும் வலிகாமம் வடக்கில் ஓர் ஆய்வு** எனும் நூல் கூறுகிறது. தற்போது நகரமயப்பண்புடன் திகழும் மல்லாகப்பிரதேசத்தில் கிராமிய வழிபாட்டம்சங்களும், ஆகம வழிபாட்டம்சங்களும் நிறைந்த பிள்ளையார், அம்பாள், முருகன், வைரவர், வீரபத்திரர், நாகதம்பிரான் போன்ற சைவாலயங்களைக் காணலாம். இது சைவத்தமிழ் அறிஞர் பெருமக்கள் பலரையும் கொண்ட பாரம்பரியப் பிரதேசமாகும்.

சிறப்புமிக்க மல்லாகத்தில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை பிரதான சாலைக்கு அருகாமையில் ஞான முதல்வரான விநாயகப் பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கும் பழம்பதி விநாயகர் ஆலயம் அமைந்துள்ளது.. பழம் கோயில் என்றால் பாரம்பரியம் பேசும் என்பதே ஆலய வரலாற்றின் மகுடவாக்கியமாகும். அநாதியான – என்றுமுள்ள பழம் பொருளாக – இறைவனை சைவசித்தாந்தம் வர்ணிக்கின்றது. எனவே இவ் விநாயகரும் ஆதியிலேயே தோன்றியதால் பழம்பிள்ளையார் எனப் பெயர் பெற்றிருக்கின்றார். ஆரம்பத்தில் "வழிப்போக்கர் வாயிலும் வரும் கருண மொழி பழங்கோயிலானே" என்பதற்கிணங்க பிரதான வீதியோரத்தில் அமைந்துள்ள அரசமரத்தினடியில் தோன்றிய பிள்ளையார் திருவுருவை அடியார்களும், வழிப்போக்கர்களும் வழிபட்டு வந்தனர். பின்னர் 700 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது கி.பி 1300ம் ஆண்டுக்கு சற்று முன்னர் தற்போது ஆலயத்தினை நிர்வகிக்கும் அந்தணர்களின் பரம்பரையைச் சேர்ந்த

மூதாதையர்கள் தற்போது மூலவிக்கிரகம் அமைந்துள்ள இடத்தில் ஓர் சிறு ஆலயம் அமைத்து நித்திய நைமித்தியக் கிரியைகளை நிறைவேற்றி வந்தனர். இவ்வாறு பொது மக்கள், அடியார்கள், அந்தணப்பெருமக்கள் ஆகியோரால் மிகவும் பக்தி சிரத்தையுடன் வழிபடப்பட்டு வந்த இப்பிள்ளையார் ஆலயத்தினை யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்த போத்துக்கேயர்கள் கி.பி 1585ம் ஆண்டளவில் இடித்தழிக்க வந்தபோது கோயிலை அணுகியும் உட்புக முடியாது திகைத்துப் பின்வாங்கினர் எனவும் மூலவிக்கிரகத்தைப் பூசை செய்யும் அந்தணர் கூரையில் செருகி காப்பாற்றினார் என்றும் ஆலய வரலாறு கூறுகின்றது. இதனை இவ்வாதீனப் புலவர் இயற்றிய மல்லைமாநகர் பழம்பிள்ளையார் பன்மணிமாலை என்ற நூல் தெளிவாக விளக்குகின்றது.

பின்னர் ஆங்கிலேயர் ஆட்சியில் மதசுதந்திரம் நிலவிய காலப்பகுதியில் ஆலயம் மீள அமைக்கப்பட்டு வழிபாடு நடைபெற்று வந்தது. பிள்ளையார் ஆலயம் அமைக்கப்பட்டு அநேக ஆண்டுகளின் பின்னர் சிவஸ்ரீ சின்னையர் அவர்களாலும் சுற்றத்தவர்களாலும் அருகே ஓர் திருமுருகன் கோயில் அமைக்கப்பட்டது. இது தற்போது பழம்பதி முருகன் தேவஸ்தானம் என்று அழைக்கப்படுகின்றது. பழம்பிள்ளையார் கோயிலின் பரிவார மூர்த்திகளாக தண்டாயுதபாணி, வைரவர், சந்தான கோபாலர் சந்நிதிகள் நிறுவப்பட்டு நவக்கிரக பீடமும் அமைக்கப்பட்டது. முன்னர் நடைபெற்ற பல கும்பாபிஷேகங்களைத் தொடர்ந்து 1927ம் ஆண்டு ஓர் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து அலங்காரத்திருவிழாக்கள் ஆரம்பிக்கப்பட்டன. 1944ம் ஆண்டு பழம்பிள்ளையார் ஆலயம் முருகன் ஆலயம் ஆகிய இரண்டு ஆலயங்களுக்கும் ஒரே நேரத்தில் கும்பாபிஷேகம் நடைபெற்றதுடன் பிள்ளையாருக்கு கொடிமரம் நிறுவப்பட்டு பெருந்திருவிழாக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

பூசை வழிபாடுகள் காலை, மதியம், மாலை என மூன்று நேரம் நடைபெறுவதுடன் விசேட விழாக்களாக மாதச்சதுர்த்தி, ஆவணிச்சதுர்த்தி, நவராத்திரி, கந்தசஷ்டி, சூரன்போர், திருவெம்பாவை, விநாயக சஷ்டி, மாம்பழத்திருவிழா, பஞ்சமுக அர்ச்சனை, சண்முக அர்ச்சனை, கணபதி ஓமம், சங்காபிஷேகம், இலட்சார்ச்சனை, தைப்பூசம், வைகாசி விசாகம் என்பன நடைபெறுகின்றன. ஆலயத்தின் பெருந்திருவிழாக்கள் ஆவணி

அமாவாசைப்பட்சத்தை இறுதித் தீர்த்தத் தினமாகக் கொண்டு 11 நாட்கள் நடைபெறும். கொடியேற்றம், வேட்டைத் திருவிழா, சப்பறம், தேர், தீர்த்தம், பூங்காவனம், வைரவர் பொங்கல் என்பன விசேட திருவிழாக்களாக அமையும். பெருந்திருவிழாக் காலங்களில் நாதஸ்வர, தவில் இசைக்கச்சேரிகளும், பேரறிஞர்களின் சமயச் சொற்பொழிவுகளும் நடைபெறுவது விசேட அம்சமாகும். வேட்டைத் திருவிழாவில் பிள்ளையார் காளி கோயிலுக்கு எழுந்தருளிச் சென்று வாழை வெட்டி மீண்டும் ஊர்மக்களின் பூரணகும்ப மரியாதைகளுடன் ஊர்வலமாக பிரதானவீதி வழியே கோவிலை வந்தடைவார். 1975, 76, 77ம் ஆண்டுகளில் நடைபெற்ற பிள்ளையார் தேர் உலாவின் போது குஞ்சரக்கன்று (யானை) குடை, ஆலவட்டத்திருக் கோலத்துடன் தேர்வடந்தொட்டு களிற்று நடை நடந்து விழாவை அழகூட்டியது. இன்றும் மனதை விட்டகலாத மாண்புடையதாக உள்ளது. 1986ம் ஆண்டு பழம்பதி முருகன் தேவஸ்தான மகோற்சவ விழாக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து உபயகாரர்கள், மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோரின் பங்களிப்புடன் ஆலய மண்டபங்கள் பல நவீனமயமாக்கப்பட்டன. தேர், சகடைகள், கேடகம், சுவாமி எழுந்தருளும் பல்வகை வாகனங்கள் போன்றன உருவாக்கப்பட்டன. மின் இணைப்பு, நீர்க்குளிர்ச்சிக் குழாய்கள் இணைப்பு காலத்துக்குக் காலம் அமைக்கப்பட்டதுடன் திருப்பணி வேலைகளும் தொடர்ந்து நடைபெற்று வந்தன. 1995 – 96 கால பகுதியில் யாழ் குடா நாட்டில் யுத்த அனர்த்தச் சூழல் ஏற்பட்டிருந்தது. எனினும் ஆலயத்தின் பூசை வழிபாடுகளில் எந்த வித பாதிப்பும் ஏற்படவில்லை. 1997ம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. 2000ம் ஆண்டு சித்திரத்தேர் செய்யப்பட்டது. 2001ம் ஆண்டு சிவகாமி அம்பாள் சமேத நடராஜர் சந்நிதி கட்டப்பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றதுடன் தேர்த் தரிப்பிடமும் திறந்து வைக்கப்பட்டது. 2014ம் ஆண்டு பழம்பதி முருகன் ஆலயக் கும்பாபிஷேகமும் பழம்பதி பிள்ளையார் ஆலயக் கும்பாபிஷேகம் 2015இலும் நடைபெற்றன.


தற்போதய ஆலய அமைப்பில் மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், ஸ்தம்பமண்டபம், முருகன் ஆலயம் ஆகியவற்றுடன் மடப்பள்ளியறை, களஞ்சிய அறை, காரியாலயம், யாகசாலை, மணிக்கோபுரம், 1816ம் ஆண்டு கட்டப்பட்ட துவிதள இராஜகோபுரம், முன்மணிமண்டபம்

ஆகிய அமைப்புக்கள் உள்ளன. வசந்த மண்டபம், உட்பிரகாரச்சுற்று வீதி என்பன இரு ஆலயத்திற்கும் பொதுவாய் அமைவதுடன் திருமஞ்சனக்கிணறுகள் தனித்தனியாக அமைந்துள்ளது. பரிவாரசந்நிதிகளாக தண்டாயுதபாணி, வைரவர், சந்தானகோபாலர், நவக்கிரகபீடம், சிவகாமிஅம்பாள் சமேத நடராஜர்சந்நிதி, சண்டேஸ்வரர், கருமாரிஅம்மன், அபிசேகவிநாயகர் ஆகியவை அமைந்துள்ளன. கருமாரிஅம்மன் சந்நிதி 2015ம் ஆண்டு உட்பிரகாரத்தின் மேற்குப் பக்கத்தில் அபிஷேக விநாயகர் விக்கிரகம் அமைக்கப்பட்டது. இவ்விநாயகருக்கு அடியார்கள் தங்கள் கைகளால் அபிஷேகம் செய்து கொள்ளலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

தலவிருட்சமாக அரசமரம் உள்ளது. வேம்பு,அரசு, வன்னி, மகிழ் ஆகியனவும் ஆலயத்தை அணி செய்கின்ற ஏனைய விருட்சங்களாகும். முற்காலத்தில் கோபுரத்திற்கு பக்கத்தில் நின்ற ஓர் மகிழமரம் முன்மண்டபம் அமைப்பதற்காக அகற்றப்பட்டது. வடக்குப் பக்கத்தில் நின்ற ஓர் அரசமரம் கடந்த கால அனர்த்தத்தினால் அழிவு அடைந்து விட்டது. ஆலயத்திற்கு தென்கிழக்குத் திசையில் குருக்கள் தங்குமடமும், கிணறும் உள்ளது. முன்னர் கேணியாகவிருந்த நீர் நிலையே தற்போது கிணறாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது. ஆலய நிலப்பரப்பின் எல்லைகளாக வடக்கே நீதிமன்ற வீதியும், கிழக்கே காங்கேசன்துறை – யாழ்நகர் பெருவீதியும், தெற்கே ஆலை வீதியும், மேற்கே ஒழுங்கையும் உள்ளன.

ஆலயத்தில் நடைபெறும் புராண படனம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். திருவாதவூரடிகள் புராணம், கந்த புராணம், விநாயக புராணம், பிள்ளையார் கதை என்பன படிக்கப்பட்டு பயன் சொல்லுதல் நடைபெறும். பழம்பதி எனச்சிறப்பாகப் போற்றப்படும் இவ்வாலயத்தின் விநாயகப்பெருமான் மீது பல புலவர்கள் பக்திச்சுவை ததும்பும் பல பதிகங்களைப் பாடியுள்ளனர். அவற்றுள் முருகேசபண்டிதர் இயற்றிய திருவூஞ்சல், சிவப்பிரகாசப் புலவர் இயற்றிய பன்மணிமாலை, உள்ளங்கவரும் ஓங்காரமூர்த்தி, பழம்பெருமானார் திருப்புகழ், பழம்பிள்ளையார் எச்சரிக்கை, பராக்கு, லாலி, மங்களம் ஆகியனவும் முருகனுக்குரிய திருமுருகன் ஊஞ்சலும் மிகவும் விசேடமாகக் குறிப்பிடக்கூடியன. இராஜகோபுரச் சிறப்புமலர் வெளியீடும் உள்ளது.

ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்புக்களை அந்தணர் பரம்பரையினரே கவனித்து வருகின்றனர். அந்தவகையில் தற்போது சிவஸ்ரீ முத்தையாக் குருக்கள் நாகேந்திர சர்மா ஆதீன கர்த்தாவாக உள்ளார். தொண்டர்கள், அந்தணர்கள், இன்னிசையாளர்கள், மலர் மாலை புனைவோர், வெள்ளாடை வியலுறச் செய்வோர், விசுவகர்மாவினர் ஆகியோரின் சிறப்பான பணிகளால் ஆலயம் எழிற்கோலத்துடன் எழுச்சியுற்றுத் திகழ்கின்றது. பழம்பிள்ளையார் அறநெறிப் பாடசாலை 1999ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து இயங்கி வருவதுடன் அறநெறிச் சிந்தனைகளை வளர்க்கும் சமய பாட வகுப்புக்களையும், சமய அறிவுப் போட்டிகளையும் சைவச் சிறார்களுக்கு நடத்தி வருவதுடன் அவர்களை ஆன்மீக வழியில் நெறிப்படுத்தியும் வருகின்றது.



## குளமங்கால் புனித பிரான்சிஸ்கு சவேரியர் ஆலய வரலாறு

வண அலோசியஸ் சசிகரன்

வடக்கே தெல்லிப்பளையும் கிழக்கேயும் தெற்கேயும் மல்லாகத்தையும் மேற்கே அளவெட்டியையும் எல்லைகளாகக் கொண்ட எமது அழகிய கிராமம் குளமங்காலில் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எமது மக்கள் கிறிஸ்தவ மதத்தை தழுவினர். 1886ம் ஆண்டில் ஓலையினால் வேயப்பட்ட ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டது. இப்புதிய கிறிஸ்தவர்கள் தங்கள் பாதுகாவலராக வேத போதக நாடுகளின் பாதுகாவலராம் புனித பிரான்சிஸ்கு சவேரியாரைக் கொண்டனர். இவ்வாலயத்தின் முதல் மூப்பராக திரு.இயக்கோ என்பவர் நியமிக்கப்பட்டார். இக் கிறிஸ்தவர்கள் திருத்தூதர் காலக் கிறிஸ்தவர்கள் போன்று அனைவரும் ஒற்றுமையாகவும் ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும் ஒருவருக்குள்ளதை மற்றவர்களோடு பகிர்ந்தும் வாழ்ந்தார்கள். தம்மைப்பாதுகாவலராக ஏற்ற இவ்விளங்கிறிஸ்தவ மக்களை எம் புனிதர் கண்ணின் மணியெனக்காத்து இரவு நேரங்களில் கை மணியோடு ஊரைச் சுற்றி வருவதாகவும், நாட்டில் வாந்திபேதி,பெருவாரிக்காய்ச்சல் ஏற்பட்ட காலங்களில் எம் மக்கள் புனிதரினால் நோயணுகாது பாதுகாக்கப்பட்டார்கள் என்றும் எம் முன்னோர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். அது மட்டுமின்றி ஊரில் நடக்கும் திருட்டுக்களை காட்டிக்கொடுப்பதிலும் எம் புனிதர் வல்லவர் என அறியப்படுகின்றார்.

### புதிய ஆலயம் அமைத்தல்.

1914ம் ஆண்டில் கற்களாலான புதிய ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.அடிக்கல் நாட்டுவதற்காக ஐரோப்பாவிலிருந்து வருகை தந்த மறை போதகர் அருட்தந்தை கிற்னோ அவர்களை அளவெட்டி புனித சூசையப்பர் ஆலயத்திலிருந்து மக்கள் புடைசூழ நாதஸ்வர,தவில் வாத்தியங்களின் இசை முழங்க நிலப்பாவாடை விரிக்கப்பட்டு, வாணவேடிக்கையுடன் வரவேற்று பெருவிழாவாக மகிழ்ச்சியுடன் கொண்டாடினர். இக்காலத்தில் இவ்வாலயம் இளவாலை பங்குடன் இணைக்கப்பட்டிருந்ததை 1926,1927ம் ஆண்டுகளில் பிறந்த இவ்வாலயத்தைச் சேர்ந்தவர்களின் திருமுழுக்குச் சான்றிதழ்கள் உறுதிப்படுத்துகின்றன.

புனித ஆலயத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டதோடு கட்டட வேலையும் ஆரம்பமானது. கட்டட வேலையை கண்காணிக்கும் பொறுப்பு எமது ஆலயத்தைச் சேர்ந்த கண்டக்கல் கட்டடக் கலைஞரான திரு.மிக்கேல் என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அக்காலத்தில் சீமெந்து பாவனைக்கு வராத காரணத்தினால் ஆலயவளவிலேயே அமைக்கப்பட்ட நான்கு பெரும் தூண்களிலிருந்து சுண்ணாம்பு பெறப்பட்டது.கண்டக்கற்கள் வெளியிடங்களிலிருந்து மாட்டுவண்டில்கள் மூலமாகவும், மணல் பினாக்கை எனும் இடத்திலிருந்தும் வெள்ளம் வழிந்தோடிய எமது ஊர் நிலங்களிலிருந்தும் எமது மக்கள் தங்கள் தலைகளில் சுமந்து கொண்டு வந்தார்கள் எனவும் வரலாறு மூலம் அறிய முடிகின்றது.ஆண்.பெண் வேறுபாடின்றி கிராம மக்கள் அனைவரும் இலவசமாக கட்டட வேலைகளில் தங்களின் ஒத்துழைப்பை வழங்கினார்கள்.இன்றும் கூட எமது கிராமத்திலும் ஆலயத்திலும் நடைபெறும் வேலைத்திட்டங்கள் வேதனம் பெறாமல் சிரமதான அடிப்படையில் செய்யப்படுபவை என்பது விசேடமாக குறிப்பிட வேண்டிய ஒன்றாகும். இவ்விதமாக ஆலயக்கட்டட பணிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தது. இக்காலப்பகுதியிலேயே கத்தோலிக்க மக்களின் தொகை அதிகரிக்க அதற்கேற்ப பங்குகளின் தொகையும் அதிகரிக்கப்பட்டது.1928இல் எமது ஆலயம் இளவாலைப்பங்கிலிருந்து சுன்னாகப் பங்குடன் இணைந்தது. உடுவில் செபமாலை அன்னை ஆலயம், சுன்னாகம் புனித அந்தோனியர் ஆலயம், எமது ஆலயம் என்பன இணைந்தே சுன்னாகப்பங்காக இருந்தது. அப்போது பங்குத்தந்தையாக இருந்தவர் அருட்தந்தை பென்ஜமின் அடிகளார். அவர்களுக்கு கார்ச்சாரதியாக இருந்தவர் நீதிமன்ற வீதியைச் சேர்ந்த திரு.சி.ஜோன் என்பவர். இவரே டோம் வேலை, பூச்சு வேலை என்பனவற்றை செய்து கொண்டிருந்தார். இவை நிறைவு பெறாத நிலையில் சிறிய பீடம் ஒன்று அமைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றன. அருட்தந்தை வில்வரசிங்கம் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் நிறைவடையாமல் இருந்த ஆலயக்கட்டுமானப்பணிகளை நிறைவுசெய்து ஆலயத்தை அபிஷேகம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை மக்களுக்கு வெளிப்படுத்தினார். மக்களும் மிகுந்த ஆர்வத்தோடு தமது பூரண ஒத்துழைப்பையும்,உடல் உழைப்பையும் வழங்கினர். சிறந்த கட்டடக்கலைஞரான தந்தையின் வழிகாட்டலிலும் மக்களின் சுயநலமற்ற பங்களிப்பாலும் கட்டடப்பணிகள் மிகுந்த துரிதமாக நடைபெற்றது.ஆலயத்தின்

பிரதான பகுதியான பலிபீடத்தை அலங்கரிப்பதற்கான "சீமெந்தினாலான சிங்காசனம்" அமைக்கும் பணி ஓவியர் திரு.லீயோ அவர்களின் மேற்பார்வையில் ஆரம்பமானது. யாழ் மறைமாவட்ட ஆலயங்கள் சிலவற்றில் சிங்காசனங்கள் உள்ளபோதும் அவைகள் மரத்திலானவை என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் உலகமகாயுத்தம் ஆரம்பமாகியிருந்த காலம் என்பதனால் பலிபீடத்திற்கான கல்லை (மாபிளை) ஐரோப்பாவிலிருந்து கொண்டுவர முடியவில்லை. எனவே கருங்கல்லினாலான பீடம் அமைக்கத் தீர்மானித்து அதற்கான பணிகள் சிற்பி சித்தாண்டியின் தலைமையில் நடைபெற்றது. பலிபீடத்தில் நடுநாயகமாக விளங்குகின்ற நற்கருணையை பாதுகாப்பதற்கான உருக்கிலான பேழை தருவிக்கப்பட்டு பீடத்தில் பொருத்தப்பட்டு மரத்திலான அழகிய வேலைப்பாடுகள் அமைந்த கூட்டினால் அது மூடப்பட்டது. ஆலயத்தின் உள் வேலைகள், சிங்காசன வேலைகள், பலிபீட வேலைகள் நிறைவடைந்து வருகின்ற வேளையில் 03.12.1941 எம் புனிதரின் திருநாள் அன்று அபிஷேகதினம் என அறிவிக்கப்பட்டது. மக்கள் மனதில் ஏற்பட்ட குதூகலத்தை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது. அந்நாட்களில் திருநாள் ஆயத்த வழிபாடுகள் 28.11தொடங்கி 02.12 வரை ஐந்து தினங்கள் நடைபெறும். இவ்வாறாக 28.11.1941 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய திருநாள் வழிபாடுகள் தொடர்ந்து சிறப்பாக நடைபெற்று வருகையில் 02.12.1941 அன்று காலை திடீரென பெய்யத்தொடங்கிய மழை அன்றைய நாள் முழுதும் விடாமல் பெய்துகொண்டே இருந்தது. அன்றைய இரவு வழிபாடு நிறைவடைந்த பின்பும் மழை நின்றபாடில்லை. ஆயினும் அபிஷேகவிழா சிறப்பாக நடைபெற எமது புனிதர் பரிந்துரைப்பார் என்ற எண்ணம் எமது பங்குத்தந்தையின் மனதில் இருந்துகொண்டேயிருந்தது. இரவு வழிபாடு முடிந்தபின் மக்களுக்கும் அதையே கூறினார்.தந்தையின் நம்பிக்கை பொய்க்கவில்லை,நடுநிசியில் மழை நின்றது. விண்மீன்களும் வானில் தோன்றின. எனவே மக்கள் மகிழ்ச்சிப் பிரவேசத்தோடு நீதிமன்ற வீதியிலிருந்து ஆலயம் வரைக்கும் பாதையைச் செப்பனிட்டனர். அபிஷேக விழாவிற்கு வருகை தந்த அதி.வண.கியோமர் ஆண்டகை மற்றும் குருக்கள் கன்னியர்கள் மேளதாளங்களோடு பட்டாசு வெடித்து நிலபாவாடை விரிக்கப்பட்டு பவனியாக அழைத்து வரவேற்கப்பட்டார்கள்.காலை 8 மணிக்கு அபிஷேகச்சடங்கு ஆயர் தலைமையில் கூட்டு வழிபாடாக ஆரம்பமாகியது. தாய்மொழி வழிபாட்டுப்

பாவனைக்கு வராத காலமாகையால் வழிபாடுகள் இலத்தீன் மொழியில் நடைபெற்றது. இடையிடையே குரு ஒருவர் அதன் பொருளை தமிழிலும் கூறினார். அபிஷேகச்சடங்கினைத் தொடர்ந்து விழாத் திருப்பலி இரண்டு மணித்தியாலங்களுக்கு மேல் நடைபெற்றது. யாழ் மறைமாவட்டத்தில் மரியன்னை பேராலயம், அடைக்கல அன்னை ஆலயம் ஆகியன ஆலயம், பீடம் என்பன அபிஷேகம் செய்யப்பட்ட ஆலயங்களாகும்.

### அருட்பணி ஆபிரகாம் அடிகள்

சுன்னாகம், உடுவில், குளமங்கால் ஆகிய ஆலயங்களை நிர்வகித்த அருட்பணி ஆபிரகாம் அடிகள் பின்னர் எமது ஆலயத்தை மட்டும் பொறுப்பெடுத்தார். இவரது வருகையின் பின் எமது ஆலயத்தின் வழிபாடுகள் அதிகரித்தன. நிறைவுபெறாமல் இருந்த ஆலய விறாந்தைகளுக்கு சீமெந்து போடுதல்,கதவுகள், யன்னல்கள் பொருத்தும் பணிகளை நிறைவு செய்தார்.தந்தையவர்கள் ஏழைகளுக்கு உதவுவார். ஆனால் கண்டிப்பு மிக்கவர்.திருமறையின் ஒழுங்குகளை மீறுவோர்க்குத் தண்டணை வழங்கியதோடு தண்டப்பணமும் அறவிடுவார். இப்பணத்தில் அயலிலுள்ள நிலங்ளை வாங்கி ஆலயத்துடன் இணைத்தார்.சேமக்காலைக்கு அருகில் இருந்த நிலமும் வாங்கப்பட்டு இணைக்கப்பட்டது. மக்களின் கல்வி வளர்ச்சியிலும் அக்கறை காட்டியதோடு, எமது பாடசாலைக்கு இரு புதிய கட்டடங்களைக் கட்டுவித்தார்.மக்கள் நல்வாழ்வு வாழவேண்டும் எனவும் வழிபாடுகளில் நேரத்துக்கு, பங்கு பெறவேண்டும் எனவும் விரும்பினார்.பலரால் விரும்பப்பட்டவர்.சிலரால் எதிர்க்கப்பட்டவர்.இவர் வெளிநாடுகளிலிருந்த தமது உறவினர்கள் மூலம் தருவித்த பெறுமதிவாய்ந்த பூசை உடுப்புக்கள்,பூசைப்பாத்திரங்கள் இவரது அருள் மொழிவின் போது இவரது சகோதரியால் அன்பளிப்பு செய்யப்பட்ட இரசப்பாத்திரம் இப்படி இன்னும் பல இவர் காலத்தில் எமது ஆலயத்திற்குச் சொந்தமாகக் கிடைத்தன. இவரது பணிக்காலத்தை எமது பங்கின் பொற்காலம் என்றே குறிப்பிட வேண்டும். அரும்பணிகள் ஆற்றியபின் தளர்ச்சியுற்று 15.03.1965 அன்று இறைவனடி சேர்ந்தார்.அவரது மறைவின்பின் எமது ஆலயம் சுன்னாகம் பங்கிலிருந்து பிரிந்து நல்லூர் சுவாமி ஞானப்பிரபாசியருடைய பங்குடன் இணைந்தது.அருட்தந்தை ஞானப்பிரகாசியார் மறைந்து இருபது ஆண்டுகளின்

பின் அவருடைய பங்குகள் பிரிக்கப்பட்ட பொழுது எமது ஆலயம் உரும்பிராய் பங்குடன் இணைக்கப்பட்டது.

**அருட்பணி. நீ. மரியசேவியர் அடிகள்**

எமது ஆலய மணிக்கோபுரம் இவர் காலத்தில் அமைக்கப்பட்டது.

அருட்தந்தை இராயப்பு யோசப் அடிகள் (மன்னார் ஆயர்) ஆலயத்தின் மேற்கேயிருந்த நிலத்தை விலைக்கு வாங்கி ஆலயத்தோடு இணைத்து அதன் மேற்குப்பக்கமாக மக்கள் பாவனைக்காக பாதையொன்றைத் திறந்தா

**அருட்தந்தை ஞானப்பிரகாசம் அடிகள்**

1996 இன் இறுதிப்பகுதியில் அடிகள் எமது பங்கைப் பொறுப்பேற்றார். இதனைத்தொடர்ந்து 1997 இல் ஆலயத்தில் வழிபாடுகள் ஆரம்பமாகின.இவர் குளமங்கால் பங்குப்பணிமனையில் இருந்தவாறே ஏனைய ஆலயங்களை நிர்வகித்து வந்தார்.இக்காலத்தில் போரினால் சேதமுற்ற ஆலயத்தின் கூரைப்பகுதிகள் பங்கு மக்களின் ஒத்துழைப்பபோடு சிரமதான அடிப்படையில் மீளத்திருத்தி அமைக்கப்பட்டதோடு ஆலயத்தின் முகப்புப் பகுதியின் சுண்ணாம்புப் பூச்சுக்கள் அகற்றப்பட்டு சீமெந்தினால் பூசப்பட்டு ஆலயத்தின் பெரும்பாலான பகுதிகளுக்கு வர்ணம் பூசப்பட்டு புதுப்பொலிவு பெற்றது.

**அருட்தந்தை பா.பி இராஜசிங்கன் அடிகள்**

போட்டிக்கோ மண்டபம் அமைத்தல்

எமது ஆலயம் கம்பீரமாகத் தோற்றமளித்த போதும் போட்டிக்கோ மண்டபம் இல்லாதது பெரும் குறையாக பங்கு மக்களால் உணரப்பட்டு தந்தையின் வழிகாட்டுதலில் பங்குமக்களின் தீவிர பங்களிப்போடு அதன் கட்டுமானப்பணிகள் 15.08.2002 தூய கன்னிமரியாவின் விண்ணேற்பு விழாத் திருப்பலியின் நிறைவில் அடிக்கல் நாட்டும் நிகழ்வோடு ஆரம்பமானது. தொடந்து கட்டடப் பணிகளுக்கிடையில் பல்வேறு இடையூறுகள் ஏற்பட்டாலும் பங்கு மக்கள், கட்டடக்கலைஞர்கள், இளைஞர்கள், சிரமதான அடிப்படையில் வழங்கிய தொடர் பங்களிப்பின் காரணமாக கட்டடப்பணிகள் நிறைவுபெற்று

வர்ணம் பூசப்பட்டது. எம் பாதுகாவலரின் திருவிழா ஆரம்பவிழாவின் கொடியேற்றப்படும் நாளான 24.11.2002 ஞாயிறு மாலை ஐந்து மணிக்கு யாழ் ஆயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் ஆசீர்வதிக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டதோடு புனிதரின் கொடியேற்றப்பட்டு கூட்டுத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பெருவிழாவிற்கான நவதின வழிபாடுகள் ஆரம்பமாகின. இப்போட்டிக்கோ மண்டபம் எம் ஆலயத்தின் பலிப்பீடம் அபிஷேகம் செய்யப்பட்ட அறுபது ஆண்டுகள் நிறைவின் நினைவாக (1942-2002) அமைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.தவக்காலத்தில் நடைபெறுகின்ற ஆசாந்திப் பவனிக்காக கல்லறை ஆண்டவர் திருச்சுரூபம் இவரின் காலத்திலேயே தருவிக்கப்பட்டது.அத்தோடு புனித சவேரியர் முன்பள்ளியும் இவரின் பணிக்காலத்திலேயே கட்டப்பட்டதோடு ஆலயமுற்றத்தைப் பூக்கன்றுகளால் அழகுபடுத்தினார்.

**அருட்தந்தை கான்ஸ்போவார் அடிகள்**

2008 இல் பலிப்பீடம் அமைந்துள்ள தளப்பகுதி புனரமைப்பின் மூலம் விரிவுபடுத்தப்பட்டு “ரெறாசோ” வேலைப்பாடுகளினால் மெருகூட்டப்பட்டது.

**அருட்தந்தை தா.நிருபன் நிஷானந் அடிகள்**

இவருடைய பணிக்காலத்தில் பங்குப்பணிமனையிலிருந்து பிரதான வாயில் வரையுள்ள பவனிப்பாதைக்கு மின் விளக்குத்தூண்கள் அமைக்கப்பட்டதோடு போட்டிக்கோவுடன் இணைந்து ஆலய முகப்புப் பகுதி, மணிக்கோபுரம், விறாந்தைப்பகுதி போன்றவற்றிற்கு வர்ணம் பூசப்பட்டு அழகூட்டப்பட்டது.

**அருட்தந்தை ம. றெக்ஸ் சவுந்தரா அடிகள்**

எமது ஆலயத்தின் 125வது ஜூபிலி ஆண்டு 03.12.2011 அன்று ஜூபிலி செபத்துடனும் ஜூபிலி பாடலுடனும் ஜூபிலி கொடியேற்றத்துடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.ஒருவருட காலம் மனமாற்றத்தின் புதுப்பித்தலின் காலமாக அனுசரிக்கப்பட்டது.ஜூபிலிக்கட்டடம் அமைக்கப்பட்டு பங்குப்பெரியார்களின் அனுசரணையுடன் பீடப்பகுதிகள், திருச்சுரூபங்கள்,ஆலயத்திற்கு வர்ணம்

பூசுதல் போன்ற செயற்பாடுகள் நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்ததுடன் வீதிக்கு கல் பதித்து செம்மையாக்கப்பட்டது.

அருட்தந்தை ஜோதிநாதன் 2017ல் ஆண்மீகப்பணியில் கூடிய கவனம் செலுத்தியதுடன் பங்குப்பணிமனையில் கூடிய கவனம் செலுத்தியதுடன் பங்குப்பணிமனை புனரமைப்பிற்கான திட்டம் போடப்பட்டது. பங்கு சுன்னாகம்,குளமங்கால் என பிரிக்கப்பட்டது.

**அருட்தந்தை யு.சசிதரன்**

2018ல் பங்குப்பணிமனை புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு 2019ல் அழகுற வடிவமைக்கப்பட்துடன் ஆலய விறாந்தை கம்பெரலியா திட்டத்தின் கீழ் கூரை வேலைகள் புதிதாக அமைக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. மேலும் ஓகன் பயிற்சிகள் வழங்கி பாடல்களுக்கு மாணவர்களால் ஓகன் இசைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



## யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் நீதிமன்றவீதி மல்லாகம்

சின்னத்துரை சிவகுமாரன்
அதிபர்

### பாடசாலையின் அறிமுகம்

இந்து சமுத்திரத்தின் திலகமெனப் போற்றப்படும் இலங்கைத் தீவின் சிகரமாக மிளிரும் யாழ்ப்பாணத்தில் மல்லாகம் பதிதனிலே நீதிமன்ற வீதியில் மாண்புடைய சமுதாய உருவாக்கத்திற்காக பிஞ்சுஉள்ளங்களின் அறிவுக்கண்களுக்கு ஒளியூட்டும் நிலையமாக சிறந்த கல்விப்பணி ஆற்றி வரும் நீண்ட வரலாற்றுப் பெருமை மிகுந்த ஓர் ஆரம்பக்கல்விப் பாடசாலையாக யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் விளங்குகின்றது

தில்லையம்பலச் சட்டம்பியாரினால் 1832ம் ஆண்டு பத்து மாணவர்களுடன் அமெரிக்க மிஷன் பாடசாலை என்ற பெயருடன் படிப்படியாக வளர்ச்சியடைந்து 1972ம் ஆண்டு தொடக்கம் யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம் என்ற பெயருடன் இயங்கி வந்தது கல்வி உலகில் அன்று முதல் இன்று வரை சகல துறைகளிலும் முதன்மை பெற்று விளங்கும் எமது பாடசாலை 2009.03.09 ஆம் திகதி தொடக்கம் யா/கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி கனிஷ்ட வித்தியாலயம் எனும் நாமம் தாங்கி தனது சாதனைகளை உலகெங்கும் பரப்பிய வண்ணம் இயங்குகின்றது பாடசாலையின் பெயர் மாற்றம் செய்யப்பட்ட இந்நாளில் வருடாந்தம் பரிசளிப்பு விழா நடாத்தப்பட்டு வருகின்றது.

இப் பாடசாலை அன்று முதல் இன்று வரை முகாமைத்துவ நுட்பங்கள் நிறைந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் பல அதிபர்களின் அயராத சேவையினால் படிப்படியாக வளர்ச்சி அடைந்து வருகின்றமை யாவரும் அறிந்த விடயமாகும் தற்பொழுது சிறந்த திட்டமிடலுடன் கூடிய முகாமைத்துவத்தின் கீழ் சேவையை மதித்து அர்ப்பணிப்புடனும் கடமையுணர்வுடனும் சேவையாற்றும் ஆசிரியர்களினது அயராத உழைப்பினால் வருடாவருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் அதிகளவான மாணவர்கள் சித்திபெற்று வலிகாமம் கல்வி வலயத்திலும்

தெல்லிப்பழைக்கல்விக் கோட்டத்திலும் சிறந்த ஆரம்பக்கல்விப் பாடசாலையாக எமது பாடசாலை விளங்குகின்றது பிள்ளை நேயப் பாடசாலை அம்சங்களைக் கொண்ட முதன்நிலை ஆரம்பப்பாடசாலையாக மிளிர்கின்ற இப் பாடசாலையில் தற்பொழுது அதிபர் உட்பட 15 ஆசிரியர்கள் கற்பித்தல் பணியாற்றுகின்றனர் தரம் 1 – 5 வரை 300 மாணவர்களும் எமது பாடசாலை நிர்வாகத்தின் கீழ் இயங்குகின்ற கலைமகள் முன்பள்ளியில் 60 மாணவர்களுமாக ஏறத்தாழ 360 மாணவர்கள் கல்வி கற்பிக்கின்றனர்.

இங்கு அரச பாடத்திட்டத்துடன் தரம் 1,2 இல் கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டு ஆங்கிலக்கல்வி கற்பிக்கப்படுகின்றது பாட இணை பாடவிதானச் செயற்பாடுகளிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு கோட்ட மட்ட வலய மட்ட மாகாண மட்டப் போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றி சாதனைகள் பல படைத்துள்ளமை பாராட்டுக்குரியது

**எமது பாடசாலை ஆலயம்**

எமது பாடசாலையில் 2017ஆம் ஆண்டு தைப்பூசத் தினத்தன்று அடிக்கல் நாட்டப்பட்டு அதே ஆண்டு பங்குனி உத்தர தினத்தன்று கும்பாபிடேகம் நடாத்தப்பட்டது. இவ்வாலயத்தில் ஸ்ரீ ஞான விநாயகப் பெருமானும் கல்விக்கு அதிபதியான கலைவாணியும் எழுந்தருளி அருள்பாலித்து யாவருக்கும் அருட்கடாட்சம் வழங்கிக் கொண்டிருக்கின்றார்.

**பாடசாலையின் பௌதீகவள விருத்தி**

மாணவர்கள் கல்வி கற்பதற்குரிய வகுப்பறைகள் ஓரளவு வசதி கொண்டவையாக காணப்பட்டன மாணவர்களின் நலனைக் கருத்திற் கொண்டு 2009 ஆம் ஆண்டில் P.S.D.G திட்டத்தின் மூலம் முன்னர் இருந்த கட்டடம் அகற்றப்பட்டு 90'x25' விஸ்தீரணம் கொண்ட இருமாடிக்கட்டடம் அமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

பாடசாலையின் மேற்குப்புறத்தில் அமைந்துள்ள ¾ பரப்புக் காணியை எமது பாடசாலையின் பழைய மாணவனும் இலங்கை வங்கியின் ஓய்வு பெற்ற

முகாமையாளருமாகிய திரு.சி.விக்னாஜா அவர்கள் வாங்கி அன்பளிப்பாக பாடசாலைக்கு வழங்கி உள்ளார்.

மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வகுப்பறைகள் போதாமையைக் கருத்திற்கொண்டுP.S.D.G திட்டத்தின் கீழ் 70'x25' அளவு பரிமானம் கொண்ட இரு மாடிக்கட்டடம் வலயக்கல்விப் பணிமனையின் அனுமதியுடன் 09.06.2016 அன்று வலிகாமம் வலயக்கல்விப்பணிப்பாளர் திரு.செ.சந்திரராசா அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்டு கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு 09.03.2017 அன்று மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளராகக் கடமையாற்றிய திரு.செ.சந்திரராசா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது இக்கட்டடத் தொகுதியில் நூல் நிலையம் கணினிக் கூடம் என்பவற்றுடன் வகுப்பறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் இணைபாட விதானச் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இதுவரை காலமும் மைதானம் இல்லாமை பாரிய குறைபாடாகக் காணப்பட்டது 2013ஆம் ஆண்டு தொடக்கம் மைதானக் கொள்வனவு செய்வதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு தை மாதம் மைதானம் கொள்வனவு செய்யப்பட்டது இம் மைதானத்தை கொள்வனவு செய்வதற்கு பரோபகார சிந்தையுடைய எமது பாடசாலையின் பழைய மாணவனும் ஓய்வு பெற்ற வங்கி முகாமையாளருமாகிய திரு.சி.விக்னராஜா அவர்கள் ரூபாய் 2000000 நிதியை அன்பளிப்பாக வழங்கி 10 பரப்புக் காணியை கொள்வனவு செய்து வழங்கினார் 2 பரப்புக்காணி பாடசாலைப் பெற்றோர்களின் அன்பளிப்பு நிதிமூலம் கொள்வனவு செய்யப்பட்டது ஒரு பரப்புக்காணி நலன் விரும்பி ஒருவரின் அன்பளிப்பாக வழங்கினார் மைதானத்திற்கு செல்லும் பாதையை இரண்டு பழைய மாணவர்கள் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

மைதானத்திற்குரிய காணியை கொள்வனவு செய்து அன்பளிப்பாக வழங்கிய திரு.சி.விக்னராஜா அவர்கள் தனது தந்தையினர் திரு.கிளாக்கர் சின்னத்துரை அவர்களின் பெயரில் ஞாபகர்த்தமாக திறந்தவெளி அரங்கு ஒன்றை அமைத்துத்தர முன்வைத்துள்ளார். இம் மைதானத்தில் வலிவடக்குப் பிரதேச செயலகத்தின் துரித கிராம அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ்

கம்பரெலியா பத்து லட்சம் ரூபா செலவில் சுகாதார வசதிகள் மலசலகூடம் வேலைத்திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அடுத்து எமது பாடசாலையின் நூலகம் செலான் வங்கி சுன்னாகம் கிளையின் சமூக வலுவூட்டல் கல்வி அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் நான்குலட்சம் ரூபாய் பெறுமதியில் அபிவிருத்தி செய்யப்பட்டு 09.03.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது சுவரில் பொருத்தப்பட்ட கண்ணாடி அலுமாரிகள் இரண்டு மடிக்கணினிகள் நூலக மேசை நான்கு நூலக வாங்கு எட்டு ஆகியவற்றுடன் ரூபாய் 50,000 பெறுமதியான புத்தகங்களும் அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். மாணவர்களும் ஆசிரியர்களும் விருப்புடன் நூலகம் நூல்களை வாசித்து நுண்ணறிவு பெறுவதை காணக்கூடியதாக உள்ளது

பாடசாலையின் வளர்ச்சி கருதி எமது பாடசாலையின் ஸ்தாகரான தில்லையம்பலச் சட்டம்பியாரின் பேர்த்தியாராகிய திருமதி.லீலாவதி பாலசுப்பிரமணியம் அவர்கள் தெல்லிப்பழையில் உள்ள காணியை விற்று இருபது இலட்சம் ரூபாவை பாடசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் இப் பணத்தின் மூலம் பாடசாலையின் ஸ்தாபகரின் ஞாபகர்த்தமாக பாடசாலையின் நுழைவாயிலும் முன்புறத்திலும் அமைப்பதற்கான வேலைத்திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இதற்கான அனுமதியை கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் இளைஞர் விவகார அமைச்சு NP /03/06/ Donations இலக்க 29.05.2019ம் திகதிய கடிதம் மூலம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கல்விச்சாதனைகள்**

எமது பாடசாலை அன்று முதல் இன்றுவரை முகாமைத்துவ நுட்பங்கள் நிறைந்த அர்ப்பணிப்புடன் கண்ணுங்கருத்துமாகப் பாடசாலையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கடமையாற்றிய அதிபர்களினதும் அயராது உழைத்து ஆசிரியர்களினதும் சேவையினால் பாடசாலை படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது

தற்போது சிறந்த திட்டமிடலுடன் அர்ப்பணிப்பாக கடமையாற்றும் அதிபர் ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் தரம் 5 புலமைப்பரிசில்

பரீட்சையில் அதிக மாணவர்கள் சித்தி அடைவதுடன் பாட இணைபாடவிதானச் செயற்பாடுகளில் ஏனைய நகர்ப்புற பாடசாலைகளுடன் போட்டியிட்டு வெற்றி பெற்று பல சாதனைகளை படைத்துப்புகழ் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

| ஆண்டு | தோற்றியோர் எண்ணிக்கை | சித்திபெற்றோர் | அதிகூடிய புள்ளி | 100ற்கு மேல் | 70ற்கு மேல் |
|---|---|---|---|---|---|
| 2012 | 49 | 02 | 02 | 170 | 34 |
| 2013 | 49 | 08 | 08 | 176 | 44 |
| 2014 | 69 | 21 | 21 | 178 | 56 |
| 2015 | 52 | 09 | 09 | 177 | 43 |
| 2016 | 66 | 10 | 10 | 173 | 57 |
| 2017 | 52 | 07 | 07 | 175 | 46 |
| 2018 | 59 | 07 | 09 | 190 | 31 |

எமது மாணவர்கள் இவ்வாறான பெறுபேறுகளை பெறுவதற்கு தரம் 1 – 5 வரை கற்பித்த சகல ஆசிரியர்களும் பாராட்டுக்குரியவர்கள் குறிப்பாக தரம் 5 வகுப்பில் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமது சுகதுக்கங்களைப் பாராது மேலதிக வகுப்பு நேரங்களில் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றமை பாராட்டத்தக்கது.

**இணைபாடவிதானச் செயற்பாடுகள்**

எமது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்கள் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் மிகவும் விருப்புடனும் அக்கறையுடனும் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது,

பாடசாலை குடும்ப கோட்ட வலயமட்ட ரீதியாக நடாத்தப்படும் ஆரம்பப்பிரிவுப் போட்டிகயில் பங்குபற்றி வெற்றியீட்டி சாதனைகள் படைத்து பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர் இவ்வருடம் நடைபெற்ற தமிழ் மொழித்தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் வாசிப்புப் போட்டியில் தரம் 5 இல் கல்வி கற்கும் செல்வி.ச.சேபா ஆராதனா என்ற மாணவி 2ம் இடம் பெற்றுள்ளமை பாராட்டத்தக்கது.

பாடசாலையில் இந்து மன்றம் தமிழ்மன்றம் ஆங்கில மன்றம் ஆரம்பப்பிரிவு மன்றம் கிறிஸ்தவ மன்றம் ஆகியன மாதாந்தம் தமது செயற்பாடுகளை ஒருங்கமைத்து செயற்படுத்தி மாணவர்களின்

தலைமைத்துவம் ஆக்கத்திறன்களை வெளிப்படுத்தி வருகின்றமைக்குறிப்பிடத்தக்கது.

**பாடசாலையில் நடைபெறும் விழாக்கள்**

1. செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா
2. பரிசளிப்பு விழா
3. தரம் 1 கால்கோள் விழா
4. தரம் 3 மகிழ்ச்சிகரமான ஆரம்பவிழா
5. ஆங்கில தினவிழா
6. சமய குரவர்களின் குருபூசை
7. தங்கம்மா அப்பாக்குட்டி அம்மாகுருபூசை
8. ஒளிவிழா
9. நவராத்திரி விழா

**பாடசாலையின் தேவைகள்**

1. கணனிக் கூடத்திற்கான கணனிகள்
2. கணனி அறைக்குரிய தளபாடங்கள்
3. சரஸ்வதிசிலை அமைத்தல்
4. உள்ளக விளையாட்டு உபகரணங்கள்
5. வகுப்பறை அலுமாரிகள்
6. மின்பிறப்பாக்கிகள்
7. மேலைத்தேய வாத்தியங்கள்
8. கீழைத்தேய வாத்தியங்கள்
9. கிறிஸ்தவ வழிபாட்டிடம்
10. 70x25x2 அளவுடைய கட்டடம்
11. 50x25x2 அளவுடைய ஆரம்பப்பிரிவு வள நிலையம்
12. மைதானத்திற்கான நுழைவாயில்
13. மைதானத்திற்கான சுற்றுமதில்
14. மைதானத்திற்கான விருந்தினர் மேடை

## கலைமகள் முன்பள்ளி

எமது பாடசாலை நிர்வாகத்தின் கீழ் கடந்த 21 வருடங்களாக இயங்கி வரும் கலைமகள் முன்பள்ளியில் தற்பொழுது 42 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் ஆறு ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கின்றனர் பெற்றாரின் வேண்டுகோளிற்கு இணங்க ஆங்கில மொழி மேலதிகமாகக் கற்பிக்கப்படுகின்றது

அன்று தொட்டு இன்று வரை ஆரம்பக்கல்விக்கு அடித்தளம் இடும் எமது பாடசாலை சகல துறைகளிலும் சாதனை படைத்து பாரெங்கும் தனது புகழைப்பரப்பி வலிகாமம் வலயத்தில் சிறந்ததோர் ஆரம்பபாடசாலையாக மிளிர்கின்றமை சிறப்பிற்குரியது.

ஒரு நல்ல வாசகனைக் கொண்டே ஒரு நல்ல புத்தகம் அடையாளம் காணப்படுகின்றது.

– ஜார்ஜ் பெர்னாட்ஷா –

உலகிலுள்ள அனைத்துவகைத் துயரங்களின் விடுதலை ஒரு புத்தகத்தில் உள்ளது.

– சூகிவா திவாங்கோ –

தான் தூக்கிலிடப்படுவதற்கு ஒரு நிமிடம் முன்பு வரை வாசித்துக்கொண்டே இருந்தாராம்

– பகத்சிங் –

## கிராமங்களைப் பேறாக்கும் கீர்த்திமிகு சேவையில் புராதனமானது அளவெட்டி பிரதான அஞ்சல் அலுவலகம்

கே.எஸ்.சிவஞானராஜா
ஆடியபாதம் வீதி,
கொக்குவில்.

வைரவிழாவையும் கடந்து அமுத விழாக்காணவிழையும் அளவெட்டி தபாலகம் தனது சொந்த வதிவிடத்தை, 22.10.2018 திங்கட்கிழமையன்று சொந்தமாக்கி இருப்பது இலங்கையின் ஒரு வரலாறாகப் பதிவாகியுள்ளது. இலங்கையில் பல தபாலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இயங்குகின்ற நிலையில், அளவெட்டி தபாலகம் பலரது அயராத முயற்சியால் இன்று தனது மாட்சியை உரத்துச் சொல்கிறது.

பொது விடயங்களுக்காகத் தானதர்மம் செய்கின்ற பெரியோர்கள் கிராமந்தோறும் பெருகி வரும் இவ்வேளையில், அளவெட்டியிலும் அமரர் பண்டிதர் நாகலிங்கம் அவர்களது பெரும் முயற்சியின் பிரகாரம், சுவிஸில் வாழ்கின்ற அளவெட்டியூர்ப் பெருமகன் திரு.செல்லத்துரை சிவபாலன் அவர்கள் காணி ஒன்றைக் கொள்வனவு செய்து அளவெட்டி தபாலகத்திற்கு வழங்கியுள்ளார். இத்தபாலகம் நூற்றாண்டு காணும் போது பலரது அர்ப்பணிப்பு வரலாறாகப் பேணப்படும் என்பது இன்றைய (22.10.2018) திறப்புவிழா கட்டியம் கூறி நிற்கிறது. இலங்கையின் புகழ்பூத்த கல்லூரியான அளவெட்டி அருணோதயக் கல்லூரி இத் தபாலகத்திற்கு ஆசி வழங்குமாப்போல எதிரே அமைந்துள்ளது.

மேலும் மக்களின் போக்கு வரவுக்கும், அவரவர்களின் தேவைகளுக்கும்; தொலைத் தொடர்பு பரிமாற்றத்திற்கும், பாதுகாப்பான கடிதப் பகிர்தலுக்கும், பி.எம்.டி இலத்திரனியல் பணப் பரிமாற்றத்திற்கும், அதிவேக அஞ்சல் சேவைகளுக்கும், ஈ.எம்.எஸ். சர்வதேச விரைவு கொரியர் சேவைகளுக்கும், லொஜி போஸ்ட் நாடுபூராகவும் ஒப்படைக்கும் பார்சல் சேவைக்கும், இலத்திரனியல் தந்திச் சேவைகளுக்கும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மற்றும் கட்டணங்கள் செலுத்துதல், உள்நாட்டு, வெளிநாட்டுப் பணப்பரிமாற்றம், காப்புறுதிப் பணம் செலுத்துதல், வங்கி நடவடிக்கைகள், வைத்திய சனல் சேவைகள், ஓய்வூதியம் செலுத்துதல்,

சமூக சேவைகள், பரீட்சைக் கட்டணம் செலுத்துதல், வாகனத் தண்டப் பணம் கட்டுதல் போன்ற இன்னோரன்ன சேவைகளையும் அளவெட்டித் தபாலகத்தில் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் திருப்திகரமாக உண்டு.

### முயற்சி திருவினையாக்கும்

2006ம் ஆண்டு தபாலகக் கட்டட வேலைக்கான அத்திவாரக்கல் நாட்டப்பட்ட போதும் ஏற்பட்ட தொய்வு நிலையில் இருந்து மீட்சி பெற்று அளவெட்டி மகாஜன சபைத் தலைவர் திரு.வை.சுப்பிரமணியம் அவர்களது பெரு முயற்சி காரணமாக, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.நாகலிங்கம் வேதநாயகன் அவர்களது பூரண ஒத்துழைப்பும் பங்களிப்பும் இத் தபாலகத்தை நீடித்த ஆயுள் பெற வைத்துள்ளது. இன்னும் பல தேவைகளுக்கும், சேவைகளுக்கும் எதிர்காலம் கைகொடுக்கும் என்ற நம்பிக்கையைத் திறப்புவிழா ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

### திறப்பு விழா

அளவெட்டித் தபாலகத் திறப்பு விழா, அஞ்சலக ஆலோசனைச்சபைத் தலைவர் திரு.இராஜகோபாலன் அவர்களது தலைமையில் சிறப்பாக அரங்கேறியது. பிரதம விருந்தினராக, யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு.நா.வேதநாயகன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக, வட மாகாண பிரதி அஞ்சல் மாஅதிபதி நாயகம், திருமதி.மதுமதி வசந்தகுமார் அவர்களும், வலி.வடக்கு பிரதேசசபைத் தவிசாளர் திரு.சோ.சுகிர்தன் அவர்களும், வலி.வடக்கு பிரதேசச் செயலாளர் திரு.சிவசிறி அவர்களும் கலந்து திறப்பு விழாவை மனம் குளிர வைத்தார்கள். கோலோச்சிக் கோபுரமாக்கினார்கள்.

கௌரவ விருந்தினர்களாக, பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் திரு.கா.புஸ்பநாதன் அவர்களும், பிரதிப் பிரதம பொறியியலாளர் திரு.க. திருக்குமார் அவர்களும், அளவெட்டி மகாஜனசபைத் தலைவர் திரு.வை.சுப்பிரமணியம்(வையன்னா பாலு) அவர்களும், அளவெட்டி மேற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் திரு.இ.சிவநாயகம் அவர்களும், பெருமளவிலான பொதுமக்களும் கலந்து புதிய தபாலகக் கட்டடத்திறப்பு விழாவிற்கு பொலிவூட்டினர்.

அஞ்சல் சமூகம் செவ்வனவே திட்டமிட்ட முறையில் தபாலகத் திறப்பு விழாவினை இறையருள் துணைநிற்க அளவெட்டி தபாலக அதிபர் திருமதி. கவிதா சிவகுமார் அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்.

யாழ் மாவட்டத்தில் எதற்கு முக்கியத்துவம் கொடுத்து மக்களுக்குச் சேவை செய்ய முடியுமோ அதற்கு முதலிடமளித்து எடுத்துக் கொண்ட கைங்கரியத்தை நிறைவேற்றும் வல்லவராகத் தற்போதைய அரசாங்க அதிபர் திரு.நா.வேதநாயகன் அவர்கள் சேவையாற்றி வெற்றிகாண்கின்றார். "எனது" என்பதற்கு அப்பால் "எமது ,எங்களது" என்ற சமூக விழுமியம் கருதியதாகச் சேவையாற்றுவதில் பகவத்கீதையின் சாராம்சமாகத் திகழ்கின்றார். அளவெட்டியின் நீண்டகாலக் கனவு ஒன்று நனவாகியுள்ளது. அவரது தூயகரங்களால் யாழ் மாவட்டம் அதீத பயன்பாடுகளுக்கு வரமாகிறது.

தொடர்ந்து பேசிய வட மாகாணப்பிரதி அஞ்சல் மாஅதிபதி நாயகம், திருமதி.மதுமதி வசந்தகுமார் அவர்கள் "மக்களின் நம்பிக்கையானதும், பாதுகாப்பானதுமான சேவையில் தபாலகங்கள் தம்மை அர்ப்பணிக்கின்றன" என்பதனை எடுத்தியம்பி, அளவெட்டித் தபாலகம் மேன்மேலும் மக்கள் சேவையில் மிளிர வாழ்த்தினார். தொடர்ந்து இற்றைவரை காலமும் கடமையாற்றிய தபாலதிபர்களின் அர்ப்பணிப்பான சேவைபற்றி எடுத்தியம்பி நன்றி கூறப்பட்டது. கிட்டத்தட்ட நூறு தபாலதிபர்கள் அளவெட்டியில் கடமையாற்றியுள்ள நிலையில், அவர்களுடைய பதிவுகள் சேகரிக்கப்பட்டு வரலாறு எழுதப்பட வேண்டும். திரு.வை.சுப்ரமணியம் அவர்கள் அளவெட்டி பற்றிய பூரண அறிவை உள்ளத்தில் தேக்கி வைத்துள்ளார். அவரைச் சரியாகப் பயன்படுத்தினால் அளவெட்டி "பூச்சொரியும் பொன்னொச்சி"யாக என்றும் பூத்திருக்கும்.

புராதன வரலாறு படைத்து மகிழும் அளவை வாழ் மக்களும், பயனாளிகளும், மற்றும் அளவெட்டித் தபாலகத்தின் தற்போதைய அதிபர் அவர்களும், அஞ்சல் குடும்பமும் வரலாற்றுத் தேடல்களை அஞ்சலக ஆலோசனைச் சபை மூலம் பூரணமாக்க முடியும் என்பதை அகத்திலிருத்தி புதிய தபாலகம் சாதனை புரிய வாழ்த்துவதோடு 2019.10.09 அஞ்சல் தினம் வளம்பெற வேண்டும்.

## தமிழர் தம் வாழ்வியலான சித்த மருத்துவமும் அளவையூரும்

திருமதி.ம.கௌரீசன்
ஆயுர்வேத வைத்தியர்.

கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய தமிழர்களின் சித்த மருத்துவம் எனும் சுதேச மருத்துவ முறையானது தனியே ஒரு மருத்துவ முறை மட்டுமல்லாது அது அவர்களின் வாழ்வியலும் ஆகும். இம் மருத்துவத்தில் நோய்க்கு மருந்து வழங்குதல் மட்டுமல்லாது, நோய் வராது தடுத்தலும் நோயணுகாது தற்பாதுகாப்பு ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடித்தலும் வலியுறுத்தப்படுகின்றது.

தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமான் தன் தந்தையிடமிருந்து பெற்றுக் கொண்ட மருத்துவ முறைகள் பதினெட்டு சித்தர்களினூடாகக் கையளிக்கப்பட்டு மக்களுக்கு நோய் தீர்க்கும் மருத்துவமாக, இயற்கையோடு இணைந்த வைத்தியமாக விளங்குகின்றது.

"மறுப்பதுடல் நோய் மருந்தெனலாகும்
மறுப்பதுள நோய் மருந்தெனச்சாலும்
மறுப்பதினி நோய் வராதிருக்க
மறுப்பது சாவை மருந்தெனலாகும்"

என்ற, திருமூலர் எனும் சித்தரின் கூற்றுப்படி உடல் நோய்கள், உள நோய்களைப் போக்குவதும், நோய் வராமல் தடுப்பதும், சாவையும் வரவிடாமல் தடுப்பதும் மருந்தாகும். இங்கு சாவினைத் தடுப்பது என்பதை மீண்டும் பிறவாநிலை என்றும் கூறலாம். இவ்வாறான பல மருந்துகளைச் சித்த மருத்துவத்தில் பரவலாகக் காணலாம்.

இவ்வாறான இயற்கை வைத்திய முறைக்கு அளவெட்டி எனும் இவ்வூர் பிரசித்தமானது. முற்காலத்திலே பெருமை பெற்ற சித்தவைத்தியர்கள் பலர் இம்மண்ணிலே தோன்றி வாழ்ந்துள்ளனர். இவ்வூரிலே 1997ம் ஆண்டு முதல் வலிகாமம் வடக்கு பிரதேசசபைக்குரிய அளவெட்டி ஆயுள்வேத வைத்தியசாலையானது அமைக்கப்பட்டு மக்களுக்கு சேவையாற்றி வருகின்றது. ஆரம்பத்தில் நிரந்தரக் கட்டடம் இல்லாமல் தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த இவ் வைத்தியசாலையானது தற்போது 2018ம் ஆண்டு மாசி மாதம் முதல் டச்சு வீதி அளவெட்டியில் நிரந்தர கட்டடம் அமைக்கப்பட்டு புதுப் பொலிவுடன் இயங்கி வருகின்றது. இங்கு நோய்களுக்கான சிகிச்சை, நோய் வராமல்

தடுப்பதற்குரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும் மக்களுக்கு மூலிகைகளை இனங்காட்டும் பொருட்டு சிறிய அளவிலான மூலிகைத் தோட்டம் ஒன்றும் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது.

இங்கு உணவுக்கால்வாய்த் தொகுதியில் ஏற்படக் கூடிய பற்கூச்சம், வாய் அவிதல், இரைப்பை அழற்சி, குடற்புண், மலச்சிக்கல், மூலநோய், பெண்களுக்கு ஏற்படக்கூடிய மாதவிடாய் சம்பந்தமான பிரச்சினைகள், வெள்ளைபடுதல், வயதானோரில் ஏற்படக்கூடிய மூட்டு வாதம், வாத நோய்கள், பாரிசவாதம், நரம்பு சம்பந்தமான பிரச்சினைகள், மேலும் சளித்தொல்லை, ஆஸ்துமா, இருமல் போன்ற சுவாச நோய்கள், தொற்றா நோய்களான நீரிழிவு, உயர்குருதியமுக்கம், கொழுப்பு, மற்றும் போசாக்கின்மை, தலைவலி, முடி உதிர்தல், இளநரை, பொடுகு, தோல் நோய்களான கிரந்தி, கரப்பான், வெண்குஷ்டம், சிறுநீர்தொகுதி சம்பந்தமான நோய்கள் போன்ற பல்வேறு வகையான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது.

மேற்படி நோய்களுக்காக கடந்த வருடம் (2018) சிகிச்சை பெற்ற நோயாளர்களின் எண்ணிக்கை விபரம் காட்டப்பட்டுள்ளது.

| இல | நோய் வகை | நோயாளர் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | தொற்றா நோய்கள் | 103 |
| 02 | உணவுக் கால்வாய் நோய்கள் | 704 |
| 03 | பெண் நோய்கள் | 108 |
| 04 | வாத நோய்கள் | 1916 |
| 05 | போஷாக்கின்மை | 569 |
| 06 | நரம்பு தொடர்பான நோய்கள் | 361 |
| 07 | சுவாச தொகுதி நோய்கள் | 1536 |
| 08 | தோல் நோய்கள் | 858 |
| 09 | சிறுநீர்த்தொகுதி நோய்கள் | 10 |
| 10 | குழந்தை நோய்கள் | 359 |
| 11 | ஏனையவை | 80 |
| | **மொத்தம்** | **6604** |

இவ்வாறிருப்பினும் மக்களுக்கு சித்த மருத்துவம் தொடர்பான விழிப்புணர்வின்மை இருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இதனை மூட்டுவலிக்குரிய நோவெண்ணையைப் பெற்றுக் கொள்ளும் இடமாகக் கருதும் மனப்பான்மை பலரில் உள்ளது. எனவே சித்த வைத்தியம் மூலம் பல்வேறு நோய்களைத் தீர்க்கமுடியும் என்ற விழிப்புணர்வைப் பெற்று இவ்வைத்தியசாலை மூலம் அளவையூர் மக்கள் பயனடைய வேண்டும் என்பதே எனது பேரவா

2017ம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்தின் சிறந்த செயற்பாட்டிற்காக 2108ம் ஆண்டு பரிசளிப்பு விழாவில் தேசிய ரீதியில் முதலிடம் பெற்ற கொக்குவில் பொதுநூலகத்தின் வினைத்திறனைப் பாராட்டி அந் நூலக வரலாற்றை வெளியிடுகின்றோம்.

## கொக்குவில் பொதுநூலகம்: வரலாறும் அண்மைய செயற்பாடுகளும்

கி. அனிதா & சி.அனுஷியா
நூலகர்கள்
கொக்குவில் பொதுநூலகம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் நல்லூர் பிரதேசசபையின் கீழ் செயற்படுகின்ற கொக்குவில் பொது நூலகக் கட்டிடத்திற்கான அத்திபாரம் யாழ்ப்பாண உதவிஅரசஅதிபரும் நல்லூர் பிரதேசசபையின் விசேடஆணையாளருமாகிய திரு.அமுதசாகரன் அவர்களினால் 21.11.1977 அன்று இடப்பெற்று 22.07.1978 அன்றுநல்லூர் தேர்தல் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ மு.சிவசிதம்பரம் அவர்களால் புதிய நூலகக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டது. இப் பொது நூலகம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணதொழில் நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்லூரி, மற்றும் கொக்குவில் இந்துக்கல்லூரி ,நாமகள் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்பவற்றிற்கு மிக அருகில் அமைந்துள்ளமையினால் நூலகத்தின் சேவைகளும் அதற்கேற்ப வளங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளமையினால் மக்கள் மத்தியிலும், மாணவர்கள், கல்வியியலாளர்கள் மத்தியிலும் முக்கியத்துவமுடைய நூலகமாகக் காணப்படுகின்றது. இப் பொது நூலகம் ஆற்றிவருகின்ற சேவைகளுக்காக காலத்திற்குக் காலம் பலசான்றிதழ்களையும், விருதுகளையும் பெற்றுவந்துள்ளது. அந்தவரிசையில் 2018ம் ஆண்டுதேசிய ஆவணவாக்கல் சபையினால் தேசிய ரீதியில் முதலாவது சிறந்த நூலகம் (வாசிப்புவிழிப்புணர்வு, நூலகவிரிவாக்கல் சேவைகள்) என தெரிவு செய்யப்பட்டமை வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டியதாகும். இவ்விருதினை பெற்றுக்கொள்வதற்கு கொக்குவில் பொதுநூலகத்தில் கடமையாற்றும் நூலகர்கள், உத்தியோகத்தர்கள் சிறப்பாக பங்களிப்பினை வழங்கியுள்ளதோடு, இதற்கு தேவையான பூரண ஒத்துழைப்பினையும்

தேவையான வழிகாட்டல்களையும் நல்லூர் பிரதேசசபையின் கௌரவ தவிசாளர் தா.தியாகமூர்த்தி அவர்களும், சபையின் கௌரவ உறுப்பினர்களும் செயலாளர் திரு.சுதர்ஜன் அவர்களும் உத்தியோகத்தர்களும் வழங்கியுள்ளார்கள். அதுமட்டுமன்றி எமது ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு எமது நூலகத்தின் ஆலோசனைக்குழுவினரும், வாசகர் வட்டஉறுப்பினர்களும், சிறுவர் நூலக அங்கத்தவர்களும், மாணவர்களும், பெற்றோரும், ஊடகத்துறையினரும் பங்காற்றியுள்ளார்கள்.

தற்போதைய பயனாளிகளின் தேவைகளைக் கருத்தில் கொண்டு நூலகம் நவீனமயப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக எமது நூலகத்திற்கு தேவையான கட்டிடவசதிகள் நல்லூர் பிரதேசசபையின் செயலாளராகக் கடமையாற்றிய திரு. மேரிஜோசப் சாந்தசீலன் அவர்களினாலும் அவர்களுக்கு பின்னர் செயலாளராகக் கடமையாற்றிய திருமதி அன்னலிங்கம் அவர்களின் பங்களிப்பிலும் செயற்படுத்தப்பட்டு தற்போதைய செயலாளர் திரு.சுதர்ஜன் அவர்களால் சிறப்பானமுறையில் நிறைவுசெய்யப்பட்டது.

**நூலகத்தின் ஒழுங்கமைப்பும் சேவைகளும்**

கொக்குவில் பொது நூலகமானது சிறப்பான சேவைகளை வழங்கும் பொருட்டு முறையாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதன் பொருட்டு நூலகமானது நிர்வாகபிரிவு, தொழில்நுட்பப்பிரிவு, இரவல்வழங்கும்பிரிவு, உசாத்துணைப்பிரிவு, சிறுவர்பிரிவு, பத்திரிகை, பருவஇதழ் பிரிவு ஆவணவாக்கப்பிரிவு, என்றவகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இங்கு நூல்கள் யாவும் பயனாளிகள் பயன்பாட்டினை இலகுவாக்கும் நோக்குடன் தூயிதசாம்ச முறையில் பகுப்பாக்கம் செய்யப்பட்டுள்ளதுடன் பிறவுணி முறையில் இரவல்வழங்கும் சேவையையும் மேற்கொள்ளப்படுகின்றது. மாணவர்களினதும் கல்வியியலாளர்களினதும் தேவைக்கேற்ப உசாத்துணைபிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. அத்துடன் தேவையான உசாத்துணை நூல்கள் இரவல் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சிறுவர்களின் வாசிப்பு ஆர்வத்தினைத் தூண்டும் வகையில் சிறப்பானமுறையில் சிறுவர்பகுதி உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு நூல்கள் மட்டுமன்றி சிறுவர்களுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்களும் அதற்கேற்ப தளபாடங்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

ஆவணக்காப்பகத்தில் அரும்பொருட்களும், ஓலைச்சுவடிகளும், மற்றும் பிரதேசத்தின் அரும்பொருட்களும் பாதுகாக்கப்படுகின்றன. இத்துடன் ஆயுள்வேதவைத்தியம், நூலகவியல்துறை என்பவற்றிற்கான சிறப்புப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வருடம் "கருவில் இருந்தேவாசிப்போம்" என்றதொனிப்பொருளுக்கு ஏற்பகர்ப்பிணித் தாய்மார்களுக்கு என தனியான பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது.

**இலத்திரனியல் நூலகம் (E.Library)**

இலங்கை திறந்தபல்கலைக்கழகமும், இலங்கை உள்நாட்டுஅலுவல்கள் அமைச்சும் இணைந்து பொது நூலகங்களை இலத்திரனியல் மயப்படுத்தும் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் கொக்குவில் பொதுநூலகம் இத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளமையினால் எமது நூலகசேவையும் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் திரு எஸ் .கேதீஸ்வரன் ஒத்துழைப்புக்களையும் ஆலோசனைகளையும் வழங்கிவருகின்றார்.

**விசேடசேவைகள்**

கொக்குவில் பொது நூலகத்தில் பருவ இதழ்களும், உசாத்துணை நூல்களும் இரவல் வழங்கப்படுவதுடன் வலிதெற்கு பிரதேசசபையின் சுன்னாகம் பொது நூலகத்துடன் Inter Library Loan சேவையையும் வழங்குகின்றோம். அத்துடன் உள்ளூர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு அவர்களின் வெளியீடுகள் ஆவணப்படுத்தப் படுகின்றன.

**வெளியீடுகள்**

சிறுவர்களின் ஆக்கங்கள் தாங்கிய கொக்கூர் சுட்டி சஞ்சிகை, மொட்டுக்களின் மொழி சஞ்சிகை, ஸ்ரிக்கர், புக் மாக், துண்டுப்பிரசுரம், சுவரொட்டி என்பன நூலகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன.

நூலகவிரிவாக்கல் சேவைகள்

இந் நூலகம் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப பலவிரிவாக்கல் சேவைகளையும் வலுவூட்டல் சேவைகளையும் முன்னெடுத்துவருகின்றது. விரிவாக்கல் சேவைகள் பெரும்பாலும் சிறுவர்களை முக்கியத்துவப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. சிறுவர்களுக்கான கதை சொல்லும் நேரம், போட்டிகள், நூல்பகிர்வு, புலமைப்பரிசில் போட்டி, பரீட்சைமாணவர்களுக்கான ஊக்குவிப்புகள், ஆன்மீகக் கருத்தரங்குகள், சிறுவர்களுக்கான நூல்வெளியீடுகள், ஆளுமைச் செயற்பாடுகள், நூல் அறிமுகம் என்பவற்றுடன் உலகபுத்தகதினம், சிறுவர்தினம், நூலகவாரம், நீங்களும் பேசலாம், தனிமனித ஆளுமைவிருத்தி தொடர்பான கருத்தரங்குகள், நூலகம் தொடர்பாக ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை முன்னெடுத்து வருகின்றோம். இவ்வாறான செயற்பாடுகளின் பின்னர் நூலகத்தின் அங்கத்தவர்கள், வாசகர்கள் அதிகரித்துள்ளனர். முக்கியமாக சிறுவர் பகுதி வாசகர்கள் அங்கத்தவர்கள் அதிகரித்தமை நூலகவிரிவாக்கல் சேவைகளுக்கூடாக அடைந்த பெரும் வெற்றி ஆகும். இதனூடாக சமூகஆர்வலர்களின் பங்களிப்பும் அதிகமாகக் கிடைக்கின்றது. அன்பளிப்பு நூல்களும் கணிசமாகக் கிடைத்துவருகின்றன.



## நூலக உத்தியோகத்தர்கள்



**இருப்பவர்கள்** – திருமதி.த.போல்சுரேஸ் (நூலகர்) திரு.சோ.சுகிர்தன் (தவிசாளர்) திரு.இ.பகீரதன் (செயலாளர்
திரு.தி.தியாகச்சந்திரன் (பொறுப்பதிகாரி)

**நிற்பவர்கள்** – திரு.இ.நாகவேல்ராசா, திரு.பொ.அன்ரன் அல்வினசம், திரு.நா.சந்திரசேகரன்

## மலர்க்குழு



**இருப்பவர்கள்** – திரு.வ.நல்லதம்பி (மலர்க்குழு) திருமதி.த.போல்சுரேஸ் (நூலகர்) திரு.சோ.சுகிர்தன் (தவிசாளர்)
திரு.இ.பகீரதன் (செயலாளர்) திரு.தி.தியாகச்சந்திரன் (பொறுப்பதிகாரி) திரு.க.சௌந்தரராஜசர்மா

**நிற்பவர்கள்** – செல்வி.வி.பிரியதர்சினி , செல்வி.க.தனுஷிகா, திருமதி.நா.ராஜி

## நூலகம் என் அகம்

பெ.தனராசா
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

ஆலயங்கள் நிறைந்த அளவெட்டி யூரிலே
ஆக்கப்பணி ஆற்றிய அயராத பெரியார்
பொன்னம்பலம் என்றே புகழுடைய ஆசான்
எண்ணத்தால் எழுந்ததே இனிதான நூலகம்

ஊராட்சி மன்றத்தின் உயர் தவிசில்
பேறான சேவையென போற்றிட நிறுவினரே
காராளர் கலைஞர்களும் கல்விப் பெரியோரும்
சீரான நூலகத்தில் சீர்மை பெற்றனரே

மாணவர் வாசிக்க மகிழ்வாக வந்தார்கள்
மகத்தான வெற்றி மதிப்பெண் பெற்றார்கள்
ஆதவனாய் அகிலத்தில் அறிவில் நிறைந்தே
ஆற்றலை பெற்றார்கள்; ஆளுமை சிறந்திடவே

அறிவுக் களஞ்சியத்தை அனுதினம் தரிசித்தே
பெருகும் கல்வி ஞானம் பேச்சு எழுத்தென
நிறைவான மனிதர்களால் நிறைந்த இவ்வூரின்
சிறப்பான வரலாறு; சிறந்த இந் நூலகமே...

## வாசிப்புப் பழக்கத்தை சிறுவர்களிடமிருந்து ஆரம்பிப்போம்

திரு.ச.சண்முகவன்
பன்னாலை.

முன்பெல்லாம் கல்விகற்ற சமூகத்தினர் மத்தியிலும் சாதாரண மக்கள் மத்தியிலும் வாசிப்புப் பழக்கம் மிக அதிகமாகவே இருந்தது. அவர்கள் தாம் வாசித்தவற்றையும், கற்றவற்றையும் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொடுப்பதுடன் அவர்களையும் வாசிக்குமாறு ஊக்கப் படுத்துவார்கள். குறிப்பாக சிறுவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தினை ஊக்குவிப்பதில் அதிக அக்கறை காட்டுவார்கள். ஏனெனில் சிறுவயதில் ஒருமனிதனின் மனதில் பதியும் எவ்விடயங்களும் அவனது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பயணிப்பதுடன் அவனுள் பலவித மாற்றங்களையும் ஏற்படுத்திய வண்ணமிருக்கும் என்பதும், அது அம் மனிதனை அறவழியில் செலுத்தி ஓர் பண்புடைய சமுதாயத்தினையும் இவ்வுலகில் தோற்றுவிக்கும் என்பதும் அவர்களுக்குத் தெரிந்தேயிருந்தது. இதனால் அன்றைய காலத்தில் மாணவர்கள் தமது பாடசாலைக்கல்வி, உயர் கல்வி ஆகியவற்றுடன் தமது அறிவினை மேம்படுத்தும் இதர விடயங்களையும் தமது வாசிப்புப் பழக்கத்தின் மூலம் விருத்தி செய்து கொண்டார்கள். ஆனால் இன்று பலரும் தமது பாடசாலைக் கல்வியுடனும், வேலைவாய்ப்பை மையப்படுத்தியதான உயர் கல்விச் செயற்பாட்டுடனும் தமது கல்விச் செயற்பாடுகளை நிறுத்திக் கொள்வதனை அவதானிக்கலாம். அதற்கு அப்பாற்பட்ட எந்த விடயங்களும் தேவையற்றதாக மாறிவிட்டதனையும் காணலாம். இதனைவிட இன்றைய உலகின் நவீனமயப்பட்ட போக்குகளால் ஏற்பட்ட இயந்திரமயமான வாழ்க்கை முறையும் இது ஏற்படுத்திய நேரமின்மை என்ற காரணமும் மிக முக்கியமாக அதிகரித்துள்ள நவீன இலத்திரனியல் சாதனங்களான கணினி, தொலைக்காட்சி, தொலைபேசி என்பவற்றின் பயன்பாடும் அதீதமாக தற்போதைய மனிதர்களை அதனுள் மூழ்கடித்து அவர்களின் நடத்தைக் கோலங்களில் பலவித மாற்றங்களை ஏற்படுத்தி விட்டது. இதனால் இன்று பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை எல்லோரிடமும் வாசிப்புப் பழக்கம் மிக அருகிவிட்டது. எனினும் இவ் இலத்திரனியல் சாதனங்களை நன்மை பயக்கும் கல்விச் செயற்பாடுகளுக்கும், புத்தக வாசிப்புக்கும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வாசிக்கும் திறன் உள்ள பிள்ளைகளில் அறிவு, சிந்திக்கும் ஆற்றல், செயற்படும் திறன், ஆளுமை, எழுத்தாற்றல், பேச்சாற்றல், புதியனவற்றைப் படைக்கும் ஆற்றல் என்பன அதிகமாகக் காணப்படும். எனவே பிள்ளைகளில் இவ்வாறான மீத்திறனை உருவாக்குவதற்கு சிறுவயதிலேயே அவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதற்காக பெற்றோர்கள் முதலில் தம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளவேண்டும். அவர்கள் சிறந்த வாசிப்புப் பழக்கமுள்ளவர்களாக இருந்தால் குழந்தைகளிடமும் அது தொற்றிக் கொள்ளும். ஒரு தாயோ தந்தையோ சிறந்த புத்தகங்களை தமது குழந்தைகளுக்கு முன்னால் வைத்த வாசிக்கும் போது குழந்தைகளிடமும் அது ஓர் ஈர்ப்பை ஏற்படுத்தும். குழந்தைகள் கருவிலிருக்கும்போதே பல விடயங்களை கற்றுக் கொள்கின்றனர் என நவீன அறிவியல் ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன. எதாவது ஓர் தாய் குருவுற்றிருக்கும் போது அத்தாயினது சிந்தனை, சொல், செயல் என்பன கருவிலுள்ள குழந்தைக்கும் பரவுகின்றனவாம். இதனால் குழந்தை பிறக்கும் போதே இயல்பாகவே சில விடயங்களில் அறிவினைப் பெற்றுவிடுகின்றது என்பது அறிஞர்களின் கருத்து. எனவே ஒருதாய் சிறந்த நூல்களை வாசிப்பவராக இருந்தால் குழந்தையும் இயல்பாகவே வாசிப்புப் பழக்கத்தைக் கொண்டிருக்கும் எனக் கூறப்படுகின்றது. எனவே ஒரு குழந்தையின் படிக்கும் ஆற்றலையும், வாசிக்கும் திறனையும் மேம்படுத்த வேண்டுமெனில் கருவிலேயே அதை ஆரம்பிக்க வேண்டும். இதற்கு மகாபாரதம் எனும் இதிகாசக் கதையில் வரும் சம்பவமொன்று சிறந்த உதாரணமாகும். பஞ்சபாண்டவர்களில் ஒருவனான அர்ஜீனன் குருசேத்திர யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னான ஒரு காலத்தில் நிறைமாத கர்ப்பிணியாகவிருக்கும் தனது மனைவியான சுபத்திரைக்கு சக்கரவியூகத்தினை அமைப்பது பற்றியும் எதிரிகள் அமைக்கும் சக்கரவியூகத்தினை எவ்வாறு உடைத்து உள்நுழைந்து தாக்குவது, இறுதியாக அதிலிருந்து எவ்வாறு பாதுகாப்பாக வெளியேறுவது எனவும் விளக்கமாகக் கூறிக்கொண்டிருக்கின்றான். இதனை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்த சுபத்திரை இடையில் நித்திரையாகிவிடுகிறாள். இதனால் அர்ஜீனன் கூறியவற்றை அவளால் முழுமையாக கிரகிக்க முடியவில்லை. இதன் பின்னர் நடைபெற்ற குருசேத்திரப் போரில் அர்ஜீனனின் மகனான அபிமன்யு எதிரிகளின் சக்கரவியூகத்தினை உடைத்து

உள்நுழைந்து தாக்குகிறான். பின்னர் அதிலிருந்து தப்பி எவ்வாறு வெளியே வருவது எனத் தெரியாது மாண்டுபோகிறான். இதன்மூலம் இரண்டு விடயங்கள் உணர்த்தப்படுகின்றன. ஒன்று ஒருதாய் கிரகிக்கும் எவ்விடயத்தையும் கருவிலிருக்கும் குழந்தையும் கற்றுக் கொள்கின்றது. இரண்டாவது அவளால் கிரகிக்க முடியாத எவையும் குழந்தைக்கும் போய்ச் சேர்வதில்லை. எனவே குழந்தைகள் இயல்பிலேயே அறிவுள்ளவர்களாகத் திகழ வேண்டுமென்றால் பெற்றோர்கள் சிறந்த நூல்களை ஆழமாக வாசிக்கும் பழக்கத்தினைக் கொண்டிருக்க வேண்டும்.

தமக்குப் பிடித்தமான நூல்களையும், இதர சிறந்த நூல்களையும் தேர்வு செய்து வாசிக்கலாம். இதற்காக நூலகங்களை பயன்படுத்திக் கொள்வது சாலச் சிறந்ததாகும். எனினும் வீட்டிலிருந்தாலும் இதனைச் செய்யலாம். நீதிக்கதைகள், படிப்பினைக் கதைகள், சிறுவர் பாடல்கள், கவிதைகள், பாடல்களுடன் கூடிய சித்திரக் கதைகள் என்பன சிறுவர்களை ஈர்க்கக் கூடிய புத்தகங்களாகும். இவை புத்தகங்கள், சஞ்சிகைகள், பருவகால வெளியீடுகள், தினசரிப' பத்திரிகைகள், வாரப்பத்திரிகைகள் ஆகியவற்றில் வெளியாகின்றன. அத்துடன் இதற்காக நவீன இலத்திரனியல் கருவிகளான இணைய வாசிப்பு (Online Reading), இலத்திரனியல் புத்தகங்கள் (E-Books), இறுவெட்டுக்கள் (Audio and Video CD) கியவற்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். மாணவப்பருவத்தில் பாடசாலைக் கல்வியிலும் வாசிப்பு மிக இன்றியமையாததாகின்றது. வாசிப்புப் பழக்கமுள்ள மாணவரொருவராலேயே பாடநூல்களை பொறுமையாக இருந்து கற்க முடிவதோடு பாடவிதானங்களிலுள்ள விடயங்களை முழுமையாகக் கிரகிக்கவும் முடிகிறது. அத்துடன் பரீட்சையை சிறந்த முறையில் எதிர்கொள்ளவும் இது உதவுகின்றது. ஒரு நூலின் பயன் பற்றி அறிஞரொருவர் இவ்வாறு கூறுகின்றார் "பிரம்பும் தடியும் உபயோகிக்காமல் கோபமும் குறையும் இல்லாமல் சம்பளத்தையும் வெகுமதியையும் எதிர்பாராமல் நமக்கக் கற்பிக்கும் சிறந்த ஆசான் நூல்களே. நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அலை நமக்கு அறிவு கற்பிக்கும். நீங்கள் தேடும் போது எதையும் மறைக்காமல் அளிக்கும். நீங்கள் பெருந் தீங்கு செய்தாலும் வசை மொழி கூறாமல் உங்கள் அறியாமையைக் கண்டு நகைக்ககாமல் கற்பிப்பனவும் நூல்களே" – றிச்சேட் டி.பியூரி

வாசிப்பின் முலம் நமது இனம், சமூகம், பண்பாடு ஆகியவற்றினை விளங்கிக் கொள்ளலாம். நவீன தகல் தொழினுட்பத் திறன்களை எதிர்கொள்ள முடிவதோடு புத்தாக்கம், நவீனத்துவ சிந்தனை, உயர்கல்வி, தொழில் வாய்ப்பு ஆகியவற்றில் மேம்பாடடைய முடிகிறது. மொழித்திறன், எழுத்தாற்றல், பேச்சாற்றல் அதிகரிக்கிறது. ஒரு இலட்சியப்பாதையினை வகுத்து அதனூடாகப் பயணித்து வாழ்க்கையிலும் உயர்வடைய முடிகிறது. எனவே சிறுவர்கள் முதல் பெரியோர்வரை அனைவரும் நூலகத்திற்குச் சென்று நூல்களைப் பயன்படுத்துவதோடு வீட்டிலும் வாசிப்புப் பழக்கத்தைக் கடைப்பிடிப்பது நன்மை பயக்கும்.

உண்மையான வாசகன், வாசிப்பதை முடிப்பதே இல்லை

– ஆஸ்கார் வைல்ட் –

புரட்சிப் பாதயில் கைத்துப்பாக்கிகளைவிட பெரிய ஆயுதங்கள் புத்தங்களே!

– லெனின் –

சில புத்தங்களை சுவைப்போம் ...... சிலவற்றை அப்படியே விழுங்குவோம் ............ சில புத்தகங்களை மென்று ஜீரணிப்போம்

– பிரான்சிஸ் பேக்கன் –



## வாழும் கலைஞர் அறிமுகம்

## கலைச்சுடர் க. சௌந்தரராஜ சர்மா

சமுதாய மேம்பாட்டிற்கு உழைத்தவர்களை அவர்கள் வாழும் காலத்திலேயே கௌரவிப்பதும் பாராட்டுவதும் பயனடைந்த சமுதாயத்தின் கடமையும் பொறுப்பும் ஆகும். ஊக்கம் தரும் இச் செயற்பாடுகளால் அவர்களின் சிந்தனைகளும் அனுபவங்களும் காலம் கடந்தும் ஏனையவர்களுக்கு வழிகாட்டுவனவாக அமைகின்றன. மேன்மேலும் உற்சாகமுடன் செயற்பட அவர்களின் வாழ்வையும் பணிகளையும் அறிய முயல்வது பயனுடையதாகும். இந்த வகையில் இன்று எம்மத்தியில் மதிப்புறு நூலகராகவும் வாழும் இலக்கியப் படைப்பாளியாகவும் கலைஞராகவும் வலம் வரும் ஒருவரை இவ் ஆக்கத்தின் வழியாக அறிமுகப்படுத்திக் கொள்ள முனைகின்றோம்.

ஆம்... 37 வருடங்கள் இலங்கை உள்ளூராட்சி நூலகத்துறையில் கடமையாற்றித் தற்பொழுது ஓய்வு பெற்றுள்ளவரான பிரம்மஸ்ரீ கணேசஐயர் சௌந்தரராஜசர்மா, பிறப்பிடமாக அனலைதீவையும் தற்போதய வாழிடமாக அளவெட்டியையும் கொண்டவராவார். தனது ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் அனலைதீவு சதாசிவ மகாவித்தியாலயத்திலும், உயர் கல்வியை வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயத்திலும் கற்ற இவர், 1953ம் ஆண்டு மாசி மாதம் 19ம் திகதி பிறந்தவராவார். விஞ்ஞானத்துறைப் பாடங்களிலே கல்விகற்ற பொழுதும் பின்னர் தனது சொந்த முயற்சியினால் கலைத்துறைப் பாடங்களைக் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரி மாணவனாக இணைந்து கலைமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். அத்துடன் நூலகவியல் டிப்ளோமா கற்கையையும் மேற் கொண்டிருந்தார்.

அனலைதீவு வடலூர் அ.த.க. பாடசாலையில் மூன்று ஆண்டுகள் வசதிக்கட்டண ஆசிரியராகக் கடமையாற்றி, 1979ம் ஆண்டு நவம்பர் மாதம் 28ம் திகதி அனலைதீவு பொதுநூலகம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது அதன் முதல் பணியாளராகச் சேர்ந்து காலப்போக்கில் உள்ளூராட்சி நூலகர் சேவையிலே உள்வாங்கப்பட்டு முதல் நூலகராக இந்நூலகத்திலே கடமையாற்றினார். இவர் சேவையாற்றும் காலத்திலே இவரது

முயற்சியினால்இந்நூலகம் பத்தாயிரம் நூல்களைக் கொண்ட தீவுப்பகுதியின் சிறந்த நூலகமாக முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இவரது கையெழுத்திலே வெளியிடப்பட்ட "அனலை" என்ற சஞ்சிகை 21 இதழ்கள் வெளியிடப்பட்டன. தற்பொழுது அச்சுப் பிரதியாக இச்சஞ்சிகை வெளிவந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. கல்வியில் மிகக்கஷ்ட பிரதேசமாகக் கருதப்படும் இப்பிரதேச மாணவர்கள், மக்கள் இந்நூலகத்தின் பணிகளின் ஊடாக எழுத்தாற்றலை, பேச்சாற்றலை, வாசிப்புப் பழக்கத்தை மேலும் சிறப்பாகவும் ஆவணமாக்கல் முயற்சியை மேம்படுத்தவும் இவர் எடுத்த செயற்பாடுகள் இன்றும் சமூகத்திற்குப் பயன் தந்து கொண்டிருக்கின்றன. அடுத்து ஊர்காவற்றுறை பொதுநூலகத்தில் மூன்று ஆண்டுகள் பணிபுரிந்தார். அக்காலத்திலே இவர் மலராசிரியராக இருந்து வெளியிட்ட ஊர்காவற்றுறை பிரதேசசபை உள்ளூராட்சி வாரச் சிறப்பு மலர் 2003 இல் இப்பிரதேசம் பற்றிய தகவல்களை ஆவணப்படுத்தியிருந்தார். அந்தத் தகவல்கள் தற்பொழுதும் பலராலும் பயன்படுத்தப்படுகின்றன.

2006ம் ஆண்டு தொடக்கம் 2013 வரை சுன்னாகம் பொது நூலக நூலகராகப் பணிபுரிந்தார்.இந்தக்காலத்திலே சுமார் பத்தாயிரம் புத்தகங்கள் வரை நூலகத்தில் இணைத்ததுடன் இருபதாயிரம் வரையான நூல்கள், நூற்றுக்கணக்கான சஞ்சிகைத் தொகுப்புக்கள், எழுபது தலைப்புக்களில் ஒட்டுப் புத்தகங்கள் வரை நூலகவளங்களைக் கொண்ட தரம் 2 நூலகமாக மேம்படுத்தினார். அத்துடன் மாகாண மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் விருதுகளையும் சான்றிதழ்களையும் பெற்றவராவார்.

இவர் சுன்னாகம் பொது நூலகத்தில் கடமையாற்றிய பொழுதும் "வெள்ளிமலை" என்ற பெயர் கொண்ட சஞ்சிகையை 2006ம் ஆண்டு ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்திலே கையெழுத்துச் பிரதியாக மூன்று மாதங்கள் வெளியிட்டதுடன் 2007 முதல் 2013 வரை அச்சுப்பிரதியாக 12இதழ்கள் வரை வெளியிட்டு நூலகங்களினால் சஞ்சிகை வெளியிடும் பாரம்பரியத்தை இந்த மண்ணில் உருவாக்கினார். இம்முன்னோடி முயற்சி தற்பொழுது தேசிய நூலகம் மற்றும் ஆவணவாக்கல் சபையால் தேசிய வாசிப்பு மாதத்தின் ஒரு செயற்பாடாக நடைமுறைப்படுத்தும் வண்ணம் அனைத்து நூலகங்களுக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இவர் தனது சேவைக் காலத்திலே 2013ம் ஆண்டு ஓய்வு பெறும் வரை பல சஞ்சிகைகள், சிறப்பு மலர்கள் போன்றவற்றில் வில்லுப்பாட்டு, நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள் போன்ற பல ஆக்கங்களைப் படைத்து அதற்கான பாராட்டையும் பெற்றுக் கொண்ட ஒரு இலக்கிய கர்த்தாவும் ஆவார். அவற்றுள் முக்கியமானவை இக்கட்டுரை நிறைவிலே அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன.

தொலைக்காட்சி, இன்ரர்நெட், முகப்புத்தகம் போன்ற சாதனங்கள் உலகத்திலே நடைபெறும் காட்சிகளையும், நாடகங்கள், சினிமா, விளையாட்டு போன்ற நிகழ்வுகளையும் காட்சிப்படுத்தி பொதுமக்களை ஈர்த்துள்ளதுடன் இருந்த இடத்தில் இருந்து கொண்டே எல்லாவற்றையும் பார்க்கக் கூடிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளதைத் தொடர்ந்து கலைகளான தெருக்கூத்து, நாட்டியம், வில்லுப்பாட்டு, பாட்டுக் கச்சேரி போன்றவை பொலிவிழந்து காணப்படும் இந்தக் காலத்திலே இவர் பல எழுத்தாக்கங்களை உருவாக்கி அவற்றை மக்கள் மத்தியிலே பிரபலப் படுத்தியது மிகவும் வரவேற்கத்தக்க செயலாகும். இம்முயற்சியிலே அவர் கணிசமான வெற்றி பெற்றுள்ளார். இவர் 2013ம் ஆண்டு ஓய்வு பெற்ற பிற்பாடு மிகத் தீவிரமாக சமூகப் பணிகளிலும் எழுத்துப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றார். கையெழுத்துப் பிரதிகளாக உள்ள தனது ஆக்கங்களையும் மற்றும் மலர்களிலே வெளியிடப்பட்ட தனது எழுத்துக்களையும் நூலுருவாக்கும் முயற்சியிலே இவர் தற்போது ஈடுபட்டுள்ளார்.

வலிகாமம், மற்றும் தீவுப்பகுதி சம்பந்தமான நூல் விபரப் பட்டியல்கள் தயாரிப்புப் பணிகளில் தற்பொழுது ஈடுபட்டுவருகின்றார். மேலும் “அனலைதீவு தினசரிதை” எனும் (Analaitivu Diary) கடந்த நூறு ஆண்டு கால நிகழ்வுகளின் தொகுப்புப் பணியில் ஈடுபட்டிருப்பதுடன் அனலைதீவு அந்தணர் பரம்பரையினர், ஆளுமை மிக்க ஆசிரியர்கள் ஆகியோரின் வாழ்க்கை வரலாறுகளை நூலாக்கும் முயற்சியிலும் தற்பொழுது கவனம் செலுத்தி வருகின்றார். இவர் ஒரு எழுத்தாளர் மட்டுமல்ல சிறந்த தொரு கிராமியக் கலைஞரும் கூட. பாடசாலைக் காலத்திலிருந்து தற்காலம் வரை இவர் பல நாடகங்களை உருவாக்கி அவற்றை நெறிப்படுத்தி அவற்றிலே நடித்து மேடையேற்றி உள்ளார். அவை அனைவரதும் பாராட்டையும் பெற்றுள்ளன.

இதுவரை பத்துசிறப்பு மலர்களின் தொகுப்பாசிரியராக இருந்து வெளியிட்டுப் பெற்ற அனுபவத்தால் மலர் வெளியீடுதல் தொடர்பாக இவர் பலருக்கும் ஆலோசனைகளை கூறி வருவதுடன் ஆக்கங்களையும் அந்த மலர்களுக்கு வழங்கி வருகின்றார். இவரது ஆவணவாக்கற் பணிகளுக்காகவலிவடக்கு பிரதேச செயலகம் கலைச்சுடர் விருது வழங்கிக் கௌரவப்படுத்தியுள்ளது.

பார்வைக்கு எளியவராகவும், இனியவராகவும் தென்படும் இவர் மேன்மேலும் கலைத்துறைக்கும் நூலகத்துறைக்கும் பணிபுரிந்து இவ் வையத்திலே வாழ்வாங்கு வாழ்வதற்கு எல்லாம் வல்ல கும்பழாவளையான் துணைபுரிய வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

**இவர் பெற்றுக்கொண்ட விருதுகள்**

- வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தின் கலைச்சுடர் விருது – 2014
- சுன்னாகம் நூலகப் பொன்விழா ஞாபக விருது – 2014
- அளவெட்டி நூலகம் - எழுத்தாளர் கௌரவ விருது – 2018
- அனலைதீவு நூலகம் - எழுத்தாளர் கௌரவ விருது
  அனலை அறிவொளி விருது – 2018
- வடக்கு மாகாணப் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்
- கலைஞர் கௌரவ விருது – 2019


| இல | நிகழ்வு வகை | வெளியிட்ட ஆண்டு | | தலைப்பு |
|---|---|---|---|---|
| 01 | வில்லுப்பாட்டு | 2007 | (1) | நூலகமும் நாமும் |
| | | 2009 | (2) | புத்தகம் தரும் வித்தகம் |
| | | 2010 | (3) | வேலிக்குள் தாலி |
| | | 2010 | (4) | சிறுவர் இலக்கியம் |
| | | 2013 | (5) | ஆறும் அறுபதும் |
| | | | | |
| 02 | நாடகங்கள் | 2009 | (1) | பெண் வாழ்வின் தரிசனங்கள் |
| | | 2009 | (2) | நித்தம் நித்தம் சுத்தம் |
| | | 2010 | (3) | அசட்டு ராமு |
| | | 2010 | (4) | வைத்தியருக்குப் பைத்தியம் |
| | | | | |
| 03 | கவிதைகள் | 2008 | (1) | கவியரங்கம்- உள்ளூராட்சியின் உன்னதம் |
| | | 2012 | (2) | யார்க்கெடுத்துரைப்போம் |
| | | 2015 | (3) | வீழ்ச்சி நிலையில்லை |
| | | | | |
| 04 | சில கட்டுரைகள் | வெள்ளிமலை | (1) | 21ம் நூற்றாண்டு அறிவுக்கான நுழைவாசல் |
| | | உதயன் | (2) | அருகிவரும் வாசிப்புப் பழக்கத்தை மேலும் கருகி விடாது காப்பாற்றுவோம் |
| | | மாருதப்புரவீகம் | (3) | வலிகாமம் வடக்கு பிரதேச பத்திரிகைகள் சஞ்சிகைகள் ஒரு ஆரம்ப ஆவண அறிக்கை |
| | | வலி.தெற்கு. பிரதேச செயலகம் சிறப்பு மலர் | (4) | வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவு நூலகங்கள் வரலாறும் வருங்காலமும் |
| | | கும்பளாவளை கும்பாபிடேக சிறப்பு மலர் | (5) | பார்க்கவ புராணம் என்னும் ஸ்ரீ விநாயகர் புராணம் |

இடப் பற்றாக்குறையினால் அனைத்து ஆக்கங்களையும் பணிகளையும் குறிப்பிட முடியவில்லை.

வ.நல்லதம்பி.
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி

## புலம்பெயர்ந்து கனடாவில் வாழ்ந்து வரும் மணிவிழா காணும் "மணவறை பாலன்" அவர்களுடன் நேர்காணல்

தமிழர்களின் கலையம்சமாக திகழும் சப்பறம்,மணவறை, சிகரம் போன்றவற்றை புலம் பெயர்ந்து கனடாவில் வசித்தாலும் மணிச்சப்பறத்தை கண்மணி போல் காத்து வரும் மணவறை திரு.க.தனபாலசிங்கம் அவர்களுடன் நேர்காணல்.



நேர் கண்டவர் :- திரு.வ.நல்லதம்பி

**கேள்வி:- வணக்கம் பாலண்ணை உங்கள் சுயவிபரத்தை சொல்லுங்கள்?**
பதில்:-

என்னுடைய முகவரி தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவிலடி, அளவெட்டி வடக்கு, அளவெட்டி,கிராம சேவையாளர் பிரிவு அளவெட்டி வடக்கு J/215

எனது பிறந்த திகதி 19.11.1944ம் ஆண்டு. தற்போது 75 வயது எனது தொழில் தோட்டம், சப்பறம், மணவறை கட்டுதல் என்பனவாகும். எனது ஆரம்ப கல்வியை யா/ அளவெட்டி வடக்கு சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை யா/ தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் கற்றுக் கொண்டேன். 1975ம் ஆண்டு மங்கையர்க்கரசி என்னும் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டேன். நான்கு பிள்ளைகள் பிறந்தார்கள். மூத்த மகன் சபேசன் தற்போது வசந்தம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக இருக்கிறார். மிகுதி மூவரும் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். மனைவியும் அவர்களுடன் இருக்கிறார். நான் இலங்கை பாஸ்போட்டில் கனடாவில் வசித்து வருகிறேன். வருடம் ஒரு தடவை இங்கு வந்து தவளக்கிரி முத்துமாரி அம்மன் கோவில் நான்காம் ஆடிச் செவ்வாய் திருவிழாவை சப்பறம் கட்டிச் சிறப்பாகச் செய்து வருகிறேன்.

**கேள்வி:- நல்லது, ஆலயங்களின் திருவிழாக்களை அலங்காரத்தில் சிறப்பிப்பதும் இல்லத்தில் நடைபெறும் மணவிழா மேடையை எழிலாக்கிச் சிறப்பிப்பதுவுமானஇத்தொழிலை விரும்பி எடுத்ததற்கான காரணம் என்ன?**

பதில்:-

என்னுடைய தகப்பனார் பெயர் கதிரமலை ஆனால் அவருடைய பெயர் அநேகம் பேருக்குத் தெரியாது. "சப்பறம்" என்றால்தான் தெரியும். அவர் தோட்டம் செய்து கொண்டு பக்தி நேரமாக 1927ம் ஆண்டு சப்பறம் கட்டும் தொழிலில் ஈடுபடத் தொடங்கினார். நான் சிறு வயதில் இருந்து சித்திரம் கீறுவதில் ஆர்வமாக இருந்தேன். பாடசாலை மட்டத்தில் தேசிய ரீதியில் சித்திரப் போட்டிகளில வெற்றி பெற்றிருக்கின்றேன். என்னுடைய தகப்பனாருக்கு 02 ஆண் பிள்ளைகளும் 02 பெண் பிள்ளைகளும் இருந்தார்கள். அண்ணன் க.மகாலிங்கம் ஒரு கட்டட வடிவமைப்பாளரும் படவரைஞரும் ஆவார். அவர் படிப்பில் அக்கறையாக இருப்பார். நான் சித்திரம் கீறுவதில் அக்கறையாக இருந்த படியால் படிப்பில் அக்கறை குறைவாக இருந்தது. அதே நேரத்தில் தந்தையார்தன் தொழிலுக்கு என்னை பயன்படுத்துவதை வழமையாக்கிக் கொண்டார். மேற் படிப்பைத் தொடரக்கூடிய முறைக்கு என்னைக் கற்க விடவில்லை. என்னுடைய படிப்பை 1962ம் ஆண்டு முடித்துக் கொண்டு தந்தைக்கு உதவியாக இருந்து வந்தேன். 1965ம் ஆண்டு நான் தனியே தொழில் தொடங்கி விட்டேன்.

**கேள்வி:-**

**தந்தையாருடன் பெற்ற அனுபவ அறிவு துணைசெய்ய தனியே தொழில்தொடங்கியபின் நீங்கள் பெற்ற சாதக பாதகம் பற்றி கூறுங்கள்**

பதில்:-

**சாதகம் :**

1965ல் தொழில் தொடங்கும் பொழுது வரவேற்பு இருந்தது. நல்ல வருமானம் வந்தது. போட்டித்தன்மை குறைவாக இருந்தது. காரைநகர்க் கோவில்கள், வடமராட்சிக் கோவில்கள், தென்மராட்சிக் கோவில்கள் போன்றவற்றிற்கு மாட்டு வண்டியில் கொண்டு சென்று சப்பறம், சிகரம் போன்றவற்றைக் கட்டியதை இன்னும் மறக்க முடியாமல் உள்ளது. அந்த சந்தோசம் இன்று இல்லை. அந்த காலத்தில் மருதடிப் பிள்ளையார் ஆலய

திருவிழாவிற்குச் சப்பறம் கட்டினால் 03 சதம் கிடைக்கும். அந்த நேரம் அது பொற்காசு. இன்று 30,000ரூபா கிடைத்தாலும் போதாமல் உள்ளது. மாட்டு வண்டிலில் எமது பொருட்களைக் கொண்டு செல்லும் போது செலவும் இல்லை. கூலி ஆட்களுக்குக் குறைந்த சம்பளம். சாப்பாட்டுக் காசு இல்லை. மக்களின் வரவேற்பு எங்களை மேலும் சந்தோசப்படுத்தும். 1970ம் ஆண்டில் தொழில் மேலும் சிறப்படைந்தது. 10 பேருக்கு நிரந்தரத் தொழில் வாய்ப்பு வழங்கக் கூடியதாக இருந்தது. 04 வண்டில் மாடுகள் இருந்தன. இந்த வண்டிலில் தான் எங்கள் பொருட்களை ஏற்றி இறக்குவோம். நேற் (விலை கோரல்) ஒன்றும் கேட்க மாட்டார்கள்.நாங்கள் எதிர்பார்க்கும் பணத்திலும் பார்க்கக் கூடுதலான தொகை எமக்கு கிடைக்கும். மணவறை, சப்பறத்தின் கலை அழகிற்கு ஏற்பப் பணம் கிடைக்கும். சித்திரை மாதம் வடசேரி பிள்ளையார் ஆலயத்தில் தொடங்கினால் புரட்டாதி மாதம் வல்லிபுரக் கோவில் திருவிழா முடியும் வரை ஒவ்வொரு பட்சத்திற்கும் எமக்கு தொழில் வந்து கொண்டிருக்கும். வைகாசி மாதம் கும்பளாவளை கொடியேறினால் அங்கு 11 திருவிழாக்கள் நடைபெறும். அங்கு 1ம் திருவிழா, 3ம் திருவிழா, 4ம் திருவிழா, 5ம் திருவிழா, 7ம் திருவிழா, 8ம் திருவிழா போன்ற ஆறு திருவிழாக்களுக்கு பகலில் ஒரு சுவாமி சப்பறமும் இரவிற்கு மூன்று சுவாமி சப்பறமும் கட்டிக் கொடுப்போம். பதினொராம் நாள் எமக்கு நல்ல வருமானம் கிடைக்கும். புதிய சப்பறம் அமைத்தால் வேட்டி சால்வை தட்சணை போன்றவை எமக்குத் தந்து எம்மை சந்தோசப்படுத்துவார்கள். அந்தக் காலம் மீண்டும் வராது. 1983ம் ஆண்டு வரை வளர்ச்சிப்பாதையில் சென்று கொண்டிருந்தோம்.

**சவால்:**

1990ம் ஆண்டு நாட்டில் தொடங்கிய 2ம் ஈழப்போர் எம்மை ஆட்டம் காண வைத்தது. வீடு வாசலை விட்டு அரை குறை பொருட்களுடன் இடம் பெயர்ந்து திரிந்தோம். உரும்பிராயில் இருந்தோம். பின்பு இடம்பெயர்ந்து வரணிக்குச் சென்றோம். பின்பு அங்கிருந்து வன்னிக்குச் சென்றோம். அப்படியே வெளிநாடு சென்று விட்டோம். 3 சப்பறம் மணவறைகள் இருந்தன. இன்று ஒரு சப்பறத்தை புதிதாக செய்து மருமகன் சசிதரனிடம் கொடுத்துள்ளேன். அவர் இதை ஒரு பகுதி நேர தொழிலாக செய்து வருகிறார். நான் கனடாவில் இருக்கும் பொழுது செந்தூர் முருகன் கோவிலுக்கு அங்கு இருக்கும் பொருட்களைக் கொண்டு சப்பறம் செய்து

கொடுத்துளளேன். அதற்கு அங்கு நல்ல வரவேற்பு கிடைத்தது. அங்கு என்னை கௌரவப்படுத்தினார்கள்.

**கேள்வி:-**

**1970ற்கு முன்னர் சப்பறம் கட்டுவதற்கு பயன் படுத்திய பொருட்கள் என்ன?**

பதில்:-

அப்போது இரண்டு வகையான சப்பறங்கள் இருந்தன.

1. கண்ணாடிச் சப்பறம்.
2. மணிச்சப்பறம்.

கண்ணாடிச் சப்பறத்திற்கு தேவையான பொருட்கள் பலகை, கண்ணாடி, பனைமரம், வத்தி என்று சொல்லப்படும் ஒட்டுப்பொருள். இது இந்தியாவில் இருந்து வரும். இச்சப்பறம் பாரம் கூடியது. தற்போதைய ஆட்கள் அதைத் தூக்கிக்கொள்ள மாட்டார்கள்.

மணிச் சப்பறத்திற்கு தேவையான பொருட்கள் வெல்வெற் துணி, சிறிய மணிகள், நூல், ஈர்க்கு, வத்தி ஒட்டுப் பொருள். இச் சப்பறம் சற்று பாரம் குறைவு. இதற்கு தற்போதும் நல்ல வரவேற்பு உள்ளது.

**கேள்வி:- 1990ற்கு பின்னர் தற்போது கட்டும் சப்பறத்திற்கு பெயர் என்ன? கட்டுவதற்கு பயன்படுத்தும் பொருட்கள் என்ன?**

பதில்:-

தற்போது கூடுதலான பாவனையில் இருப்பது பிளாஸ்ரிக் சப்பறம். பாவிக்கும் பொருட்கள் பலகை, பிளாஸ்ரிக், கடதாசி, நூல், பெயின்ற் முதலியன.

**கேள்வி:- பழைய சப்பறங்களுக்கும் பிளாஸ்ரிக் சப்பறத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?**

பதில்:-

பழைய சப்பறங்கள் பாரம் கூடியவை. உறுதியானவை. ஒளிப்பு கூடியவை. மழைக்கு நனைந்தால் மணிகள் கறுத்துவிடும். அதனால் நீண்ட காலம் பயன்படுத்தலாம். பிளாஸ்ரிக் சப்பறம் பாரம் குறைவு. உறுதி குறைவு.

ஒளிப்புக் குறைவு. ஆனால் மழையில் நனைந்தால் பாதிப்பு ஏற்படாது. அதனால் நீண்ட காலம் பயன்படுத்த முடியாது.

**கேள்வி:- பொதுவாகச் சமூகத்தில் சப்பறம், மணவறை, சிகரம் பற்றிய பார்வை எப்படி உள்ளது?**

பதில்:-

1990ற்கு முன்னரான சமூகம் பணத்தை பார்க்காமல் தங்கள் திருவிழாவிற்கு எத்தனை சப்பறம், சிகரம் கட்டுவது என்று கட்டி அழகு பார்ப்பார்கள். 7ம் திருவிழாவிற்கு 4 சிகரம் கட்டினால் 8ம் திருவிழாவிற்கு 6 சிகரம் கட்டுவார்கள். அதுபோல் சப்பறமும் உயரம், அகலம் ஆகியவை கூட்டிக் கட்டி அழகு பார்ப்பார்கள். எங்களுக்கு அது சந்தோசமாக இருக்கும். யுத்தம் தொடங்கி எல்லாவற்றையும் அழித்து விட்டது. பணம் பணம் என்று அலைந்து திரிகின்றார்கள் நீண்ட நேரம் செலவழித்து ஒரு வேலையை செய்ய மாட்டார்கள். கலை அம்சத்தை இரசிக்க மாட்டார்கள். புதிய புதிய மொடல்களை எதிர்பார்க்கிறார்கள். வெளிநாட்டு மோகம் காரணமாக உள்நாட்டு கலைகளை பழைய மொடல் என்கிறார்கள். முன்னைய காலத்தில் புரோகித முறையில் தான் தொழில் நடைபெற்றது. இக் காலத்தில் பணத்திற்காக தான் தொழில் நடைபெறுகின்றது. இதனால் இத் தொழிலால் வருமானம் குறைவு. இத் தொழில் செய்தவர்கள் கல்யாணப் பந்தல், சொக்கட்டான் பந்தல் போன்றவை செய்து உழைக்கிறார்கள்.

**கேள்வி:- இன்றைய சமூகத்திற்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**
பதில்:-

கலை விலை போகாது. பணம் வரும்; போகும். பணம் நிலையற்றது. கலை ஒரு மனிதனைப் பூரண திருப்திப் படுத்தும். ஆக்வே கலைகள் வளர்ந்தால் வன்முறைக் கலாச்சாரம் குறையும்.

**கேள்வி: உங்கள் எதிர்கால சிந்தனை என்ன?**
பதில்:-

10 வருடங்கள் கனடாவில் இருந்த படியால் பென்சன் இனிக் கிடைக்கும். அதன் பின் இங்கு வந்து இத் தொழிலை தொடர விரும்புகிறேன்.

நன்றி

தேசிய வாசிப்பு மாதம் 2018 இல் தரம் 03
மாணவர்களுக்கான குழுப்பாடலில் முதலிடம் பெற்ற பாடல்.

## நூலும் நூலகமும்

யா/அருணோதயக் கல்லூரி.
தரம் 03 மாணவர்கள்

வீட்டிற்கு வெளிச்சம் சாரளத்தின் ஊடே
அறிவிற்கு வெளிச்சம் வாசிக்கும் நூலே
வாசிக்காமல் யாருக்கும் வளர்வதில்லை அறிவு இதனை
நேசிக்காமல் போனால் வளர்ச்சிக்கே முறிவு

பொது அறிவு பெற்றிடவே எப்பொழுதும் வாசிப்போம்
அறிவுள்ள புத்தகங்கள் அனைத்தையுமே நேசிப்போம்
அடிமைகளின் சூரியனாம் ஆபிரகாம் லிங்கனையே
அமெரிக்காவின் தலைவனென ஆக்கியதும் புத்தகமே

மாணவப் பருவத்திலே புத்தகத்தின் வாசிப்பு
சதத்தினையும் தொட வைக்கும் சாதிக்க வழிவகுக்கும்
ஊருலகம் யாவும் கற்றறியக் காலம் கொள்ளும்
அனைத்தும் கற்க குறுகிய காலம் போதாதே

இனங்களின் ஒற்றுமை நூல்வழி தொடரும்
பிணக்கினைத் தீர்த்தே அமைதிக்கு வழிவகுக்கும்
கற்பனை உலகிற்கே இட்டுச் செல்லும் புத்தகங்கள்
மூளைக்கும் சிறகு முளைக்கும் மூவுலகுக்கும் இட்டுச் செல்லும்

நூலகங்கள் சென்றுவர நாளும் நீ தவறிடாதே
நுண்மதி பெருக்கி வைக்கும் நூல்கள் கற்க மறந்திடாதே
வாசிப்பை நாளும் நேசிப்போம் மூச்சுடனே
நல்ல நூல் அனைத்தையும் சுவாசிப்போம்

அறிவாளியாக்கும் உன்னை அறிவாய்
அனைத்துலகும் மகிழ்ந்திட நீ உயர்வாய்தேசிய வாசிப்பு மாதம்

2018 இல் தரம் 09 மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை

## இனங்களுக்கிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு

சு.விஸ்ணுஜன்
தரம் 09
யா/அருணோதயக் கல்லூரி.

தற்காலத்தில் வளர்ந்து வரும் விஞ்ஞானத்தொழினுட்பம் காரணமாக மக்களிடையே வாசிப்புப் பழக்கம் அருகி வருகின்றது. எந்த விடயம் வேண்டுமோ இணையத்தில் தேடிப் பெறுகின்றார்கள். இதனால் எம்மிடமுள்ள "தேடல்" என்ற எண்ணம் அருகிச் செல்கின்றது. வாசிப்புப் பழக்கம் நம்மிடம் இல்லாததால் புரிந்துணர்வு என்ற எண்ணம் நம்மிடம் இல்லை. இதனால் இனங்களுக்கிடையிலும் புரிந்துணர்வு இல்லை.

தற்கால மனிதர்கள் நூல் நிலையத்திற்குச் செல்வதென்றால் அது மிகவும் கடினமான விடயமாகும். இன்று நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை இனங்களுக்கிடையிலான மோதலாகும். இதனால் பல உயிர் இழப்புக்கள், பொருளாதார நெருக்கடிகள், சொத்துச் சேதமடைதல் போன்றவற்றைப் பாதிப்புக்களாகக் குறிப்பிடலாம். இவ்வாறான பிரச்சனைகள் ஏற்படப் பிரதான காரணம் மக்களிடையே தெளிவான அறிவின்மையே ஆகும். நாம் வெவ்வேறு இனத்தின் பெயரால் அழைக்கப்பட்டாலும் நாம் அனைவரும் மனிதர்தான். பாரதியார் அவர்கள் தனது பாடலில் " வழிந்தோடும் குருதியிலும், கண்ணீரிலும் சாதி தெரிவது உண்டோ அப்பா" எனப் பாடியுள்ளார். இப்பாடலின் ஊடாக பாரதியார் இனங்களின் ஒற்றுமை பற்றிய கருத்தினைக் கூறியுள்ளார்.

நாம் மனிதன் என்ற வகைக்குள் அடங்குவதற்கு நம்மிடமுள்ள அறிவே காரணமாகும். இவ் அறிவை நாம் பாடசாலையில் சென்று பெருக்கிக் கொள்கிறோம். ஆனாலும் எம்மால் ஒரு சில விடயங்களையே கற்றுக் கொள்ள முடிகின்றது. ஆனால் நாம் நூலகத்திற்குச் சென்று வாசிப்பதனால் எம்மால் பூரண அறிவைப் பெற்றுக் கொள்ள முடிகின்றது. "நாம் கற்றது

கையளவு கல்லாதது உலகளவு" என்ற ஒரு பொன்மொழி உள்ளது. நாம் இந்த உலகில் உள்ள அனைத்துப் பெரியோர்களையும் எடுத்து நோக்குவோமானால் அவர்கள் அனேகர் பாடசாலைக்குச் செல்லவில்லை. ஆனால் அவர்கள் வாசிப்பதால் தான் உயர்ந்தார்கள். உதாரணமாக ஆபிரகாம் லிங்கனை எடுத்து நோக்குவோமானால் அவர் பகல் முழுவதும் வேலை செய்து விட்டு இரவில் வீதி விளக்குகளின் கீழ் அமர்ந்து வாசிப்பார். பிற்காலத்தில் அவர் தான் அடிமைத்தனம் இல்லாத புரிந்துணர்வுள்ள மக்களைக் கொண்ட அமெரிக்காவை உருவாக்கினார். இன்று உலகெங்கும் இலத்திரனியல் சாதனங்களை வழங்கி வருவதில் முன்னிலையில் திகழும் நாடான ஜப்பானில் மக்கள் கையில் தொலைபேசியை விட புத்தகங்களையே எடுத்துச் செல்வார்கள். ஜப்பானில் இனம், மொழி என்ற வேறுபாடே கிடையாது. அதனால் தான் ஜப்பான் இன்று இலத்திரனியல் விற்பனையில் சிறந்த நாடாக உள்ளது.

இந்தியாவில் உள்ள நூலகம் ஒன்றில் ஏறக்குறைய பதினொராயிரம் தலைப்புக்கள், வரைபடங்கள் மற்றும் ஓவியத் தொகுப்பு மற்றும் பனை ஓலைகளில் எழுதிய கையெழுத்துப் பிரதிகளைக் கொண்டுள்ளது. நம்தேசத்து நூல் நிலையங்களில் நம் அறிவைப் பெருக்கவல்ல பல நூல்கள் காணப்படுகின்றன. வாசிப்பதன் மூலம் நமக்கு இனம் பற்றிய விளக்கம் கிடைக்கும். ஆகையால் இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வைக் கொண்ட சிறந்த நாடாக இலங்கை மாற்றமடையும்.

ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் அவனைக்
காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி

– ஜீலியஸ் சீசர் –

தேசிய வாசிப்பு மாதம் 2018 இல் உயர்தர
மாணவர்களுக்கான கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை

## இனங்களுக்கிடையே புரிந்துணர்வினை ஏற்படுத்துவதற்கான வாசிப்பு

ஜீ.சோமிகா
G.C.E A/L 2019
யா/அருணோதயக் கல்லூரி.

நாவின் அசைவில் இசையாய் பிறந்தது மொழி
வண்ணங் கொண்ட எம்மன மலரில்
தேனின் ஊற்றாய் தெரிந்தது வாசிப்பு

கவிமழை பொழிய எம் உள்ளக்
கருமுகிலாகத் திரண்டது வாசிப்பே.
புவியிடை மாந்தர் இனத்திடை மனப்
புரிதலை தந்திடும் வாசிப்பே.

ஒற்றுமை காண ஒளிமுதலானது வாசிப்பே
கற்றதை வாழ்வுப் பாதையாய் கொண்டு
வெற்றிகள் காண வழிகாட்டியும் வாசிப்பே.
தாழ்வுகள் தடைகள் தகர்ப்பதும் வாசிப்பே

அன்னை மொழியின் ஆற்றல்கள் பெற்றதும்
பின்னை பிறமொழி பேரழகுணர்ந்ததும்
விண்ணை எட்டிடும் அன்பினை பொழிந்ததும்
மண்ணில் அயலார் மாண்பினை உரைத்ததும்
கண்ணாய் கருதிய வாசிப்பின் நேசிப்பே.

விழுமிய வாழ்வினை விரும்பிட வைத்ததும்
தொழுதிடும் தெய்வம் தோன்றிடச் செய்ததும்
அனுபவ மொழிகள் அறிமுகம் தந்ததும்

இனங்களிடையே இடைவெளி அகற்றியே
இதயங்கள் இணைந்திட ஏதுவாய் இருப்பதும்
மனிதரை மதித்திடும் பண்பினை ஈய்வதும்
இனிதினிதான நூல்களின் வாசிப்பு என்றேயுணர்.

தேசிய வாசிப்பு மாதம் 2018 இல் வாசகர்களுக்கான
கவிதைப் போட்டியில் முதலிடம் பெற்ற கவிதை

**நூலும் நூலகமும்**

த.விதுஷன்
அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

ஞானத்தின் வித்து நூலகம்
கற்றோரின் சொத்து புத்தகம்
உண்ர்வுக் குவியலின் உறைவிடம் நூலகம்
உண்மைக் கோவிலின் கோபுரம் புத்தகம்
எடுத்துப் படிக்க இனிமை கூட்டுமிடம் நூலகம்
புரட்டப் புரட்ட புதுமைகள் காட்டும் புத்தகம்
அமைதிப்படுத்தி மதி வளர்க்குமிடம் நூலகம்
மறைந்த தலைவர்கள் மறையாமல் வாழுமிடம் புத்தகம்

விலைமதிப்பற்ற நூல்களின் வசிப்பிடம் நூலகம்
அனுபவத்தில் ஆழ்ந்து வந்தது புத்தகம்
சாதி மத பேதமின்றிச் சமத்துவம் கற்பிக்கப்படுமிடம் நூலகம்
பல்லாண்டுச் சரித்திரத்தை சொல்லால் தீட்டும் ஓவியம் புத்தகம்
அறிவாளிகள் இருக்கும் ஞானாலயம் நூலகம்
கடன் கேட்காத நல்ல நண்பன் புத்தகம்
அகம் தூய்மையாக்கும் இடம் நூலகம்
புரட்டப் புரட்ட புத்தி புகட்டுவது புத்தகம்

தேசிய வாசிப்பு மாதம் 2018 இல் வாசகர்களுக்கான
கட்டுரைப் போட்டியில் முதலிடம் பெற்ற கட்டுரை

## நூலும் நூலகமும்

க.தனுஷிகா
அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.

**"கேடில் விழுச் செல்வங் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"**
**"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்
கெழுமையும் ஏமாப் புடைத்து"**

எனும் பொய்யாமொழியானின் நல்வாக்குகள் பொன், பொருள், மண், பதவி போன்றவற்றிற்கு இல்லாத -என்றென்றும் கெடுதலுக்கு உட்படாத- சிறந்த செல்வமாகிய கல்வியின் சிறப்பை நுட்பமாய் உணர்த்துகின்றன. கல்வி எனும் போது அதில் அனுபவக்கல்வியும், வாசிப்புக்கல்வியும் முக்கியமாக அமைகின்றன. இக்கல்வியைப் பெற்றுக் கொள்ள எமக்கு என்றும் உறுதுணையாய் நிற்பவை நூல்களும் நூலகங்களுமே.

மானிடராய்ப் பிறந்த எம் ஒவ்வொருவர்க்கும் எம் வாழ்வைக் கொண்டு நடாத்துவதற்கும், வாழ்வில் முன்னேறுவதற்கும் எவராலும் அழிக்க முடியாத கல்வியின் துணை இன்றியமையாத ஒன்றாகின்றது. இன்று கல்வியைப் பெற்றுக் கொள்வதற்காக குழந்தைகளைப் பாடசாலைகளுக்குச் சிறுவயதிலிருந்தே அனுப்புகின்றோம். நாளடைவில் பிள்ளைகள் தமது அறிவை வளர்க்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதைக் காட்டிலும் பரீட்சைக்கு விடையளிக்கும் நோக்கிலும், அதிகளவு புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கிலும் செயற்படுகின்றார்கள்.

அந்த வகையில் தாமாகச் சுயமாக வாசித்துப் புது விடயங்களை அறிந்து கொள்வது மாணவப் பருவத்தில் நன்மை சேர்க்கும். மாறாக ஆசிரியர் சொல்வதை அப்படியே கேட்டு மனனம் செய்து ஒப்பிக்கிறார்களே தவிர புதிதாக எதையும் தேடி அறிந்து படிப்பதற்கு முயற்சி செய்வதில்லை. அதற்கு அவர்களுக்கு நேரம் கிடைப்பதும் இல்லை. காலையில் பாடசாலை; மதியம் தொலைக்காட்சி, மாலை பிரத்தியேக தனியார் வகுப்புக்கள், பின்

சகபாடிகளுடன் வீண் அரட்டை இவ்வாறே அவர்களின் வாழ்க்கை ஓடிக்கொண்டு இருக்கின்றது. இதற்கிடையில் சிறிது நேரம் கிடைத்தாலும் அதில் தொலைபேசியும் சமூக வலைத்தளங்களும் தமக்கென இடம்பிடித்துக் கொள்கின்றன. தனியே பிள்ளைகளைக் குறை கூறி இவ்விடயத்தில் பயனேதும் இல்லை. ஏனெனில் பெற்றோர்கள் நூல்களைப் பற்றியோ நூலகங்களைப் பற்றியோ தேடி அறிதலின் முக்கியத்துவம் பற்றியோ பிள்ளைகளுக்கு எவ்வித அறிவித்தல்களையோ அறிவுறுத்தல்களையோ முன்வைப்பதில்லை. பிள்ளைகளிடம் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டியது பெற்றோர்களின் முதற்கடமையாகும்.

**"நவில் தொறும் நூனயம் போலும்**
**பயில்தொறும் பண்புடை யாளர் தொடர்பு"**

எனும் குறள் மூலம் நூல்களைப் படிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தையும், அதன் மூலம் பண்புடையவர் ஆவதன் சிறப்பையும் உணர்ந்து கொள்ள முடிகிறது. நல்ல நூல்களைப் படிப்பதால் அறிவு வளரும், உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும், எண்ணங்கள் நேர் பெறும், நமது ஆற்றல்கள் பெருகும், திறமைகள் மிளிரும், உற்சாகம் ஊற்றெடுக்கும், சோர்வு அகலும், மனம் நிறைவு பெறும், மொத்தமாய் வாழ்வு மேம்படவும் வாழ்வில் முன்னேறவும் வழி துலங்கும். நூல்களே என்றென்றும் நமக்கு சிறந்த நண்பர்களாய் இருக்கக்கூடியன. எம்மை வளமாக்கிடும் வளமாக்கிகளும் நூல்களே.

**"நூலகம் என்பது இயக்ககம் அல்ல இயக்கம்"** என்கிறார் இந்திய நூலகவியலின் தந்தை எஸ்.ஆர்.ரங்கநாதன்,
**"நூலகம் நமக்கு ஓய்வு நேர உலகம்"** என்றார் பேரறிஞர் அண்ணா,
**"நூல்களால் நைந்த நேயங்கள் தைப்போம்"** என்றார் அன்னை இந்திராகாந்தி,
**"புத்தகம் படிப்போம் வித்தகம் படைப்போம்"** என்றார் பெரியார்,
**"நுட்பங்கள் நுகர நூலகங்கள் செல்வோம்"** என்றார் கிரகம்பெல்,
**"ஒரு நூலகம் திறக்கப்படும் போது நூறு சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன"** என்றார் சுவாமி விவேகானந்தர்,
**"புத்தகத்தில் உலகத்தைப் படிப்போம், உலகத்தையே புத்தகமாகப் படிப்போம்"** என்கிறது உலகப் பொதுமறையாம் திருக்குறள்,
**"அடுத்த தலைமுறைக்கு பரிசளிக்க விரும்பினால் புத்தகங்களை பரிசாகக் கொடு"** என்கிறது சீனப்பழமொழி,

இவ்வாறான பெரியோர்களின் கருத்துக்களின் மூலமும், பழமொழிகள், பொன் மொழிகள் மூலமும் நூல்களினதும் நூலகங்களினதும்

முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள முடிகின்றது. இவற்றை உணர்ந்து நாமும் நூல்களையும் நூலகங்களையும் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

நூலகம் என்பது, பொது அமைப்புக்கள் நிறுவனங்கள் அல்லது தனிநபர்களால் உருவாக்கப்பட்டு பேணப்படுகின்ற தகவல் மூலங்களின் அல்லது சேவைகளின் ஒரு சேமிப்பு ஆகும். மரபு வழியான நோக்கில் இது நூல்களின் சேமிப்பு எனலாம்.

நூலகங்களை பாடசாலை நூலகம், பொது நூலகம், கல்லூரி நூலகம், பல்கலைக்கழக நூலகம், ஆராய்ச்சி நூலகம், சிறப்பு நூலகம், தேசிய நூலகம், வீட்டு நூலகம் எனப் பல்வேறு வகையாகப் பிரிக்கலாம்.

பாடநூல்களோடு மாணவர்களின் ஆற்றலையும், அறிவையும், பண்பையும் வளர்க்கும் பல நூல்களின் தொகுப்பிடமே பாடசாலை நூலகமாகும். சிறுவர்களுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தக்கூடிய உணர்த்த வேண்டிய முக்கியமான ஒரு இடமாக திகழ்கிறது. நூலகங்களிற்குச் சென்று நூல்களை எடுத்து வந்து படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைகளையும் நூலகங்களிற்கு அழைத்துச் சென்று புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தை அவர்களுக்கும் ஊட்ட வேண்டும்.

நூலகங்கள் மாணவர்களிற்கும், இளைஞர்களுக்கும் ஒழுக்கத்தை ஊட்டும், பகுத்தறிவுத் திறனை வளர்க்கும், நற்பண்புகளையும் தனிநாகரிகத்தையும் கற்றுத்தரும், வாழ்க்கைக்குத் தேவையான அனைத்தையும் அமுத சுரபியாய் அள்ளிக் கொடுக்கும்.

நூல்கள் வாசிப்பது என்பது ஓர் அற்புதக்கலை, வாசிப்பு மனதை ஒருமுகப்படுத்தி நினைவாற்றலைக் கூட்டும், கற்பனையையும் அறிவின் மேதா விலாசத்தையும் செழுமை செய்யும். புதிய புதிய பொருட்களையும் தந்து கொண்டே இருக்கும். வாசிப்பது போட்டிகள் நிறைந்த இந்த உலகில் நம்மை வெற்றியாளர்களாக மாற்றிக் கொள்ள உதவும். இளமையில் தான் மிகச்சிறந்த பண்புகள் பதியம் போடப்படுகின்றன. எனவே நூல்கள் வாசிக்கும் ஆர்வத்தை இளமையிலேயே ஊட்ட வேண்டும்.

நாம் நமது நண்பர்களுடன் கேளிக்கைகளிலும் வீண் பேச்சுக்களிலும், அரட்டைகளிலும் எமது பொன்னான நேரத்தை வீணடிக்கின்றோம். ஆனால்

நம்மை உயர்த்திக் கொள்ள புத்தகங்களைப் படிப்பதற்கு நேரம் இல்லை என்று புலம்புகின்றோம். இது வேடிக்கையான விடயம் அல்லவா? நமக்குக் கிடைக்கும் நேரத்தை வீணாக செலவு செய்யாது பயனுள்ள புத்தகங்களை படிப்போம்.

நல்ல நூல்களைப் படித்துக் கெட்டுப் போனவர்கள் யாரும் உலகில் இல்லை. புத்தகம் படிப்பதை கடமையாகக் கொண்டிருந்தவர்களும், வாசிப்பை உயிரென மதித்தவர்களும் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

எப்பொழுதோ நிகழ்ந்ததை நிகழ்ந்தது நிகழ்ந்தவாறு இப்பொழுதும் நாம் அறிந்து கொள்ள உதவுவது நூல்களே. எங்கோ நடந்ததைக் கண்டு பிடித்து அதை இங்குள்ள நமக்கு எடுத்து விளக்குபவை நூல்களே. எவரோ அறிந்ததை நாமும் தெரிந்து கொள்ள துணை நிற்பவை நூல்கள் தான். விஞ்ஞான வளர்ச்சியின் காரணத்தால் எத்தனை வசதி வாய்ப்புக்கள் இருந்தாலும் நூல்களின் சிறப்பை எவற்றாலும் எடுத்துக் கொள்ளவோ தக்க வைத்துக் கொள்ளவோ முடியாது.

புத்தகங்கள் பெற்றோரைப் போல அறிவுரை கூறும், மனைவியைப் போல தாங்கி நிற்கும், பிள்ளைகளைப் போல மகிழ்ச்சியளிக்கும், நெருங்கிய நண்பனாய் ஆலோசனை வழங்கும். அதனால் தான் அறிஞர் ரஸ்கின், **“புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் வேறு எதுவும், மனிதனுக்கு இருக்க முடியாது”** என்றார்.

**“நல்ல நூல்கள் நல்ல கனவுகளை வளர்க்கும், நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உருவாக்கும், நல்ல எண்ணங்கள் நல்ல செயல்களை உருவாக்கும்”** என இந்தியாவின் முன்னாள் குடியரசுத்தலைவர் டாக்டர் அப்துல் கலாம் கூறியுள்ளார். அவர் வழியில் சென்று நாமும் நல்ல நூல்களைப் படிப்போம், நல்ல கனவுகளை வளர்ப்போம், நல்ல எண்ணங்களை மனதில் விதைப்போம், நற்செயல்களையே செய்வோம்.

எப்படியும் வாழலாம் என்பது விலங்கு வாழ்க்கை, இப்படித்தான் வாழ வேண்டும் என்பது மனித வாழ்க்கை. முன்னோர்களின் அனுபவங்களையும் அறிவுரைகளையும் எடுத்துக் கொண்டு நூல்களையும் நூலகங்களையும் சிறப்புடன் பயன்படுத்தி எதிர்கால சந்ததியினருக்காக நூல்களையும் நூலகங்களையும் பாதுகாத்து அவற்றின் தேவை உணர்த்தி பரிசளிப்போம், சிறப்புடன் வாழ்வோம்.

***“வாசிப்பை நேசிப்போம் அதையே சுவாசிப்போம்”***

## வாசகர் வட்ட உறுப்பினர்கள்



**இருப்பவர்கள்** – திருமதி.க.விக்னேஸ்வரி (வா.வ.உ) திருமதி.த.போல்சுரேஸ் (நூலகர்) திரு.சோ.சுகிர்தன் (தவிசாளர்) திரு.இ.பகீரதன் (செயலாளர்) திரு.தி.தியாகச்சந்திரன் (பொறுப்பதிகாரி) திரு.க.சௌந்தரராஜசர்மா (வா.வ.உ)
**நிற்பவர்கள்** – செல்வி.வி.பிரியதர்சினி (வா.வ.உ) செல்வி.க.தனுஷிகா, (வா.வ.உ) திருமதி.நா.ராஜி, (வா.வ.உ) திரு.இ.நாகேந்திரம் (வா.வ.உ) திரு.மருதலிங்கம் (வா.வ.உ)

சமூகமளிக்காதவர் – திரு.ய.விதுசன்

## ஆலோசனைச்சபை உறுப்பினர்கள்



**இருப்பவர்கள்** – திருமதி.த.போல்சுரேஸ் (நூலகர்) திரு.மு.சண்முகநாதன் (ஆ.ச.உ) திரு.சோ.சுகிர்தன் (தவிசாளர்) திரு.இ.பகீரதன் (செயலாளர்) திரு.தி.தியாகச்சந்திரன் (பொறுப்பதிகாரி) திரு.மு.சந்திரசேகரம் (ஆ.ச.உ)
**நிற்பவர்கள்** – திருமதி.க.சிவகௌரி (ஆ.ச.உ) திரு.வ.நல்லதம்பி (ஆ.ச.உ) திரு.ம.செல்வராஜா (ஆ.ச.உ)திரு.த.கருணாகரன் (ஆ.ச.உ) திரு.ந.கமலநாதன் திரு.வை.சின்னப்பு (ஆ.ச.உ)

சமூகமளிக்காதவர்கள் – திரு.S.சஜீலன் திரு.s. மோகன்ராஜ் திரு.k.விஜயகுமார் திரு.P.தனராசா

# அளவெட்டியில் நாடகக்கலை

திருமதி.த.போல்சுரேஸ்

கலைத்துறைக்கு மறு பெயர் எனக்கூறின் அது அளவெட்டி என்றால் மிகையாகாது. இன்று வரும் சந்ததிக்கு நாடகம் என்றால் என்ன எனக்கேட்பின் அது தொலைக்காட்சியில் வருகிறதான தொடர் நாடகம் என்று தான் தெரியும். எனவே தான் நாடகத்துறைக்கு அடித்தளமிட்ட கலைகள் மலிந்த கிராமங்களில் ஒன்றாக அளவெட்டிக் கிராமமும் கருதப்படுகின்றமையால், அக்கலைகளுள் தேடல் கணக்கிற்கு அப்பாற்பட்ட, பழைமை வாய்ந்த ஒரு கலையாக, அளவெட்டிக் கிராமத்தில் வேரூன்றி தற்பொழுதும் பேணப்பட்டுவரும் ஒரு கலையாக இடம்பெற்று வருவது நாடகக் கலையாகும். அதனால் தான் அக் கலையை ஆவணமாக பேணவும் எதிர்கால சந்ததியினரும் அறியும் பொருட்டு இதனை தொகுத்துள்ளேன். இக்கலை காலத்தின் தேவைக்கேற்ப பல்வேறு வடிவங்கள், கோலங்களில் அரங்கேற்றப்பட்டு வந்தமை அறியக்கூடியதாக உள்ளது. நாடகக் கலையில் ஆர்வம் வைத்து, அதை வளர்த்தெடுப்பதில் ஈடுபாடு காட்டி இக்கிராமத்தில் வாழ்ந்து அமரத்துவம் பெற்ற கலைஞர்களையும், வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களையும், நாடகக்கலை பெற்று வந்த பரிணாம வடிவங்களையும் ஆவணப்படுத்துவதே இககட்டுரையின் நோக்கமாகும்.

அளவெட்டிக் கிராமத்தின் நாடகக்கலை அமைவை மூன்று கட்டங்களாக பிரித்து நோக்குவது பொருத்தமுடையதாகும். அவை

1. ஆரம்ப காலகட்டம் (இன்றைய சந்ததிக்கு முன் உள்ள மூன்றாவது சந்ததி)
2. இடைக் காலகட்டம் (இன்றைய சந்ததிக்கு முன் உள்ள சந்ததி)
3. நடப்பு காலகட்டம் (இன்றைய சந்ததி)

**ஆரம்ப காலக்கட்டம்**

சினிமாக்கள், வானொலிகள், தொலைக்காட்சிகள் அளவெட்டிக் கிராமத்தில் புகாத காலகட்டத்தில், மக்கள் தமது பொழுதுபோக்கு வடிகாலாக கூத்து வடிவத்தில் நாடகக் கலையைக் கையாண்டார்கள். குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட ஓர் இடத்தில் கூத்துக்கள் நடைபெற்று

வந்துள்ளன. அளவெட்டியில் கூத்து நடைபெற்ற அந்த குறிப்பிட்ட இடம் "கூத்தஞ்சீமா" என்ற பெயரோடு இன்றும் அழைக்கப்பட்டு வருவதாக பலரும் நம்புகிறார்கள். மெழுகப்பட்ட வட்டமான மண்திட்டி மேடையாக, சூழ் வெளிச்சத்தில் நாடகம் - கூத்து என்ற வடிவத்தில் ஆடப்பட்டு வந்துள்ளது. இங்கு ஆட்டத்திற்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. அனுமாராட்டம், கரகாட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், பாம்பாட்டம், செம்பாட்டம் போன்ற ஆட்டங்களே அக்கால நாடக வடிவங்களாக அமைந்தன. கதைப் போக்கில்லாத ஆட்டங்களே நாடகம் என்ற வடிவத்தில் இடம்பெற்றன.

பின்னர் இது சிறிது வளர்ச்சியடைந்து பின்னணி இசையோடு சேர்ந்த ஆட்டமாக கூத்து வடிவம் பெற்றது. காமன்கூத்து, மதன காமராசன் கூத்து, கண்டி அரசன் கூத்து இவ்வகையானவை ஆகும். பின்னணி இசையாக உடுக்கு வாசிக்கப்பட்டு வந்துள்ளது. அம்மன், முருகன் ஆலய தெம்மாங்கு இசைப்பாடல்கள் ஆட்ட கூத்துக்களில் இடம்பெற்றதும் உண்டு. கூத்துக்களில் பங்குபற்றிய கலைஞர்கள் "கூத்தாடி" என்ற பட்டப்பெயரையும் சேர்த்து அழைக்கப்படும் வழக்கம் இருந்து வந்துள்ளது. கூத்தாடிகளின் அடுத்த சந்ததியான அவர்களுடைய பிள்ளைகள் "கூத்தாடியின் மகன்" "கூத்தாடியின் மகள்" என அழைக்கப்பட்டு வந்தமை, அளவெட்டியில் கூத்து என்ற வடிவத்தில் நாடகக்கலை இருந்துள்ளது என்பதை ஆதாரப்படுத்தப்படுகின்றது. இத்தகைய ஆட்டங்கள் அடுத்த சந்ததியினரிடம் காணப்பட்டமை, முற்சந்ததியினரால் இவை பரிமாறப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்துகின்றது. இக்கால கட்டத்தில் நாடகக்கலையை ஆட்டவடிவத்தில் ஆரம்பித்து வைத்தவர்களுடைய பெயர்கள் தேடலுக்கு அப்பாற்பட்டதாக இருப்பதால் இவர்களுடைய பெயர்ப்பட்டியலைப் பதிவு செய்ய முடியாமை துரதிருஷ்டமாகும்.

**இடைக் காலகட்டம்**

M.K.தியாகராசா பாகதவர், P.U.சின்னப்பா, M.L.வசந்தகுமாரி போன்ற இசை மேதைகளின் இசை மழை பொழியும் சினிமாப்படங்கள் காட்சிக்கு வந்த காலம் இக்கால கட்டமாகும். அவைகளின் தாக்கம் அளவெட்டிக்கிராம நாடகத்துறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஆட்டக் கூத்துக்கள் சிறிது சிறிதாக மறைந்து இசை நாடகங்களாகவும் இசைக் கூத்துக்களாகவும்

நாடகக்கலை வடிவம் மாறத்தொடங்கியது. புலகைகள் கொண்டு அமைக்கப்பட்ட திரைச்சீலைகள் கட்டப்பட்ட மேடைகளில் காஸ் விளக்குகளின் வெளிச்சத்தில், ஆர்மோனியம், மிருதங்கம், உடுக்கு பின்னணி இசையாக அமைய இசை நாடகங்களும், இசைக் கூத்துக்களும் மேடை ஏறத் தொடங்கின. அளவெட்டியின் பல்வேறு இடங்களில் நாடக மேடைகள் தோன்றின. ஒலிபெருக்கி பாவனைக்கு வராத காலமாகையினால் உச்ச சுருதியில், பிசிறு தட்டாமல் பாடக்கூடிய குரல்வளம் உடையவர்களே நாடக நடிகர்களாக பங்கேற்க முடிந்தது. வசனங்கள் குறைவாகவும், சுத்தமான கர்நாடக இசைப்பாடல்கள் நிறைந்ததாகவும் நாடகங்கள் அமைந்தன. இந்த வகையிலே புராண நாடகங்களாக "திருநீலகண்டர்", "சிறுத்தொண்டர்"இ "நந்தனார்", "வள்ளி திருமணம்" போன்றவையும், சரித்திர இசை நாடகங்களாக "அரிச்சந்திரா", "சத்தியவான் சாவித்திரி", "நல்லதங்காள்", "பனை அரசன்", "அல்லி அர்ச்சுனா", "கோவலன் கண்ணகி", "பவளக்கொடி", "பூதத்தம்பி" போன்றவையும் சிந்து நடைக்கூத்தாக காத்தவராயனும் மேடை ஏற்றப்பட்டு வந்துள்ளன.

அளவெட்டிக் கிராமத்தில் வாழ்ந்த சரவணை ஆசிரியர், பூலோகசுந்தரம் ஆசிரியர், பொன்னத்துரை ஆசிரியர், அப்புத்தரை, மு.கிருஷ்ணசாமி, வை.சிதம்பரப்பிள்ளை, அ.கணேசமூர்த்தி, இ.கந்தையா வல்லிபுரம், ஐ.குலசேகரம், தம்பிப்பிள்ளை போன்றவர்கள் நாடக நடிகர்களாகவும், இவர்களில் சிலர் அண்ணாவிமார்களாகவும் இருந்து நாடகக் கலையை வளர்த்து அமரராகி விட்டனர். சில நாடகங்களில் அயல் கிராமத்து கலைஞர்களான இணுவில் மாசிலாமணி, பொன்னாலை கிருஷ்ணர், விளான் செல்வராசா, கன்னிகா பரமேஸ்வரி, மல்லாகம் சின்னையா பாகவதர் போன்றோர் எமது கலைஞர்களுடன் சேர்ந்து சில நாடகப் பாத்திரங்களை ஏற்று நடித்து அளவெட்டியில் நாடகக் கலையை வளர்க்க உதவினர். நாடகங்களுக்கிடையில் கரகத்திலகம் ஐயாத்தரை அவர்களின் கரகாட்டம் தவறாது இடம்பெறுவது வழக்கம். இக்கால கட்டத்தில் நாடகங்களுக்குப் பின்னணி இசை வழங்கிய விளான் ஆர்மோனிய வித்துவான் நாகலிங்கம், அளவெட்டி பொன்னுச்சாமி, மிருதங்க வித்துவான் மல்லாகம் கோடை இடி ஆறுமுகம் போன்றவர்களை நாம் மறந்துவிட முடியாது.

இக்கால கட்டத்தில் அளவெட்டி கிழக்கில் காத்தவராயன் சிந்துநடைக்கூத்து பிரபல்யமான ஒன்றாக ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறுவது வழக்கமான ஒன்றாக இருந்து வந்துள்ளது. குாத்தவராயன் கூத்து தொடர்ந்து எட்டு மணித்தியாலயங்கள் நடைபெறும். நீண்ட நேர நாடகம் ஆனமையினாலும், நாடகம் முடிவு வரை பாடி ஆடி நடிக்கும் வகையைச் சேர்ந்ததாலும் ஒவ்வொரு நாடகப்பாத்திரத்தையும் இருவர் பங்கேற்று நடிப்பர். இந்நாடகத்தை அண்ணாவியராக இருந்து நெறிப்படுத்தியவர் "சின்னப்பர்" எனும் முதியவர். இச்சிந்து நடைக்கூத்தில் வேலர், சின்னத்தம்பி, கந்தர், செல்லையா, மூளி சின்னத்தம்பி, செல்லத்துரை, சின்னவியர், அப்புத்துரை, தம்பையா, மாரிமுத்து, இராசா, சோமசுந்தரம் ஆகியோர் முக்கிய நாடகப் பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார்கள். இதே கலைஞர்கள் நல்லதங்காள், அரிச்சந்திரா போன்ற இசை நாடகங்களையும் மேடை ஏற்றி உள்ளார்கள். இக்கலைஞர்களின் பிள்ளைகளில் பெற்றோரது நாடகப்பரம்பரை மரபணு சொரிந்துள்ளதால் அவர்களும் நாடகத்துறையில் ஈடுபாடு உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். இதனால் நாடகப்பரம்பரை ஒன்று அளவெட்டியில் தொடர்ந்து நிலை கொண்டு வருகிறது. இது அளவெட்டி நாடகத்துறைக்கு கிடைத்த ஒரு வரப்பிரசாதம் ஆகும். இக்காலகட்ட இறுதியில் வாழ்ந்த இரு கலைஞர்களை நாம் மறந்துவிட முடியாது. ஒருவர் அளவெட்டி வடக்கில் வாழ்ந்த ஆசிரியர் கதிரேசம்பிள்ளை அவர்கள் மற்றையவர் அளவெட்டி தெற்கில் வாழ்ந்த ஆசிரியர் அருட்கவி வினாசித்தம்பி அவர்கள் இவர்கள் இருவரும் நாடக நடிகர்களாக மட்டுமல்லாது, நாடக ஆக்க கர்த்தாக்களாகவும், நாடக வசன கர்த்தாக்களாகவும், நாடகப்பாடல் ஆசிரியர்களாகவும், நாடக இசையமைப்பாளர்களாகவும், நாடக இயக்குனர்களாகவும் இருந்து பல நாடகங்களை மேடை ஏற்றி அளவெட்டியின் நாடக்துறையில் தமது சுவடுகளை பதித்தவர்களாவர். இவர்களின் நாடகத்துறை பிரவேசத்தால் அளவெட்டிக் கிராமத்தின் வடக்கும் தெற்கும் நாடகத்துறையில் சோடை போகாது சமநிலையில் நிமிர்ந்து நின்றன.

நடப்புக் காலகட்டம்

இது தற்காலச் சந்ததியினருக்குரிய காலகட்டமாகும். இக்கால கட்ட ஆரம்பத்தில் சினிப்படங்களின் வருகையும், ஆதிக்கமும் அதிகரித்தமையால் இசை நாடகங்களின் வீரியம் குறைந்து வசனத்தை மூலதனமாகக் கொண்ட சமூக நாடகங்கள் வெளிவரத் தொடங்கின. மின்ஒளி, ஒலிபெருக்கி வசதிகள் இக்காலகட்டத்தில் கிடைத்தமை வசனங்களைப் பேசி நடிக்கும் நாடகப்பாணி உருவாகுவதற்கு துணை புரிந்தன. இந்த வகையில் அளவெட்டி கிழக்கில் “வடக்கும் தெற்கும், அத்தம்மா, சண்டியன் தம்பிப்பிள்ளை, நீர்க்குமிழ், மாறியது நெஞ்சம், மன்னிக்கமாட்டாயா, மறக்க முடியுமா” போன்ற சமூக நாடகங்கள் மேடை ஏறின. இந்நாடகங்களை ப.முருகையா என்பவர் எழுதி வசனம் அமைத்து நெறியாள்கை செய்துள்ளார். அளவெட்டி கிழக்கில் உள்ள இளைஞர்களான தேவராசா, சிவராசா, முருகானந்தம், பொன்னுத்துரை, தேவி, சவுந்தரராசன், சுகுணதாஸ், செல்வநாயகம், குலம், உதயன், காந்தன், கொபூர், கந்தசாமி, தவயோகராசா, சிறீ போன்றவர்கள் இந் நாடகங்களில் நாடகப் பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர். இவர்களில் தேவராசா, முருகானந்தம், சிவராசா போன்றவர்கள் இசை நாடகத்துறையிலும் புகழ் பெற்ற நடிகர்களாக விருதுகள் பெற்றுள்ளனர். தேவி, குலம், பொன்னுத்துரை போன்றவர்கள் நாடகத்துறையில் நிறைந்த அனுபவம் உள்ளவர்களாக இருந்தனர். இக்காலகட்ட பிற்பகுதியில் பெண்களும் நாடகத்துறையில் ஈடுபடத் தொடங்கினர். அந்த வகையில் கஜிதா, பத்மாதேவி, குயினா, நஜீரா, ஜெயவதனி போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

இக்கால கட்டத்தில் பாடசாலைகளிலும் விழாக் கொண்டாட்டங்களின் கலை நிகழ்ச்சிகளில் ஒரு அங்கமாக நாடகக்கலை வளர்ந்து வந்திருக்கிறது. ஆசிரியர்கள் வினாசித்தம்பி, நாகராசா, அருளம்பலம், சிவபாதம், செல்லையா, இராசசேகரம் போன்றவர்கள் மாணவர் மட்டத்தில் நாடகங்களை பயிற்றுவித்து மேடை ஏற்றி வந்துள்ளனர். ஆசிரியர் நாகராசா அவர்கள் இலங்கையில் தயாரிக்கப்பட்ட தமிழ் சினிமாப் படத்திலும் நடித்து அனுபவம் பெற்றுள்ளவர். “கட்டப்பொம்மன், சோக்கிறற்றீஸ், சாம்ராட் அசோகன் நக்கீரர், சிலம்பின் நாதம், இதயவாயில்” போன்றவை அவ்வாறு மேடை ஏற்றப்பட்ட சில நாடகங்களாகும். அத்தோடு பொது வேலை நிதி சேகரிப்புக்காகவும் நாடகங்கள் மேடை ஏற்றப்பட்டு வந்துள்ளன. அந்த வகையில் அருணோதயக்

கல்லூரியின் கட்டிட நிதிக்கான கதம்ப விழா நிகழ்வில் "வள்ளல் குமணன்" என்ற நாடகம் கவிஞர் கந்தவனம் அவர்களில் நெறியாள்கையில் மேடை ஏற்றப்பட்டது. கல்லூரி ஆசிரியர்களே எல்லா நாடகப் பாத்திரங்களையும் ஏற்று நடிக்கும் புதியமுறை அந்நாடகத்தில் புகுத்தப்பட்டமை நாடகத்துறையில் ஒரு சிறப்பம்சமாகும். அந்நாடகத்தில் அளவெட்டியைச் சேர்ந்த ஆசிரியர்களான அருட்கவி வினாசித்தம்பி, க.அருளம்பலம், V.இராசசேகரம், மு.செல்லையா, சி.சிவசுப்பிரமணியம், வே.ஆறுப்பிள்ளை போன்றோர் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர். ஆசிரியர் அருளம்பலம் ஆசிரியர் மட்டத்தில் மேடை ஏற்றப்பட்ட சிந்து நடைக்கூத்து காத்தவராயன் நாடகத்திலும் பங்கேற்று நடித்துள்ளார்.

அண்மைக் காலத்தில் கிராமிய இசைக்கும் இசை நாடகங்களுக்கும் பல்கலைக்கழக மட்டத்தில் முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியதையடுத்து, அளவெட்டியில் இசை நாடகங்களும்,சிந்து நடைக்கூத்தும் புத்துயிர் பெறத் தொடங்கி உள்ளன. அந்த வகையில் இக்கிராமத்தைச் சேர்ந்த இளம் நாடகக் கலைஞர்களான ஆசிரியர் விஜயபாஸ்கரன், ஆசிரியர் கிருபானந்தன் போன்றோர் பல்கலைக்கழக மட்டத்தில் பல இசை நாடகங்களில் நடித்து புகழ் பெற்ற நாடகக் கலைஞர்களாக வளர்ந்து வருகின்றனர்.

இவர்கள் பாடசாலை மட்டத்தில் மாணவர்களை இசை நாடகத்துறையில் பயிற்றுவித்து பழைமையான இக்கலையை அடுத்த சந்ததியினரும் பெற்று தேர்ச்சியடைய வாய்ப்பளித்து வருகின்றனர். அளவெட்டி வடக்கைச் சேர்ந்த சர்வேஸ்லரா, இந்திரன், சிவராசா, ஜெயரத்தினம், விநாயகலிங்கம், பார்வதி சிவபாதம் போன்றோர் இளம் கலைஞர்களாக நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டு வளர்ந்து வருகின்றனர். இக்கால கட்டத்தில் அளவெட்டி நாடகங்களுக்கெல்லாம் பின்னணி இசையாக மிருதங்கம் வாசித்து வந்த அளவெட்டியைச் சேர்ந்த பல்துறை மன்னன் ஐ.சிவபாதம், முருகையா போன்றோரது சேவை மதிப்பிட முடியாததாகும். அண்மைக்காலமாக கல்வித் திணைக்களம் பாடசாலை மட்டத்தில் நாடகப் போட்டிகளை நடாத்தி வருவதால், அளவெட்டி பாடசாலைகள் எல்லாம் மாணவர்களுக்கு சிறுவர் நாடகம், இசை நாடகம், சமூக நாடகம் போன்றவற்றைப் பயிற்றுவித்து போட்டிகளுக்கு அனுப்பி வருகின்றன.

இதனால் நாடகக்கலை அளவெட்டியின் அடுத்த சந்ததிக்கும் பகிரப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இறுதியாக, அளவெட்டியில் இருந்து புலம் பெயர்ந்து வாழும் சிலர் தாம் வாழும் நாடுகளில் நாடகக்கலையை வளர்த்து வரும் செய்தி இத்தொகுப்பில் பதியப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அந்த வகையில் நோர்வேயில் பார்த்தீபனும், டென்மார்க்கில் ஆதவனும், ஜேர்மனியில் உதயனும், பிரான்சில் மனோகரனும் வேறு பல நாடுகளில் இன்னும் பலரும் உள்ளனர். இவை எல்லாம் அளவெட்டியின் நாடகக்கலை வீரியத்தை புலம்படுத்தி நிற்கும் என்பதில் ஐயமில்லை. அளவெட்டியைச் சேர்ந்த நாடகத்துறையில் ஈடுபாடுகள் கொண்ட, எமது தேடலுக்குள் அகப்படாது தவறியவர்களும், இறை பதமடைந்தவர்களும் பலர் இருக்கலாம். அவர்களையும் இத்தொகுப்பில் நினைவு கூறுகின்றேன். கலைத்துறையை வளர்ப்போம் நல்ல மனங்களை உருவாக்குவோம்

எங்கே தங்க விரும்புகிறீர்கள் என்று இலண்டன் தோழர்கள் கேட்டபோது எந்தவிடுதி நூலகத்திற்கு அருகில் உள்ளது எனக் கேட்டராம்

– டாக்டர் அம்பேத்கர் –

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக்கொள்ளும் போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டொலருக்குப் புத்தகம் வாங்குவாராம்

– சார்லி சாப்ளின் –

## வில்லிசை - "வீட்டு நூலகம்"

பிரதியாக்கம்
க.சௌந்தரராஜ சர்மா
அளவெட்டி.

### இறை துதி

பாடகர் குழு : "ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு"

முந்தி முந்தி விநாயகரே முக்கண்ணன் தன்மகனே
கந்தனுக்கு முன்பிறந்த கணபதியே காருமையா
ஆயி மகமாயி அம்மா ஆயிரங் கண்ணுடையாள்
சூலி திரிசூலி சூழ்வினைகள் தீர்த்தருள்வாய்...

பாடகர் : தந்தணத் தோம் என்று சொல்லியே – வில்லினில்பாட
வந்தருள்வாய் கணபதியே – ஆமா வில்லினில்பாட
வந்தருள்வாய் கணபதியே.
தந்தணத் தோம் என்று சொல்லியே – வில்லினில்பாட
வந்தருள்வாய் கலைமகளே – ஆமா வில்லினில்பாட
வந்தருள்வாய் கலைமகளே.
தாள சந்தத்தோடு ஏழு சந்தந்தரு பாடலோடே
ஆன பம்பை உறுமி தக்கை – துந்துபியோடு
அத்தனையும் மேளத்தோடே – ஆமா
அத்தனையும் மேளத்தோடே...

நாடெங்கும் நடந்திட்ட வாசிப்பு மாதத்தில்
நூலகத்தின் செயற்பாடாய் - அளவெட்டி
நூலகத்தின் செயற்பாடாய்
வாசிப்பை மேம்படுத்தி – ஆமா
வாசிப்பை மேம்படுத்தி
ஊரெல்லாம் விரைந்தே நூலகவளம் பெருக்கி
பாடுபட்டார்; நிறைவு நாளில்

நிகழ்த்துகின்றார் இந்நிகழ்வை – ஆமா
நிகழ்த்துகின்றார் இந்நிகழ்வை

வீட்டுக்கொரு நூலகம் வாசிக்க வாய்ப்பளிக்கும்
தேட்டமிதைத் தெரிந்தே யோசிக்க வில்லிசையாய்
பாடிடவே நாமும் வந்தோம் - ஆமா
பாடிடவே நாமும் வந்தோம்
வந்திருக்கும் பெரியோரே – ஆமா
வாஞ்சையுள்ள சபையோரே
வந்தனம் தந்தோமையா...
வாழ்த்துக்கள் தாருமையா...

பாடகர் உரை : வலிகாமம் வடக்கு, வளமார் பிரதேசம் இனிதாக இலங்கி ஓங்கும் இப்பிரதேச சபையினிலே மாண்புமிகு மல்லாகம், மதித்திடும் அளவெட்டிபேணரிய பெருமைமிகு பெரும்பதியாம் இப்பதியில் தேனினிய நூல்களைத்தேட்டமாய் கொண்டிருக்கும் நூலகமாம்... ஆமா நூலகமாம் அளவெட்டி நூலக அனைத்துலகச் சிறுவர்தினம் ஆக்குகின்ற வாசிப்பு மாதம் நிறை நிகழ்வினிலே கூட்டிசையாய் பாட்டிசைக்கும் கோலமிகு திருநாளில்...

உடன்பாடுபவர் : ஆமா கோலமிகு திருநாளில்... ஐயா ஒரு சந்தேகம்...

பாடகர் : பாண்டிய மன்னனுக்கு வந்தமாதிரி சந்தேகமோ... என்ன, என்ன..

உடன்பாடுபவர் : இல்லை.. அளவெட்டி அளவெட்டி என்று பாடினீங்க.. அது பெரிய... பெரிய... ஊரோ... ஐயா...

பாடகர் : அடடா... அடடா... என்ன சந்தேகம்பார்... பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் எல்லோருக்கும் பெரிதுதான்; பெருமைதான்; பேறு தான்...
பாவலரும் நாவலரும் பிறந்த பொன்னாடு பக்தர்களும் முத்தர்களும் பொலிந்ததிருநாடு வீரர்களும் தீரர்களும் திகழ்ந்த பெருநாடு

விகடகவி அருட்கவியும் வாழ்ந்திருந்த நாடு; மகாகவியும்
பண்டிதரும் மலர்ந்த நன்னாடு சித்தர்களும் செல்வர்களும்
சிறந்த இந்நாடு சிவயோக சுவாமிகளும் சீடர்களும்
ஏற்றதிருநாடு சிந்தனைச் செல்வர் கைலாசபதி ஜெனித்த
திருநாடு செந்தமிழன் பொன்னம்பலம் சேவைசெய்த நாடு
மாண்புறு மயில்வாகனம் மலர்ந்த பொன்னாடு
ஓவியங்கள் காவியங்கள் உதித்த திருநாடு நாதஇசை
மேள இசை பண்ணிசைக்கும் நாடு கலைபயில் கூடங்களும்
கல்விதரு சாலைகளும்
தொன்மைமிகு திருப்பதிகள் திகழ்ந்து வரும் நாடுவளம்
பெருக்கும் வழுக்கியோடு விளைவு தரும் வயல் நிலங்கள்
எங்குமே வாய்த்த திருநாடு நானொரு நொடி
சொல்லுகிறேன்... பதில் சொல்கிறாயா...
வாழும் இந்த ஊரின் பெயர்... என்ன?
ஆமா... வாழும் இந்த ஊரின் பெயர் அளவெட்டி ஆமே...
அளவெட்டி ஆமே...

உடன்பாடுபவர் : நன்றாகச் சொன்னீர்கள்... கேள்விப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு நீங்கள் கூப்பிட்டபடியாலே வந்து பார்த்தேன். ஆமா பெரிய ஊர் தான்... பெரிய பெரிய அறிஞர்கள், அறிவாளிகள், கவிஞர்கள், கலைஞர்கள், விஞ்ஞானிகள், அருமை... அருமை...

பாடகர் : இவ்வாறு புலமைமிக்கவர்கள் வாழ்ந்தார்கள்; அரிய பல நூல்களை கற்றார்கள்; அவ்வாறே பல்வேறு நூல்களை ஆக்கினார்கள். பொது இடங்களிலேயும் தங்கள் இல்லங்களிலும் நல்ல பல நூல்களை வைத்திருந்தார்கள். மற்றவருக்கும் கொடுத்தார்கள்; கற்பித்தார்கள்... இங்கு என்றில்லை ஒவ்வொரு ஊர்களிலேயும் இவ்விதமான நூல் அறிந்த புலவோர் கற்றோர் நிறைந்திருந்தார்கள்.

உடன்பாடுபவர் : நூல், நூல் என்று நீங்கள் சொல்வது இந்த பட்டம் விடும் நூல் இல்லையா?

பாடகர் : தம்பி பட்டம் விடுகின்ற நூல் சரிதான்... இப்போது நாம் பார்க்கின்ற அச்சிட்ட புத்தகங்கள், பொத்தகம் என்றும் சொல்வார்கள்... நூல் என்றும் சொல்வார்கள். புதிய கருத்துக்களை தன்னுள் அடக்கி வைத்திருப்பவை புத் + அகம் - புத்தகம். இப்போ நூறு, இருநூறு வருஷங்களுக்கு முந்தி வரை இவ்வளவு புத்தகம் கிடையாது. ஏடுகள், சுவடிகள் என்று பனையோலை, தாமரை இலை, மரப்பட்டை இப்படி இந்தியா, இலங்கை நாடுகளிலே எழுதினார்கள். இப்படி இருக்கும்...பனையோலை... இதிலே கூரான எழுத்தாணி கொண்டு எழுதுவார்கள்... சுவடாக எழுத்து இருக்கும் சுவடி... அதே எழுத்தை கல்லிலே வெட்டினால் கல்வெட்டு...

உடன்பாடுபவர் : ஓ...ஓ... எனக்கு தெரியும்... என் அப்புவுக்கு அடித்த கல்வெட்டு வீட்டிலே அதிகமா இருக்கு... அதுதானே செத்தவர்களுக்கு அடிக்கிறது...

பாடகர் : தம்பி... பொறு.. பொறு... அந்தக் கல்வெட்டு ஆத்மசாந்திப் பாடல்கள் சரமகவி... என்பார்கள்... கல்வெட்டு பெரிய மன்னர்கள், பிரதானிகள், கொடைவள்ளல்கள் தங்களுடைய பெருமைகளை, சாதனைகளை, கீர்த்திகளை கல்லிலே வெட்டி விடுவார்கள். அதுதான் கல்வெட்டு. இது இல்லை. குழம்பாதே... பனையோலை எங்களூரிலே பாவித்தார்கள்.. கிரேக்கம் போன்ற நாடுகளிலே பைப்பிரஸ் புல்லிலே அதை எழுதினார்கள்... இந்த ஏடுகளைச் சுற்றி ஒரு நூல் இருக்குதல்லவா.. இந்த நூல் என்ற சொல்இந்த ஏட்டுக்கு வந்தது. பிற்பாடு நூல் என்பது காகிதம் கண்டுபிடித்து, அச்சிடும் முறை கண்டுபிடித்து... அச்சிடும் இயந்திரம் கண்டுபிடித்து இப்போ500 – 600 வருடங்களுக்குள் தான் இந்த புத்தகம் உண்டாகியது...

உடன்பாடுபவர் : அப்போ இப்போது பேஸ்புக் என்று சொல்கிறார்களே... முகத்தை எல்லாம் புத்தகம் மாதிரி ஆக்கியோ?

பாடகர் : அது வேறு விஷயம்... நாளைக்கு வா... சொல்கிறேன்.

உடன்பாடுபவர் : புத்தகத்தைப் படித்துப் படித்து அந்தக் காலத்திலே எல்லோரும் பண்டிதர்களாக வந்து விட்டார்களா...

பாடகர் : அவ்வாறு தொகையாக புத்தகம் கிடைக்காது... ஆசிரியர்கள் குருகுலம் என்று ஒரு சில இடங்களில் வைத்திருந்தார்கள். கோயில்களில், மடங்களில், விகாரைகளில் நூல்களை சேகரித்து வைத்தார்கள், படித்தார்கள்.

உடன்பாடுபவர் : அப்போ... ஒரு சிலர் தான் படிக்க முடியும் என்ன. இப்போது மாதிரி எல்லோரும் படிக்க முடியாதபடியால் தான் அந்தக் காலத்தில படிக்காதவை கூட என்ன....

பாடகர் : இருக்கலாம்... ஆனாலும் கிராமங்களிலே, கோவில்களிலே எழுதிப் படிக்காத போதிலும் பாடிப் படித்தார்கள்; இசையால், ஒலியால், நடிப்பால் படித்தார்கள் பாடமாக்கி மனனம் செய்து எவ்வளவோ இலக்கியங்களைப் படைத்திருக்கிறார்கள். வீட்டிலே இருக்கிற மூத்த
தலைமுறையினர் அனுபவத்தால்கண்ட பல படிப்புக்கள், மருந்துகள், கலைகள், விவசாய முறைகள் தலைமுறை தலைமுறையாக குடும்பச்
சொத்தாக சொல்லி வந்தார்கள். சிலர் இப்போதும் அப்படி இருக்கிறார்கள்... அனுபவப்படிப்பு... பாட்டிமார் தாத்தாமார் இருக்கிறார்களல்லவா...

உடன்பாடுபவர் : ஆமா... ஒவ்வொரு வீட்டிலேயும் வயது போனவர்கள் இருக்கிறார்கள தானே. இங்க சிவபூமியிலேயும்... இருக்கிறார்கள்...
பாடகர் : (பாடல்) தாத்தாபாட்டி கதைகள் சொல்லியது
அந்தக்காலம் - ஆமா... அந்தக்காலம் தொல்லைக்காட்சி சீரியல்
பார்ப்பது இந்தக்காலம் - ஆமா... இந்தக்காலம் கோயில்
குளங்கள் கூட்டிச் சென்றது அந்தக்காலம் - ஆமா... அந்தக்காலம்

தெருவில் நின்றே வணங்கிச் செல்வது இந்தக்காலம் -
ஆமா...இந்தக்காலம்
பண்ணும் பரதமும் பாடிப் பழகியது அந்தக்காலம் - ஆமா...
அந்தக்காலம் மானும் மயிலும் ஆடப் பார்ப்பது இந்தக்காலம் -
ஆமா... இந்தக்காலம் கூழும் கஞ்சியும் கூடிக் குடித்தது
அந்தக்காலம் - ஆமா... அந்தக்காலம் பாணை ஒருகடி கடித்துப்
பறப்பது இந்தக்காலம் - ஆமா... இந்தக்காலம் பெரியஎழுத்துப்
புராணங்கள் படித்தது அந்தக்காலம் -ஆமா... அந்தக்காலம்

மவுஸும் போனும் கையில் பிடிப்பது இந்தக்காலம் - ஆமா...

இந்தக்காலம்

கூட்டுக் குடும்பம் அந்தக்காலம்
குட்டிக் குடும்பம் இந்தக்காலம்
கூடிக் களித்தது அந்தக்காலம்
மூடி மறைப்பது இந்தக்காலம் எதையும் மூடி மறைப்பது
இந்தக்காலம்

உடன்பாடுபவர் : நூல்கள், புத்தகங்கள் எல்லாம் வலுவிபரமா
சொல்லிவிட்டீர்கள்.. என் சின்ன மண்டைக்குள் நன்றாகப்
புகுந்தது... நூலகம் என்றால்... அதையும் ஒரு தரம்
சொல்லுங்களேன்...

பாடகர் : தம்பி... கேட்டுக்கொள்...
செந்தமிழ் இன்பம் செறிந்திட – நூல்கள்
சேர்ப்பதும் நூலகமே – தமிழ்
சந்தம் விளங்கிடச் சாத்திர நூல்கள்
தருவதும் நூலகமே... சிந்தையின் உணர்வு அறிவியலாகச்
செழிப்பதும் நூலகமே - இதை
எந்தையர் நாட்டின் அறிவகம் என்றே
இயம்பியே வணங்கேனோ...

உடன்பாடுபவர் : புத்தகங்கள் சரியான விலை விற்கிறது... வாங்க இயலாது...

பாடகர் : அதற்குத் தானே... உள்ளூராட்சி சபைகள் ஊருக்கு ஊர் இலவசமான சேவையாக, பயன்தரும் சேவையாக, எல்லோருக்கும் சமத்துவமாக செய்யும் நூலக சேவை இருக்கிதே. அங்கத்தவராக சேர அதிகம் பிரச்சினையும் இல்லை. சிறுவர்களுக்கு, பாடசாலை மாணவர்களுக்கு சலுகைகள் பல செய்கிறார்கள். பயன்படுத்தி பாருங்கள்... வாசிப்புப் பழக்கம் குழந்தைப் பருவத்திலே – வயிற்றில் சிசுவாக இருக்கும்போ தொடங்கி வாழ்நாள் இறுதிவரை பயன் செய்வது...

உடன்பாடுபவர் : எப்படி... எப்படி...

பாடகர் : (பாடல்)

சிறுவர் வாசிப்புச் சிறந்திடவே
சிந்தித்துச் செயற்படுவோம்
பெரியோர் பெற்றோர் கூடியிங்கு
பேணும் நூலகம் நாம்சமைப்போம்
அறிவாம் ஒளிச்சுடரை ஏற்றி
அகில வாழ்வை அழகாக்குவோம்
நிறைவான மனிதரென உயர்
நேயத்தோடு நாம் உழைப்போம்.
வீட்டு நூலகத்தை நாம்
விரைந்து எங்கும் உருவாக்குவோம்
தேட்டமான நூல்களை தேடி
தினமும் வாசித்து இன்புறுவோம்.
காட்டும் எம் அக்கறையால் வருங்
காலத்தை இனிதாக்குவோம்...

உடன்பாடுபவர் : நூல் என்றால் என்ன – நூலகம் என்றால் என்ன... என்று சொன்னீர்கள்- இப்போது வாசிப்பு என்கிறீர்களே....

பாடகர் : கற்றறிந்த பெரியோர்கள் எவ்வளவு நூல்களை எழுதியிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் கற்க எமக்கு வாழ்நாள் போதாது. " கற்க கசடற" என்று சொல்வார்கள். "கல்வி கரையில... கற்பவர் நாள்சில" என்று கூறுவார்கள்.

எல்லாம் நல்ல புத்தகங்களில்லை. நூல்கள் கடல் போல. அவ்வளவு தொகையாக இருக்கின்றன. கடலில் மூழ்கி ஒருகையில் அள்ளிவந்து பார்த்தால் கூழாங்கற்களும் இருக்கும்; சோகி சிப்பிகளும் இருக்கும். முத்துக்களும் இருக்கும். நல்ல முத்துக்களைப் போன்ற நூல்களும் இப்படித்தான்.நல்ல சிந்தனைகளை ஏற்படுத்தும் நூல்களைத் தேடி வாசிக்க வேண்டும்.ஆரோக்கியமான கருத்துக்கள் ஒருவனில் மாற்றத்தை – முன்னேற்றத்தை ஏற்படுத்துவனவாக இருக்க வேண்டும். இதையே வளமான வாசிப்பு என்கிறோம். ஒவ்வொரு நாளும் அரைமணிநேரமாகிலும் வாசிக்க வேண்டும். தொடர்ந்து வாசிக்க தீவிர வாசிப்போனாக மாறமுடியும்.

வாசிப்பை மறக்காத மனம் வேண்டுமே
வாசிப்பை நேசிக்கும் மனம் வேண்டுமே நல்ல நூல்கள்;
நல்ல நண்பர் - அதை நீ உணர; நான் உரைத்தேன் -
கேளு (வாசிப்பை)

பொழுதெல்லாம் நன்றான பொழுதாக உருவாக
விழுதாக வேராக நூல் ஆகுமே
கருத்தோடு கற்போர்க்குக் கதியாக நிதியாக
விருந்தாக மருந்தாக நூல் ஆகுமே
அறிவோடு. உயர்வாகி தெளிவோடு சிந்திக்க
நிறைவான ஞானத்தின் நிலை வேணுமே
திறனோடு உருவாகி தேசத்தின் உயிராகி
அறவாழ்வு வாழ்ந்திட்டால் அது போதுமே
அதை நீயே அறிவாயே... (வாசிப்பை)

உடன்பாடுபவர் : அப்போ வாசிப்புப் பழக்கத்தை சிறுவர் மத்தியில் பரவலாக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பள்ளிக்கூடம், திரும்ப வந்து ரியுசன்...பிறகு தனிப்பட்ட படிப்பு என்று சிறுவர்கள் ஓடித்திரிவதால் நேரம் கிடைக்காதே....

பாடகர் : இதெல்லாம் இந்தக்காலத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள்... அதன் விளைவு என்ன என்பதை பல இடங்களிலும் பார்த்து கேட்டு இருப்பீர்கள். நானும் திரும்ப கூறத் தேவையில்லை. வீட்டுச் சூழலில் ஒரு பிள்ளை பெறும் கல்வியும் அனுபவமுமே வாழ்நாள் முழுவதும் உதவுகின்றது. நல்ல நூல்களை, நல்ல இசையை கருவில் இருக்கும் போதே கேட்கும் குழந்தை பிற்காலத்தில் சாதிக்கக் கூடியவர்களாக திறனுடையவர்களாக விளங்குவதைப் பற்றி அறிஞர்கள் வெளிப்படுத்தியுள்ளார்கள். ஐந்து வயதில் வளையாதது ஐம்பது வயதில் வளையாது என்று ஊரிலே கூறுவார்கள். ஐந்து வயதுப் பிள்ளையில் - விளையும் பயிர் - அதிலிருந்தே அதன் பிற்காலத்தைக் கல்வியாளர்கள்கூறிவிடுகின்றார்கள். குழந்தையுடன் நல்லவற்றைக் கதைக்கவேண்டு சித்திரப் படங்கள் உள்ள நூல்கள், வர்ணமயமான நூல்கள் அவர்களைக் கவரும். பத்திரிகையை குடும்பத்தவர் யாவரும் படிக்க வேண்டும். உரத்து வாசிக்கப் பழக்க வேண்டும். புதிய சொற்களுக்கு கருத்தை தெரிய வைத்தால், அத்தோடு அவர்களாகவே புதியவற்றை புரிந்து கொள்ள, மனனம் செய்ய உதவவேண்டும்.

நூல்களை வாசிப்பதால் - நாளும்
நூல்களை வாசிப்பதால – எல்லோரும்
நூல்களை வாசிப்பதால – எல்லோரும்
நல்லறிவு உயரும்; நல்லன விளையும்; சிந்தனை சிறந்தோங்கும்

(நூல்களை)

பள்ளியில் பாடம் படிப்பவரோ – கற்று
பல்கலை பட்டம் கற்பவரோ
வீட்டினில் இருந்து பல்தொழில் புரிந்து
வித்தகனாக முயல்பவரோ – எவரும் (நூல்களை)

உடன்பாடுபவர் : எனக்கு இப்போதான் வெளிச்சம் மாதிரி விசயம் விளங்குகிறது.

பாடகர் : பள்ளிப் படிப்பைத்தானே திரும்ப ரியூசனிலேயும் படிக்கிறார்கள். இது வினாவுக்கு விடை எழுத பயிற்சி கொடுக்கும் இடம். என்ன... ‘ என்ன..

உடன்பாடுபவர் : நானும் அந்தக் காலத்திலிருந்து வாசிக்கப் பழகி

இருக்கலாம். காலம் பிந்திப் போய்விட்டதே.

பாடகர் : இதைத்தான் "அறிவு வாறது" என்பது. நல்லறிவு வந்திருக்கிறது. நீரளவே ஆகுமாம் நீராம்பல்... தான் கற்ற நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு. எப்போதும் படிக்கலாம். சரஸ்வதிதேவி இப்போதும் படிக்கிறா. பொது நூலகம் பொதுமக்களின் பல்கலைக்கழகம். அதனை பயன்படுத்தப் பாருங்கள். எல்லாவற்றையும் படியுங்கள்.

உடன்பாடுபவர் : அறிவுக்கு நூலும் நூலகமும் உதவும். அதுசரி எல்லாம்

அறிவு தானே.

பாடகர் : அதேதான். சிறுவர்களின் நலனில் ஆரம்பம் முதலே அக்கறை எடுக்க வேண்டும். பொதுப் பரீட்சைகளிலும் வேலைவாய்ப்புக்களின் போது நுண்ணறிவு, பொதுவிவேகம், பொதுஅறிவு என பரீட்சிப்பார்கள். பலதையும் கற்றால் இவை சாத்தியமாகும். அதற்கு வீட்டில் நூல்கள் இருந்தால் வாசிக்கப் பழகுவது சுலபம். பின்பு நூலகத்தை பாவிக்கலாம். வீட்டு நூலகம், பாடசாலை நூலகம், பொது நூலகம், இவற்றின் பயன்பாடு சிறுவர் உயரவுக்கு அவசியம்... அவசியம்... அவசியம்...

(பாடல்)

வாழியவே பல்லாண்டு காலம் சிறுவர்கள் வாசித்து வாழியவே

வாழியவே பல்லாண்டு காலம் பிரதேச சபையினர் வாழியவே

வாழியவே பல்லாண்டு காலம் வில்லிசை பார்த்தோர் வாழியவே

வாழிய வாழிய வாழிய வாழியவே....

ஆ... ஆ.... ஆ...... ஆ.........

-நிறைவு-



THURKKA@MALLAKAM